Registered as a Newspaper

PUMP with Standard Accessories Select



NEWTONE Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நீயூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ பங்குனி மீ 19 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 சஃபா பிறை 23 (01-04-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 48

# ஆஸ்பத்திரிகளில் மீளவும் தனிப்பட்ட சிகிச்சை முறை

## நிபுணர்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து அரசாங்கம் ஆராய்கிறது

கொழும்பு, ஏப்ரல் 1

**அரசாங்க வைத்திய நிபுணர்கள், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வைத்தே, தனிப்பட்ட முறையில், நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துச் சுகாதார அமைச்சு தீவிர மாக ஆராய்ந்து வருகிறது.**

இந்த முறை பல ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறையில் இருந்தது. பின்னர் அது நிறுத்தப்பட்டு, வைத்திய நிபுணர்களின் சிகிச்சையை வழிப்படுத்தும் முறை கொண்டுவரப் பட்டது.

காலக்கிரமத்தில் இரண்டுமே முற்ருக நிறுத்தப்பட்டன. எனினும் ஐ. தே. க அரசாங்கம் 1977 இல் பதவிக்கு வந்த பின்னர், வெளியில் நிபுணர்களிடம் ஆலோசனை பெற்று ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் வழிப்படுத்தல் முறை மீண்டும் அமுலுக்கு வந்து நடைமுறையில் உள்ளது.

இப்போது ஆஸ்பத்திரியில் வைத்தே வைத்திய நிபுணர்கள் ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கும் முறையை மீண்டும் கொண்டுவர ஆலோசிக்கப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் பணம் செலுத்தி சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்களுக்கு ஆஸ்பத்திரியில் வைத்தே வைத்திய நிபுணர்களைச் சந்திப்பதற்கு வசதியாகவும் அதே சமயம் வைத்திய நிபுணர்களின் சேவையை அரசு ஆஸ்பத்திரிகளும் பெற்றுக் கொள்ளவும் உத்தேச திட்டம் இடமளிக்கிறது.

(அ-எ)

## புதுவருடத்தையொட்டி வடக்குக்கு விசேட ரயில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு வட பகுதிக்கு விசேட ரயில் சேவை நடத்தப்படலாம் என அறியவருகிறது.

ரயில்வேத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வாரம் ஐந்து நாட்கள் ரயில் சேவையை நடத்துவது குறித்தும் இப்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-10)

## அமெரிக்கத் தூதுவர் மாத இறுதியில் வருகிறுர்

யாழ்ப்பாணம், ஏப் 1

கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஸ்தாபகர் ''டானியர் பூலரின்'' பிறந்த தின நினைவுக் கொண்டாட்டங்களிலும், யாழ். மாநகர சபைக்கு நூல்களை வழங்கும் வைபவத்திலும் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் விசேட ஆணையாளரும், கிளிநொச்சி அரசாங்க அதிபருமான திரு. அன்ரன் அல்பிரட்டிடம் அமெரிக்கத் தூதுவர் நூல்களைக் கையளிப்பார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஸ்தாபகர் ''டானியர் பூலரின்'' 200 ஆவது பிறந்ததின நினைவுக் கொண்டாட்டங்கள் கல்லூரியில் ஒரு வாரத்திற்கு நடைபெறவுள்ளன.

(ஒ-5)

### இது ஏப்ரல் முட்டாள்தின செய்தி அல்ல!

## பன்றிகளைப் பராமரிக்கும் அமைச்சர் அத்துலத்முதலி!

கொழும்பு, ஏப்ரல் 1

முன்னர் பிரசித்தம் பெற்ற பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, இப்போது பன்றிகளையும், மாடுகளையும் பராமரித்து வருகிறுராம்!

இதனை ஏப்ரல் முட்டாள் தினச் செய்தியாக நினைத்துவிடாதீர்கள்.

இந்த விடயம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதென்றுல் பாருங்களேன்!

நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டம் புதன்கிழமை 45 அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அன்று இடம்பெற்ற இறுதி நாள் விவாதத்தில்

[4ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வந்த பஸ்ஸில் ...ப்பு பகுதியில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப் 1

...ழும்பிலிருந்து யாழ்ப்...ம் நோக்கி வந்த தனி பஸ் ஒன்று, கடந்த ...ழக்கிழமை நள்ளிரவு ...புக்கு அண்மித்த பத்துறு என்னும் இடத்தில் வழி...க்கப்பட்டு கொள்ளையடிக்...ட்டது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

இரவு சுமார் 10 மணிக்கு பஸ் கொழும்பில் இருந்து புறப்பட்டது. குறிப்பிட்ட இடத்தில் பஸ் இரவு 12. 45 மணிக்கு சென்றுகொண்டிருந்தது. அப்போது பாலம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ...கொலைகளை நிறுத்துங்கள்; ...ரிந்துணர்வுக்கு வாருங்கள் என்கிறது ஈ.ஜ. முன்னணி

யாழ்ப்பாணம், ஏப் 1

தமிழ்ப் பகுதிகளில் நடத்...ப்படும் படுகொலைகளை உட...டியாக நிறுத்துமாறும், ...கொலைகளை நிறுத்துவதுசம்பந்...மாக ஒரு புரிந்துணர்வுக்கு ...ருமாறும், ஈழவர் ஜனநாயக ...ன்னணி சம்பந்தப்பட்ட ...னைவருக்கும் வேண்டுகோள் ...டுத்துள்ளது.

இது சம்பந்தமாக ஈ. ஜ. ...ன்னணி வெளியிட்ட அறிக்...யில் தெரிவிக்கப்பட்டிருப்ப...வது:-

...அண்மைக் காலமாக எமது ...திகளில் அரங்கேறிவரும் ...காடர்ச்சியான, குரூரத்தன மான, அவரவர் மனவக்கிரங்களையும், பிறழ்ச்சிகளையும் வெளிக்காட்டும் வகையிலமையும், படுகொலைகள் குறித்து எமது ஆழ்ந்த அதிருப்தியையும் பலத்தகண்டனத்தையும் மட்டுமல்லாமல், பெருத்த மனத்துயரையும் இங்குவெளிப்படுத்த முனைகிறேம். இப்படுகொலைகளைப் பார்த்து திகைத்து,ஏங்கிப் பரிதவிக்கும் எமது மக்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றேம்.

வெகு மர்மமாகவும், திட்டமிட்டும், திகிலூட்டும் வகையிலும் நடாத்தப்படும் இப்படு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ப. நோ. கூ. சங்க முகாமையாளர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப் 1

கட்டைப்பராய் வாசியான ப. நோ. கூ. சங்க முகாமையாளர் ஒருவர் நேற்று மாலை கல்வியங்காடு இராச வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சந்திரன் என்றழைக்கப்படும் செல்லையா தவலோக நாதன் (வயது 40) என்பவரே கொலையுண்டவராவார்.

நீர்வேலிப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் இருபாலைக் கிளையில் முகாமையாளராக இவர் கடமையாற்றி வந்தார்.

(ஒ-9-10)

## சுவர் விழுந்து ஜவான் மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மித்த சேதமடைந்த மாநகர சபைக் கட்டடத்தில் துப்புரவு வேலையில் ஈடுபட்டிருந்த இந்திய ஜவான் ஒருவர் நேற்று மரணமானுர்.

சேதமடைந்திருந்த மேற்படி கட்டடத்தின் சுவர் இடிந்து விழுந்தே ஜவான் மரணமானுர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)

### சுபநேரம்

01 - 04 - 1989

பங்குனி - 19 சனிக்கிழமை

சுபநேரம்.

03 - 11 முதல் 04 - 41 வரை ராகுகாலம்.

09 - 11 முதல் 10 - 41 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## வல்வையில் வியாழனன்று பல இடங்களில் மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

கடந்த வியாழக்கிழமை வல்வெட்டித்துறை தெணியம்பை சாராயத்தவறணையடி ஒழுங்கைப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது.

இந்த மோதல்களின் போது ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

அந்தப் பகுதியில் சில இடங்களில் இரத்தம் வெள்ளமாகத் தேங்கிக் காணப்பட்டதாகவும் எனினும் உயிர்ச் சேதங்கள் பற்றி ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் தெரியவில்லை எனவும் அங்கிருந்து வந்தவர்கள் கூறுகின்றனர்.

வல்வெட்டி, கொத்தியால, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற பகுதிகளிலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. அங்கெல்லாம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்டன.

(ஒ-5-160)

### ஏமாறுதீர்கள்!

வாசகர்களே! இன்று நீங்கள் மிகவும் கவனமாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டிய நாள்!

உங்களில் பலரும் இதனை நினைவில் வைத்திருப்பீர்கள் என்றே நம்புகின்றேம். எனினும் உங்களுக்கு உதவுவது எங்கள் பணி அல்லவா?

இன்றைய தினம் உங்களைப் பலரும் ஏமாற்றப் பார்ப்பார்கள். உங்கள் ஆத்ம நண்பர்களும் இந்த வேண்டாத முயற்சியில் இறங்குவார்கள், அதனுல் கவனமாக இருங்கள்,விழிப்பாக இருங்கள் என்று எச்சரிக்கின்றேம்.

பீடிகை நீள வேண்டாமே! உங்களை இன்று முட்டாள்களாக்குவதற்கு திகிலான பல பொய்களைச் சொல்லி ஏமாற்ற முயல்வார்கள்!

இன்று ஏப்ரல் முதலாம் திகதி — ஏப்ரல் முட்டாள் தினம் என்பதால்!! ஏமாறுதீர்கள், முட்டாளாகி விடாதீர்கள்!!!

## இரு இளைஞர் மரணம்

வல்வெட்டித்துறை, ஏப். 1

வல்வெட்டித்துறையின் பல பகுதிகளும் கடந்த புதன் கிழமை மாலை திடீரென சுற்றி வளைக்கப்பட்டன.

தேடுதலின் போது பரவலாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. ஒரு வீட்டைச் சுற்றி வளைத்த போது அங்கிருந்த இரு இளைஞர்கள் சயனைட் அருந்தி மரணமாகினர்.

மரணமானவர்களில் ஒருவர் நெடிய காட்டைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஸ்ரீதரன் [சதீஸ்] என அடையாளம் காணப்பட்டது. அடுத்தவர் அடையாளம் காணப்படவில்லை.

இவர்கள் இருவரது இறுதிச் சடங்கில் பெரும் எண்ணிக்கையானேர் கலந்து கொண்டனர்.

[ஒ-160]

## யாழ். பொது நூலகத்துக்கு ரூபா 6 லட்சத்துக்கு நூல்கள்

யாழ். மாநகர சபையின் பொது நூலகத்திற்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான 750 நூல்கள் அன்பளிப்பாகக் கிடைக்கவுள்ளன.

அமெரிக்கா இந்த நூல்களை வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரமளவில் இந்த நூல்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-ரி)

## தலைமன்னுர் வந்த தமிழ் அகதிகள்

மாங்குளம், ஏப் 1

தமிழ்நாட்டிலிருந்து சுமார் 242, அகதிகள் நேற்றுத் தலைமன்னுருக்கு வந்துசேர்ந்தார்கள்.

கப்பல் மூலம் வந்த இவர்களை புனர்வாழ்வு, புனரமைப் புத்துறை அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா வரவேற்ருர்.

நேற்று வந்தவர்கள் மன்னுர், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

(அ-94)

## வடமராட்சிப் பகுதியில் ஊரடங்கு நீக்கப்பட்டது

வல்வெட்டித்துறை, ஏப் 1

'வடமராட்சிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு நேற்றுக் காலை விலக்கிக்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து அப்பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

போக்குவரத்துக்களும் ஆரம்பமாகின. கடைகள், பாடசாலைகள் என்பன இயங்கின.

பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றை அடுத்தே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

(ஒ-10-9-160)

## தலையில் 'ஹெல்மட்'டுடன் சட்டசபைக்கு வந்த எம். எல். ஏ.

சென்னை, ஏப்ரல் 1

தலையில் ஹெல்மட்டுடன் தமிழ்நாடு சட்டசபைக்குள் பிரவேசித்த எம். எல். ஏ. ஒருவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

இது பற்றிய விவரம் வருமாறு;

கடந்த சனிக்கிழமை தமிழ்நாடு சட்டசபையில் உறுப்பினர்கள் ஆளை ஆள் அடித்துக் கொண்டனர் என்பதும்- மைக் மற்றும் பொருள்களால் உறுப்பினர்கள் தாக்கப்பட்டதும்- அதனுல் உறுப்பினர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

மீண்டும் கடந்த திங்கட்கிழமை சபை கூடியது:

திரு. வெங்கடேச தீஷிதர் என்ற எம். எல். ஏ. பத்திரிகை கலரிக்குச் சென்று அங்கிருந்த ஒருவரிடம் ஹெல்மட்டை வாங்கி தலையில் போட்டவண்ணம் சபா மண்டபத்தினுள் பிரவேசித்தார்-

சபைக் காவலர்கள் அவரைத் தடுத்து நிறுத்தியதுடன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தநிறுத்தம் கொண்டுவர அரசியல் தலைவர்களும் முயற்சி!

கொழும்பு, ஏப்ரல் 1

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு சம்மதிக்கும்படி ஜே.வி.பிக்கு சகல அரசியல் கட்சிகளும் கூட்டாக வேண்டுகோள் விடுக்கும் திட்டம் ஒன்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடந்த வியாழக்கிழமை கூடி இத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வணசிங்க சுட்டுக்கொலை

தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு.ஏ. வணசிங்க நேற்றிரவு சுமார் 7 மணியளவில் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரியவருகிறது.

(ஒ)

## நேற்றும் வெளிநடப்பு

சென்னை, ஏப் 1

தமிழக சட்டசபையில் அ. தி. மு. கவினர் நேற்றும் வெளிநடப்புச் செய்தனர்.

பிரஸ்தாப கழகத்தின் துணைத் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான திரு. திருநாவுக்கரசு சட்டசபையில் தமது கருத்தைத் தெரிவிக்க முற்பட்ட போது அதற்கு அனுமதிக்கப்படாததை அடுத்தே அ. தி. மு. கவினர் நேற்றும் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

ஆயினும் சில நிமிட நேரத்தின் பின்னர் மீண்டும் சபைக்கு வந்த இவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 5ஆவது நாளாக நேற்றும் வெளிநடப்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(அ-9)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

C. G. 125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பிராசா 'பவுர்ணமி' புதிய செம்மணிரோட், கல்வியங்காடு. (10453)

Honda 50 CC நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. Dr. S. Thironavukkarasu, Kaithady South, Kaithady. (10747)

ஜெப்பர்ட் அல்சேஷன் ஆண் 5 மாத விற்பனைக்கு உண்டு (B) [illegible] (B) [illegible] விற்பனைக்கு உண்டு. 249 [illegible], [illegible] மடம். (10458)

## விசேட கழிவு

[illegible] வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574

## புத்தகங்கள்

உயிரோட்டமான நாவல்களான பூம்பவி மலர்கள், ராதையின் நெஞ்சம், முடிவல்ல ஆரம்பம், நியூமராலஜி ரெபிரெக்ஸ், லிப்கோ டிக்ஷனரி, இரகுநாதையர் திருக்கணித பஞ்சாங்கம், தேனிசை மழை, சினிமாப்பாடல் புத்தகங்கள். ராஜன் புத்தகசாலை கிருஷ்ணசாமி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (10741)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Cobb) புரொயிலர் குஞ்சு [Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல்குஞ்சு 5ஆம்திகதி புதன்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10244]

## தேவை

[illegible] O/L [illegible] தங்களால் [illegible] கற்பிக்கக்கூடிய அநுபவமுள்ள ஆசிரியர் [illegible] தேவை. [illegible] 6.00— 9.00 [illegible] ஆறுமுகநாதன் 10, [illegible] ஒழுங்கை [illegible] [10749]

20 வயதிற்குட்பட்ட ஆண், பெண் பயிற்சியுள்ளார் அச்சக வேலை பழகுவதற்குத் தேவை. நற்சான்றுப்பத்திரத்துடன் தொடர்வு கொள்ளவும் கு. வி. அச்சகம் 386, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். [10454]

Accounts Clerk ஒப்பந்த அடிப்படையில் தகுதி உள்ளவர்கள் உடன் நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். நல்லொழுக்கமுள்ள லொறிச்சாரதி தகுதி உள்ளவர்கள் உடன் நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். அத்துடன் பலகை அடிக்கும் தச்சுவேலையாட்கள் தேவை. விண்ணப்பிக்கவும்: மனோகரன் & வெற்றிவேல் உரும்பராய் சந்தி, உரும்பராய் [10243]

A/L O/L படித்த பெண்பிள்ளை லிகிதர்/ ஆசிரியையாக பணியாற்றுவதற்கு உடன் தேவை. பூரணப்படுத்திய விண்ணப்பத்தை தபால் மூலம் அனுப்பவும் I. E. T. 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10748)

## மணமக்கள் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள செவ்வாய் தோஷமுள்ள Accountantக்கு 26—31 வயதுக்கிடைப்பட்ட விஞ்ஞானப் பட்டதாரி அல்லது வங்கி உத்தியோக பெண் தேவை. [illegible] எல்லாச் சமயத்திலும் மணமக்கள் [illegible]. [illegible] செய்யாத்தேட் [illegible] யாழ்ப்பாணம். (10242)

## மணமகன் தேவை

B.A பட்டதாரி மாதம்ரூபா 2600/- சம்பளம் பெறும் 30 வயது ஆசிரியைக்கு மணமகன் தேவை. ஒரு லட்சம் பணம், இரண்டு பரப்பு வீடு கட்டக்கூடிய காணி, நகை சீதனமாகக் கொடுக்கப்படும். உடனடியாக முழுவிபரங்களுடன் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல: 41 C/o உதயன் யாழ்ப்பாணம். (10235)

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை சகுந்தலா தேவி ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 478170173V ஆனைப்பந்திக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் அச்சுவேலி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10745)

## வாடகைக்கும் விற்பனைக்கும்

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட அதி நவீன டிசைன்களில் மணமகளின் தலைச்சோடனை நகைகள், வாடகைக்கும் விற்பனைக்கும் பெற்றுக்கொள்ளநாடுங்கள்; கனகசபை தர்மகுலசிங்கம், கணேஸ்வாசா, வாரிவளவு, காரைநகர். C/o சித்தி நகைமாளிகை, 213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10746]

## கல்வி

G. C.E. O/L வில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 22வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் இன்று முதல் வீடுகளிற் சென்று விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. [10750]

## லண்டன் பரீட்சைகள்

பிற்மன் லண்டன் பரீட்சைகள் சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் பாடங்களில் 02- 04- 89இல் எமது நிலையத்தில் நடைபெறும். 89 ஜூலை பரீட்சைகளின் விண்ணப்ப முடிவு: 31- 5- 89. வெளி மாணவர்களும் தோற்றலாம். S. T C.A, 149 (37), சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். கிளை நிறுவனங்கள் இல்லை. [10451]

## பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி I படிமுறைப் பயிற்சி நூல் விற்பனையாகின்றது. 150 இற்கும் அதிகமான வினாக்கள் உள்ளது. 1990 இற்கும் அதற்குப் பிற்பட்ட பரீட்சைகளுக்குமான புதிய பாடத்திட்டம்: ஆசிரியர், திரு. சி. துரையப்பா, யாழ். St. John's College. (10701)

## வகுப்புக்கள்

சிங்களம், ஆங்கிலம், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் 3 - 4 - 89 ல் ஆரம்பமாகின்றன. உங்கள் வீடுகளிலும் ஆங்கிலம், சிங்களம் கற்பிக்கப்படும். விபரம்- [நேரிலும் கடிதமூலமும்] I. E. T 11 B ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) (10719)

## SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 2—4—89 சனி / ஞாயிறு நாட்களில் நேரம் பிற்பகல் 4-30— 6 மணிவரை S: B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (10222)

## புலமைப் பரிசில் பரீட்சை

புதிய சிபார்சுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட 5ஆம் ஆண்டுக்குரிய புலமைப் பரிசிற் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ், பயிற்சிப் புத்தகம் விற்பனையாகின்றது. ஆக்கியோன்:- ஆ. ந. இராசேந்திரன் விலை ரூபா-40மட்டும். கிடைக்குமிடங்கள்: யாழ் முன்னணிப் புத்தகசாலைகள். (10734)

## A/L '91' இரசாயனம்

108' Brown Road, A/L 91 இரசாயனம், ஆசிரியர் சத்தீஸ், பிரிவு I ஆரம்பம்: 04- 04- 89 செவ்வாய் 6. 30 a. m, செவ்வாய், வியாழன் 6. 30 a. m. பிரிவு II ஆரம்பம்: 01- 04-89 சனி, 11 00 a. m. சனி, ஞாயிறு 11. 00 a. m (10743)

## எவர் சில்வர் தயாரிப்புகள்

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும், மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand தேவநற்கருணைப் பாத்திரம் [Ciborium] இரசப்பாத்திரம் [Chalice] தேவநற்கருணைத் தட்டு, காணிக்கைப்பை, பீட அலங்கார விளக்குகள், பூ ஏந்தனங்கள் தூண்டாமணி விளக்குகள், தேவ நற்கருணைக் கூடு [Tabernacle] இன்னும் பற்பல. காட்சி அறை:- S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C/1908)

## "கெட்டிக்காரர்கள்"

இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூல். அராலியூர், ந. சுந்தரம்பிள்ளை எழுதிய படித்துச் சுவைப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற 9 நாடகங்கள். 76 பக்கங்கள். விலை 25/- [10237]

## Marriage Proposal

Hindu Vellala bachelor 42 years retired Clerk with Pension. Parents graduate teachers. Seeks suitable partner for marriage. Please write 471 C/o Sanjeavy Jaffna. (10744)

## OMEGA

சகல குளிர்சாதனப் பெட்டிகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மோட்டருக்கும் ஒருவருட உத்தரவாதம் கொடுக்கிறோம். Gas நிரப்ப ரூபா 700/- மாத்திரம். ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (10457)

## நீர்வேலி கந்தசாமி கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 1

நீர்வேலி கந்தசாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறும். (ச)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் விவேகானந்த சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது. (ச)

## உடன் தேவை

யாழ்நகரில் சிற்றுண்டிச்சாலைக்கு உதவியாளருகக் கடமை புரிபவர் உடன்தேவை.

**North Ceylon Technical Association**

14, சென்.பீற்றர்ஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/1593)

## A/L விஞ்ஞான மாணவர்கட்கு

89 அசேதன இரசாயனம் (துரித மீட்டல்)

ஆரம்பம்: 5. 4. 89 Wed. & Fri. 6.15

Mr நாகரட்னம், B.Sc.

90 வெப்பவியல்

ஆரம்பம்: (இன்று) 1. 4 89

Sat & Sun 6. 30 — 7. 30

ஆசிரியர் Mr மணியம், B.Sc

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C/2116)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை**

தோற்றம்:- 6-10-1943 மறைவு:- 30-3-1988

திதி:- 18-3-1989

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், அன்பின் பிறப்பிடமாய், எமக்காக வாழ்ந்த அன்புத் தெய்வமே! எங்களை ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்ட குடும்ப விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், சகோதரர்கள்**

விதானை வளவு,
மானிப்பாய். (10239)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்துரை றேசலீன்**
(பாக்கியம்)

மலர்வு:- 18- 11- 1919 உதிர்வு:- 01- 04- 1988

திதி:- 01- 04- 1989

அன்பே வடிவாகி, ஆருயிர்த் துணைவியாகி, அருமைத் தாயாகி, அருளின் அமுதூட்டி. உண்மை வழிகாட்டி, எளிமை எழிலூட்டி. உலகில் எமை ஆளாக்கிய உத்தமியே! எம் நினைவின் சுடராய் நீ நீங்காது ஒளிர்கின்றாய். மறுவாழ்வில் பரன் யேசு பதம் பற்றி இன்புறும் நீ அருள் வாழ்வு நிறைவோடு நாம்வாழ இறைபாதம் எந்நாளும் வேண்டுவாயே தாயே! உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை எந்நாளும் இறைஞ்சுகின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
**பிள்ளைகள்: மறீனு, றூபேட்**

[illegible] [10126]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் : 09-07-1923

ஆண்டவன் அடியில் : 02-03-1989



**க. பிள்ளையாகுட்டி**

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

திருப்பூர்,
மயிலிட்டி.
[10441]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு. தம்பையா கோபாலபிள்ளை**
(இளைப்பாறிய உப அதிபர்
கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம்)

மலர்வு: 17-07-1927 உதிர்வு: 13-03-1988

அப்பா! என அழைக்க யாருமில்லை எமக்கிங்கு வருடம் தான் ஒன்றாகியது! நினைவுகளோ ஓயவில்லை! உம்மைப் பிரிந்ததால் எமக்கிங்கு வேதனைகள் குறையவில்லை. வணங்குகின்றோம், இறைவனை உமது ஆத்ம "சாந்திக்காக"

தகவல்
**மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன், சகோதரர்கள்.**

734, பவானிவாசம்
வட்டக்கச்சி
கிளிநொச்சி (10226)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டியும்



**சங்கரதாஸ் காசிநாதன் (சாந்தன்)**

தோற்றம்: 20 - 06 - 1949 மறைவு: 19 - 02 - 1989

அகால மரணமடைந்த திரு. சங்கரதாஸ் காசிநாதனுடைய மரணச் சடங்கில் நேரடியாகச் சமூகமளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த உறவினர், நண்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் 05 – 04 – 1989 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்.**

60/2, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [10234]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபை, யாழ்ப்பாணம்

2-4-1989 [ஞாயிற்றுக்கிழமை] நடைபெற இருந்த ஆண்டுப் பொதுக்கூட்டம்தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்படுகின்றது.

புதிய திகதி உறுப்பினருக்கு அறிவிக்கப்படும்.

த. சோமசுந்தரம்.
தலைவர்.

[10450]

## O/L Day Class

திங்கள் — வெள்ளி
(8.00 a.m.— 1.00 p.m.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

● அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இடத்திற்கு முந்துங்கள்.

[C-2107]

# WANTED

## AGRO CONSULTANT

An experienced Agro Consultant with sound knowledge in Coconut Planting Replanting and Maintenance for a coconut estate situated in the Jaffna Peninsula. The job to be performed Will of a challenging nature. Salary negotiable either on a consultant basis or monthly payment to be fixed after assessing the performance during a trial period of six months – Apply c/o Uthayan 470.

(C/2044)

உ
ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!
நிகழும் விபவ ஞு பங்குனி மீ 21ஆம் நாள் (3-4-1989) திங்கட்கிழமை காலை 9. 30 மணிமுதல் 10. 30 மணி வரை கூடும் சுபமுகூர்த்தத்தில்

எங்கள் சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவகுமாரனுக்கும்**

★★★

எங்கள் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**மோஹாம்புஜத்துக்கும்**

திருவருளை முன்னிட்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து, மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் தாங்களும் சுற்றம் சூழவருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்

சரவணமுத்துப் பத்தர்
கந்தசாமி தம்பதிகள்,
947, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு. யாழ்ப்பாணம்.

துரையப்பாப் பத்தர்
பஞ்சரத்தினகோபால் தம்பதிகள்,
6/12A, கன்னுதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

வரவேற்புபசாரம்: 620, கே. கே. எஸ். வீதி நாச்சிமார்கோயிலுக்கு முன்னுள்ள இல்லத்தில் 3-4-89 மாலை 4. 30 மணிக்கு நடைபெறும். [C-1576]

## இன்று ஆரம்பம்!

# PERSONAL CLASSES

B.M.C. முன் லேன், யாழ்ப்பாணம்

## WEEKEND CLASSES

A/L விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்: 1 - 4 - 89

| | | A/L 89 PAPER | A/L 91 |
|---|---|---|---|
| CHEMISTRY | திரு. திவ்வியநாதன் B.Sc | 6. 30 | 7. 30 |
| PHYSICS | திரு. சத்தியசீலன் B.Sc | 7. 30 | 8. 30 |
| ZOOLOGY | திரு. ஈஸ்வரதாசன் B.Sc | 8. 30 | 9. 30 |
| BOTANY | திரு. சர்வானந்தா B.Sc | 9. 30 | 10. 30 |
| BASIC MATHS | திரு. விஜயகுமார் B.Sc | — | 11. 30 |

✶ A/L 90 பிரிவுகள் நடைபெறுகின்றன.
- விபரங்கள் நேரில் -

(C/2I04)

Ask for
PROCESSING BY
Kodak
DISTRIBUTOR-G.T.A

● விரைவான தரமான
● குறைந்த கட்டண
சேவைக்கு நாடுங்கள்:

# சென்றல் கிளினிக்

193 A., POWER HOUSE ROAD,
JAFFNA.

(C/2034)

## எமது புதிய வெளியீடுகள்

(1) ✶ மோகன் ★ ரேகா ✶ நிழல்கள் ரவி
**"இதய தீபம்"**
(ORIGINAL)

(2) ✶ சரத்பாபு ✶ சிலுக்கு
**"அன்று பெய்த மழையில்"**
(ORIGINAL)

அடுத்த வெளியீடு:
★ முரளி ✶ அபிநயா ✶ சரோஜாதேவி
**"தர்ம தேவன்"**
(மறைந்த மக்கள் திலகம் M. G. Rரின் வாழ்க்கை வரலாறு)

# ★ குணம் ★
# வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[C-1592]

இன்றுமுதல் தெய்வேந்திரா-சாவகச்சேரி
★ சரத்பாபு ★ கிருஷ்ண ★ ராதா
★ சில்க் ★ அனுராதா
நடித்த

## ★ ஆண் மகன் ★

சண்டைகள் நிறைந்த படம்

5ஆவது வெற்றிவாரமாக நடைபெறுகிறது
வின்ஸர் வெண் திரையில்
★ ரஜனி ★ அமலா ★ செந்தில்
நடித்த

## ★ வேலைக்காரன் ★

சிறந்த குடும்பச் சித்திரம்

[C-2115]

## உடன் வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணுடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (Blowers) கெல்ப்பர் (Helpers) பபுளர் (Bubblers) போன்றவர்களும்

அனுபவமுள்ள (Bottle Machine) இயக்குநரும் கெல்ப்பரும் தேவை.

அனுபவத்திற்கும் வேலைத்திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

16 — 19 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கும் தேவை.

நேரில் வரவும்:

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி.

(10442)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**திரு. வேலாயுதர் இளையதம்பி**
(மனோன்மணி விலாஸ் – மன்னார்)
புங்குடுதீவு

தோற்றம்: 20 - 03 - 1920
மறைவு: 01 - 03 - 1989

01 – 04 – 1989 சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

283/13, புகையிரத வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.

[10444]

## சுகாதார சேவைகள்
## பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி காலை 10.00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டட வேலைக்கு ரூபா 250,000/- க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய மறுதினம் 11 ஆம் திகதி காலை 10. 30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரசகரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளுராட்சி ஆணையாளரினுல் அல்லது கூட்டுறவு உதவியாளரினுல் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டட வேலைசெய்ய விரும்புவோர் 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆம் திகதி காலை 10. 30 மணிவரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். திரும்பப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 350/- ம் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 50/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கிராமோதய சுகாதார நிலையம்
### கிளிநொச்சி மாவட்டம் — 4 கட்டிடங்கள்

(') இயக்கச்சி
(2) இராமநாதபுரம்
(3) பல்லவராயன்கட்டு
(4) பாரதிபுரம்(ஆலடிசந்தி)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் '' சுகாதாரப் பகுதியின் கட்டட வேலை '' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தெரிவு செய்யப்பட்டகேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்ற அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5 % ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்ருக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபைத் தலைவரைச் சார்ந்தது.

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

20-03-1989

(C/1591)

# இந்திய யாத்திரை-சுற்றுலா!

நடைபெறும் திகதி:
18 - 4 - 89 முதல் 06 - 05 - 89 வரை
சித்திரைப் பூரணையில்
கன்னியாகுமரியில் தீர்த்தமாடல்

முந்துங்கள் இடத்திற்கு -- --
ஒரு சில ஆசனங்களே உண்டு -----!

திருச்சி, மதுரை, மட்ருஸ், பெங்ளுர், மைசூர், சிதம்பரம், நாகூர், திருப்பதி, கொடைக்கானல், ஊட்டி, அன்னைவேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள புகழ்வாய்ந்த தலங்களைத் தரிசிக்கவும் ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கவும், பகவானைச் சந்திக்கவும்,

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தலைமைப் பணிமனை:

## துர்க்கா ரூர்ஸ்,

6, நவீனசந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

ஆலோசனைக் கிளைகள்:

✶ திரு. எஸ். இராமலிங்கம் (ஆசிரியர்)
கொழும்பு ஸ்ரோர்ஸ் - பளை.
✶ திரு க. கருணரத்தினம்,
வூட்லண்ஸ் டி ஹோட்டல்,கண்டி வீதி,கிளிநொச்சி
✶ Dr. மகாலிங்கம்,
அரவிந் பார்மஸி, கண்டி வீதி, மாங்குளம்
✶ திரு. பெ. அழகு,
64,இராஜசோதி கபே, கண்டி வீதி,வவுனியா.
✶ நியூறெயின்போ றவல்ஸ்,
இல.157/4, சிறீ கதிரேசன் வீதி, கொழும்பு-13

(C/2113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ''மில்க்வைற்'', யாழ்ப்பாணம்.

''காலம் பெறுமதியானது''
துரித சலவைக்கும், பளிச்சிடும்
வெண்மைக்கும் நீலம் கலந்த
'மில்க்வைற்' சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்.
பாவித்த 5 வெற்றுப் பைக்கற்றுகளை அனுப்பி
அப்பியாசக் கொப்பி
ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- ''மில்க்வைற்'' யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

01 - 04 - 1989 சனிக்கிழமை

மட்டுவிலில் ''மில்க்வைற்''
சகாய விற்பனை

10-4-89 பொங்கல் திருவிழா அன்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில், ''மில்க்வைற்'' ஸ்தாபனத்தாரின் சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து பெறுமதியான பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வடக்கு, வடமத்திய மாகாணங்களில்

# வரட்சியால் பாதிக்கப்பட்ட 15 லட்சம் பேருக்கு இலவச அரிசி

## அடுத்த வாரம் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஏப் 1
வடக்கு, வடமத்திய மாகாணங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட சுமார் 15 லட்சம் மக்களுக்கு அரிசி வழங்கப்படவுள்ளது.

அடுத்த வாரம் முதல் இந்த அரிசி விநியோகம் ஆரம்பமாகும் என்று தொழில் மற்றும் சமூக நலன் அமைச்சுச் செயலாளர் திரு. ஜஸ்டின் டயஸ் தெரிவித்தார்.

வாரந்தோறும் ஆயிரம் தொன் அரிசி விநியோகம் செய்யப்படும். இதற்காக விசேட முத்திரை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த நிவாரணத்துக்காகப் பத்தாயிரம் தொன் அரிசியை உடனடியாகஒதுக்குவதுஎன்று அரசு கடந்த புதன்கிழமை தீர்மானித்தது.

அரிசி விநியோகம் ஒரு மாத காலம் தொடர்ந்து நடைபெறும். சர்வதேச நாடுகளில் இருந்தும் உதவிகள் எதிர்பார்க்கப்படுவதாக திரு. ஜஸ்டின் டயஸ் தெரிவித்தார்.

சமூகநலன் திணைக்கள இயக்குனர் திரு. டி. டி. ஜே. விஜசுந்தரவுடன் திரு. டயஸ் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

குளங்கள் வற்றி விட்டன. ஆழ்கிணறுகளில் கூடத் தண்ணீர் இல்லை. மனிதர்களும், மிருகங்களும் தண்ணீருக்காகத் தவிக்கின்றன — இப்படி திரு. டயஸ் வர்ணித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பிரதேச வாரியாக வருமாறு;

★ மதவாச்சிய, ஹொரவப் பொத்தானை, மிகிந்தலை – ஒரு லட்சத்துமுவாயிரம் குடும்பங்கள்.
★ வவுனியா - 26 ஆயிரம் குடும்பங்கள்
★ மன்னார் - 16 ஆயிரம் குடும்பங்கள்.
★ கிளிநொச்சி - 24 ஆயிரம் குடும்பங்கள்.
★ முல்லைத்தீவு - 18 ஆயிரம் குடும்பங்கள். (ஒ-எ)

## இரண்டாண்டு நினைவஞ்சலி



இராசஇரத்தினம்
செல்வகுமார்
[மயூரன் – பபி]
தாயின் மடியில்:
03-07-1962
தமிழ்த்தாய் மண்ணில்:
01-04-1987
ஆண்டுத்திதி:
08—04—1989

நாளெல்லாம் உனை
நாம் நினைக்கின்றோம்
ஒரு நல்லவனின்
பிரிவினால்
நாம் வாடுகின்றோம்.
நாட்டில் ஒரு
பூகம்பம் வந்ததினால்
நன்மைகள் ஆற்றிடவே
நடை பயின்றான்.
அன்புத் தாய் தந்தை
சகோதரத்தை
அலற விட்டு
ஆருயிர் தமிழ் காக்க
ஆவேசமாய்ப்
புறப்பட்டாய்!
செல்லப் பெயர் தான்
பபி என்று
சொல்ல வைத்தாய்!
சிறப்புப் பெயர் தான்
மயூரன் ஆச்சு இங்கே
மணக் கோலம் கண்டு
நாம் மலர் மாலை
செய்ய எண்ண
நின் மரணக் கோலம்
கண்டு நாம்
மலர் வளையம்
செய்து வைத்தோம்
எம் மனதில் உறைந்து
விட்ட
மாணிக்க முத்தே!
உன்னை எண்ணி வாடும்
நாளுமொரு
ஏப்பிரல் பூல்
தானுமோடா?

உமது பிரிவால்
துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணன்மார் அண்ணி,
[illegible]கள் (பி[illegible]ன்ஸ்),
தங்கைமார் [illegible],
[illegible], உறவினர்கள்,
நண்பர்கள்.

சே[illegible]க்கொம்பனி லேன்,
நல்லூர்ம்.
[10463]

உலகம் முழுவதும் தம்பட்டம் -- ஆனால்

# நாடாளுமன்றத்திலேயே தமிழ்மொழி புறக்கணிப்பு!

## அமிர்தலிங்கம் கண்டனம்

கொழும்பு, ஏப்ரல் 1
தமிழ் ஆட்சி மொழி என்று 16 ஆவது திருத்தம் மூலம் உலகம் முழுவதும் தம்பட்டமடித்த பின்னர், தமிழ் மொழி நாடாளுமன்றத்தில் மறுக்கப்பட்டுள்ளது; புறக்கணிக்கப்படுகிறது.

திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

வரவு – செலவுத் திட்டம் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலேயே வழங்கப்பட்டது. தமிழில் வழங்கப்படவில்லை.

போதிய தமிழ் உத்தியோகத்தர்கள் இல்லாததால் தமிழில் அது தயாரிக்கப்படவில்லை என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்திருக்கிறார்.

தமிழில் பத்திரங்கள் வழங்கப்படாமை நிலையியற் கட்டளையின்படி நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை செல்லுபடியற்றதாக்கி விடும்.

சுதந்திரக் கட்சி எம். பி. திரு. கே. பி. ரத்னயக்கா (தமிழில்) தமிழ் ஆட்சி மொழியான பின்னர்தான் இப்படி நடக்கிறது.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது;

தமிழில் வரவு - செலவுத் திட்டம் கிடைக்காதது எனக்குக் கவலை தருகிறது. தமிழிலும் மதிப்பீட்டை வழங்குவது நிதி அமைச்சின் பொறுப்பு தமிழிலும் இல்லாத ஆவணங்களை அமைச்சர்கள் சமர்ப்பிக்க நான் இனி இடமளிக்கமாட்டேன். (ஒ - எ)

## பன்றிகளை . . .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
சுவையான உரையாடல் ஒன்றைப் படியுங்கள்:

திரு. அனுரா பண்டாரநாயக்கா:- முந்திய அரசில் திறம்பட பணியாற்றிய திரு. லலித் அத்துலத்முதலியை பன்றிகளையும் மாடுகளையும் பராமரிக்க தற்போது நியமித்துள்ளனர்.

மிருக வளர்ப்பு பற்றி அத்துலத்முதலி இப்போதுபடித்து வருகிறார். 'இரண்டு கால்கள்' பிராணிகளை பார்த்து வந்தவர், இப்போது 'நான்கு கால்' பிராணிகளை பராமரிக்கின்றார்.

திரு. லலித் அத்துலத்முதலி: சிலசமயம் நான்கு கால் பிராணிகள் நன்றியுள்ளவையாக உள்ளன. (அ-எ)

## யாழ்....

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றை கடந்து செல்ல முற்படுகையில் ஆயுதபாணிகள் நால்வர் பஸ்ஸை மறித்தனர்.

இவர்கள் நவீன ஆயுதங்களை வைத்திருந்தனர்.

மூவர் வெளியே நிற்க ஒருவர் பஸ்ஸினுள் பிரவேசித்து பயணிகளிடமிருந்த நகைகள், பணம் மற்றும் உடைமைகளைக் கொள்ளையிட்டனர். பஸ்ஸில் வந்த பெண்கள் பலரின் நகைகள் பலவந்தமாகப் பறித்து எடுக்கப்பட்டன. (ஒ-10)

## தேம்பாவணி விழா!

காலம்: 02-04-1989 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 45 மணி முதல் மாலை 6-00 மணிவரை
இடம்: யாழ்- மறைக்கல்வி நிலையம்
தலைமை- யாழ் ஆயர் மேதகு கலாநிதி
வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள்
சிறப்புரைகள்:
கலாநிதி நா. சுப்பிரமணியஐயர்.
பேராசிரியர் அ. சண்முகதாஸ்.
விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா (எம். ஏ.).
திரு. எம். விக்ரர் (யாழ் ஜெயம்).
கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பொதுச்செயலாளர்,
திருமறைக் கலா மன்றம்,
223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1594)

அரச ஊழியர்களுக்கு

# புத்தாண்டு முற்பணம் 10 ஆம் திகதி கிடைக்கும்

கொழும்பு, ஏப்ரல் 1
சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அரசாங்க ஊழியருக்கு இம்மாதம் 10-ஆம் திகதி ஆயிரம் ரூபா முற்பணமும் சம்பளத்தில் இருந்து 35 – 40 சதவீதமும் வழங்கப்படவுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சர் திரு. யு. பி. விஜேக்கூன் இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதச் சம்பளம் 10-ஆம் திகதிக்கு முன் கொடுக்கப்படுமா? என்று சுதந்திரக்கட்சி எம். பி. திரு. நிமல் சிறிபால டீ சில்வா கேட்டார்.

அப்போது அமைச்சர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

சம்பளம் முழுவதையும் முற்பணமாக ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன் கொடுத்தால் மே 25 ஆம் திகதி வரை பணம் இன்றிக் கஷ்டப்படும் நிலை அரசு ஊழியருக்கு ஏற்படும் என்றும் அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

## டாக்டர் 'நந்தி'

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1
யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட முன்னாள் பீடாதிபதி டாக்டர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) இப்போது ஆஸ்பத்திரியில் இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பல வாரங்களுக்கு முன்னர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், உடல் நிலை தேறி வீடு சென்றுவிட்டார் என்றும் இப்போதும் வீட்டில் சுகமாகவே உள்ளதாகவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (அ)

## யுத்தநிறுத்தம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திட்டம் பற்றி முதன் முறையாக ஆலோசனை நடத்தினர்.

இதேவேளை அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பாதுகாப்புதுணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன செய்தியாளர் மத்தியில், தீவிரவாதிகள் பற்றிய பிரச்சினை குறித்து முக்கிய அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை மனித உரிமைகள் இயக்கங்களும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு முயற்சி மேற்கொண்டிருப்பது குறித்த செய்தி நேற்றைய உதயனின் தலைப்புச் செய்தியாக வெளியானது தெரிந்ததே. (ஒ-எ)

## பல மோதல்கள்: 13 பேர் பலி

கொழும்பு, ஏப்ரல் 1
விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையே கடந்த 24 மணி நேரத்தில் ஏற்பட்ட பல்வேறு சண்டைகளில் மொத்தம் 13 பேர் கொல்லப்பட்டனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

திரிகோணமடு என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் இந்தியப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர்.

திரிகோணமடு பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ளது. திருகோணமலையிலும் தாக்குதல் ஒன்று நடந்ததாகவும் உயிர்ச்சேதங்கள் பற்றித் தெரியவில்லை என்றும் சொல்லப்பட்டது.

இன்னொரு தாக்குதலில் 4 இலங்கை இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். (அ-எ)

## புரிந்துணர்வுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொலைகள் தமிழ்ப் பேசும் மக்களுக்கு உணர்த்தும் உட்பொருள் என்ன? பழிவாங்கல் என்ற செய்தியைத் தவிர இப்படுகொலைகள் மக்களுக்கு (இதைச் செய்பவர்கள் எதிர்பார்க்கும்) எந்தவித செய்தியையோ அல்லது தாக்கத்தையோ உணர்த்தப்போவது இல்லை.

### அடிப்படை விழுமியங்களை அசைப்பன

படுகொலைகள் அதிகரித்துள்ளதால் இவை சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களாக மாறிவிட்டன. மனச்சாட்சி சுதந்திரத்தை மீறும், உயிர் வாழும் அடிப்படைச் சுதந்திரத்தை அறவே மறுக்கும் இந் நிகழ்வுகள் எமது சமுதாயத்தின் அடிப்படை விழுமியங்களையே அசைத்துவிட்டன. ஒரு விசித்திரமான மனோநிலையில் மக்களை வாழ நிர்ப்பந்திக்கின்றன.

புற்றுநோய் போல் இந்நிகழ்வுகள் தொடருமானால் தொடங்கியவர்களாலேயே இவற்றைத் தடுத்து நிறுத்தமுடியாமல் போய்விடும் என்றும் நாம் இக்கட்டத்தில் எச்சரிக்க விரும்புகின்றோம்.

ஏதோவொரு வகையில் ஆயுதம் தாங்கியவர்கள் நிராயுதபாணிகளை தன்னியல்பாக இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் தமக்கே மட்டும் தெரிந்த காரணங்களிற்காக 'குறிவைத்து வேட்டையாடுவது' உடனே நிறுத்தப்பட வேண்டும்.

எமது மக்கள் மனோநிலை பாதிக்கப்படுவதற்கும், போராட்டத்தின் எதிர்காலம் குறித்து பெருத்த அச்சத்தை கொடுப்பதற்கும் இவை வழி வகுக்கின்றன. அடக்குமுறைகளிக்கும், ஒடுக்குமுறைகளிற்கும் எதிராக போராடும் மக்கள் தாங்கும் ஆயுதங்கள் வெறும் கொலைக்கருவிகளாக இளைஞர் கைகளில் சிக்கிச் சீரழிவது நிறுத்தப்படவேண்டும்.

பரஸ்பர சந்தேகம், தமது சொந்த இருப்புக் குறித்தான அச்சம் இத்தகைய கொலைகளுக்கு காரணமாக அமைகின்றன. இவ்வடிப்படைக் காரணிகளைஅனைத்துஇயக்கங்களும் பங்கு கொள்ளும் ஒரு இதய பூர்வமான பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்படமுடியும்.

ஆயினும் முகமறியாதவர்கள் இயக்கங்களின் உள்கிடக்கைகள் தெரியாமல் விடுதலைக்கு உதவியவர்கள் உறவினர்கள் தூரத்து உறவினர்கள் என்பவர்கள் இப்படுகொலைப் பட்டியலில் இருந்து உடனடியாக நீக்குமாறு, இதுதொடர்பாக புரிந்துணர்விற்கு ஒரு எழுதப்படாத உடன்படிக்கை ஒன்றிற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் உடனடியாக வருமாறும் அல்லலுறும் அனைத்து தமிழ் பேசும் மக்கள் சார்பாக பகிரங்க வேண்டுகோள் ஒன்றினை ஈழவர் ஜனநாயக முன்னணி விடுக்கிறது—

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தலையில் ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஹெல்மட்டையும் வாங்கிக் கொண்டனர்.

நேராக சபாநாயகரிடம் சென்ற திரு. தீஷிதர் 'தலையில்' ஹெல்மட் இன்றி கலந்துகொள்ள பயமாக இருக்கிறது. அதை அணிந்து வர அனுமதி தாருங்கள்' என்று கேட்டார்.

சபை விதிகள் இடம்தரா என்று கூறி அனுமதி கொடுக்க சபாநாயகர் மறுத்து விட்டார். (ஒ-எ)

## V. K. ஆறுமுகம் - (Retired S. P.)

இளைப்பாறிய பொலிஸ் அத்தியட்சகரும், மக்கள் வங்கி வடமாநில பாதுகாப்புச் சேவை அத்தியட்சகரும், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன முன்னாள் செயலாளரும், பருத்தித்துறை உதைபந்தாட்டக் கழகத் தலைவருமான திரு. V. K. ஆறுமுகம் 28-03-1989 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், மீனலோசினி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் யோகீஸ்வரதேவன் (ஆதார வைத்தியசாலை, மந்திகை), சிறீதரன் (Inspector of Police O. I. C. முல்லைத்தீவு), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (Inspector of Police முன்னாள்பொறுப்பு அதிகாரி, ஒட்டிசுட்டான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிதரன், சசிகாந்தன், ஷாமினி, நிரஞ்சன், சிவகாந்தினி, வைதேகி, நிரஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கதிரவேலு (விதானையார்), முருகேசு (Banker and Planter), திருவாளர்கள் வீரவாகு (இளைப்பாறிய நீர்ப்பாசன தொழினுட்ப உத்தியோகத்தர்), சுப்பிரமணியம் (இளைப்பாறிய S. R. D.), தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய O. A.), திருமதி கதிராசிப்பிள்ளை சக்கரப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி பார்வதிப்பிள்ளை முருகேசு, திருமதி வேதநாயகி மாப்பாணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் 29-ம் திகதி புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
''மீன பவனம்'',
நெல்லியடி, கரவெட்டி.
(10464)

## வீ. க. ஆறுமுகம்

(இளைப்பாறிய பொலீஸ் அத்தியட்சகரும்
மக்கள்வங்கி பாதுகாப்பு அத்தியட்சகரும்)

நெல்லியடியைச் சேர்ந்த வீ. க. ஆறுமுகம் (S.P) கடந்த செவ்வாய்க்கிழமை 28. 03. 89 காலமானார்.

இவரது ஈமக்கிரியைகள் கடந்த 29. 03. 89 புதன்கிழமை நடைபெற்றன.

தவிர்க்க முடியாத காரணங்களினால் முன்னறிவித்தல் கொடுக்க முடியாததையிட்டு மனம் வருந்துகிறோம்.

தகவல்:
K· ராமச்சந்திரன்
5 பிள்ளையார் ஒழுங்கை, நெல்லியடி. (10449)

## கந்தையா சின்னப்பா

கைதடி கிழக்கு கந்தையா சின்னப்பா (வர்த்தகர்) காலமானார். இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், பத்மாதேவி, யோகாநந்ததேவி, சந்திரகுமார் (இலங்கை வங்கி, திருகோணமலை), செல்வராணி, சந்திரா (காப்புறுதிக் கூட்டுத்தாபனம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மா. குலேந்திரனின் (மின்சாரப் பகுதி, அச்சுவேலி) மருமகனும், யுகந்தனின் பேரனுமாவார். இறுதிக் கிரியை இன்று மாலை (சனிக்கிழமை) கைதடியில் நடைபெறும்.

தகவல்:
மா. குலேந்திரன்
கைதடி கிழக்கு,
கைதடி.
(10465)

## செல்லையா தவலோகநாதன்

[வலி. கிழ. (தெ. ப.) ப நோ. கூ. சங்க
இருபாலைச் சந்தி கிளை முகாமையாளர்]

செல்லையா தவலோகநாதன் 31-03-1989 வெள்ளிக்கிழமையன்று அகால மரணமானார். ஈமக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

கூட்டுறவாளர்கள்
வலி. கிழ, (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம்
(C 1595)

## திருமதி தம்பையா அன்னம்மா நல்லம்மா

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த திருமதி தம்பையா அன்னம்மா நல்லம்மா காலமானார்.

இவர் காலம் சென்ற [Station Master] அம்புரோஸ் தம்பையா அவர்களின் அன்புத் துணைவி ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 02-04-89 பிற்பகல் 3.30 மணிக்கு 27/30, புங்கன்குளம் வீதி, பாண்டியன் தாழ்வில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
S. முத்துக்குமாரசாமி.
[10245]

## விஞசித்தம்பி நாகமுத்து (சின்னப்பர்)

நயினாதீவு விஞசித்தம்பி நாகமுத்து [சின்னப்பர்] 31 - 03 – 89 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற செல்லாச்சியின் அன்புக் கணவரும், யோகநாதன் [D. O. மன்னார்], அருணகிரி நாதன் [வர்த்தகர், கொழும்பு], வைகுந்தவாசன் [சுவிட்சலாந்து], திருமகள், மணிமேகலை ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம் [வைத்தியர்], மாணிக்கவாசகர் [வர்த்தகர், நயினாதீவு], பத்மஜோதி, நீலாம்பிகை, உதயமலர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02 – 04 – 89 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நயினாதீவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மாணிக்கவாசகர்.
நயினாதீவு - 6.
[10466]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/8 இல் உள்ள அச்சகத்தில் 01 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலைற் இன்ஸ்ரிரியூட்
வண்ணார் பண்ணை பஸ் நிலையம் முன்பாக
99 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

புதிய O/L 1989 டிசெம்பர்
உட்பட
ஆண்டு 4-10 வரை மாலைநேர வகுப்புகள்
நடைபெறுகின்றன.



சஞ்சீவி சஞ்சிகை

01 - 04 - 1989 சனிக்கிழமை



ELITE INSTITUTE
Opposite Vannar pannai Post Office
Manipay Road, JAFFNA.
மாலை நேர வகுப்புகள்,
புதிய O/L மற்றும்
ஆண்டு 4 - 10 வரை
ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன. திறமையான ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை


# விண்ணில் இருந்து வரும் எரிகல் தாக்கத்தினால் மண்ணில் உயிரினம் அழியும் வாய்ப்பு உண்டா?

உயிர்வாழ்தலில் உள்ள அபாயங்கள் பெரும்பாலும் நாமே அமைத்துக்கொண்டவை.

நம் சாலைகளில் கொல்வது நம் கார்களே. நம் ரயில்களே கவிழ்கின்றன. நம்முடைய துப்பாக்கிகளே சுடுகின்றன. எல்லாம் நாகரிகம் என்பதற்கு நாம்கொடுத்த விலை.

யோசித்துப் பாருங்கள் இன்றைய சாவில் எத்தனை நம்செயல்? எத்தனை நமக்கு அப்பாற்பட்ட செயல்? ஆர்மீனியா பூகம்பத்தைத் தவிர மற்றது எல்லாமே நாகரிகம், தேசப்பற்று, இன. மொழிப் பற்று இவைகளுக்கு நாம் கொடுத்த பலிகள் காட்டை அழித்து, தொழிற்சாலைகள் வைத்து எத்தனையோ பறவை, மிருக வகைகளையும் பூமியின் முகத்திலிருந்து அழித்துவிட்டோம்.

எல்லாமே தவிர்க்கக்கூடியவை.

## அழிவுச் சக்திகள்

பூமியில் நம்மால் கட்டுப் படுத்தமுடியாத அழிவுச்சக்திகளின் சாத்தியமும் இருக்கிறது. வானத்திலிருந்து பிரமாண்டமான எரிகல் அல்லது வால்நட்சத்திரம் நம்முடைய பூமண்டலத்தின்மேல் மோதி உயிர்கள் எல்லாம் அழிந்துபோய் விட்டால் என்ன ஆகும்என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கலாம்.

அவ்வாறு ஏதாவது இது வரை ஏற்பட்டிருக்கிறதா? பூமண்டலத்தில் உயிர் முதன் முதலில் ஏற்பட்டது, முன்னூறு கோடி வருஷங்களுக்கு முன்னால் என்று கணித்திருக்கிறார்கள். அப்போதிலிருந்து இப்போதுவரை தொடர்ச்சியாகத்தான் இருந்துவந்திருக்கிறோம். அப்படித் தான் தோன்றுகிறது.

## டினோசார்கள்

ஆனால் அப்படியில்லை என்பதற்கு சில ஃபோஸில்(Fo sil) அடையாளங்கள் உள்ளன.

சுமார் பதினெட்டு கோடி வருஷங்களுக்குமுன்னே உலகம் முழுவதும் ஊர்வன ஜந்துக்கள் ஊடாடின.

இதை (Mesozic) மீசோ-சோயிக் யுகம் என்று சொல்வார்கள். இந்த ஊர்வனவற்றில் மிகப்பெரிய டினோசார்கள் (Dinosaur) உலகிலேயே மிகப் பிரம்மாண்டமான ஜந்துக்களாக உலவின.

இவை சுமார் ஏழு கோடி வருஷங்களுக்கு அல்லது ஆறு கோடி வருஷங்களுக்கு முன்னால் சட்டென்று காணமற் போயின.

## சின்ன மூளை

ஆரம்ப காலங்களில் இந்த டினோசார்கள் ஒரு கோழி அளவுக்குத்தான் இருந்தனவாம். கொஞ்சம் கொஞ்சமாக பெரிசாக, நீளமாக பரிணமித்து நடக்கமுடியாமல் திணறி நதிகளையும் குளங்களையும் ஆக்கிரமிக்கத் துவங்கிவிட்டனவாம்.

இந்தப் பிரம்மாண்ட ஜந்து வகைகளில் ப்ரான்டோசாரஸ் (Brontosaurus) என்பது எழுபது அடி நீளமும் முப்பத் தெட்டுடன் எடையுமாக ஒரு குட்டிக்கப்பல் போல இருந்தது. டிரானோசாரஸ்தான் (Tyransaurus) ரொம்ப முரடு.

டினோசார்கள் பெரிசாக வளர்ந்தாலும் அவைகள்மூளை சின்னதாகத்தான் இருந்தது.

அதனால் சாமர்த்தியக் குறைவினால் அவை அழிந்துபோயின என்று சொல்கிறார்கள்.

அவைகள் அழிந்ததற்குக் காரணம் பூமியின் வானிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்று சொல்கிறவர்கள் உண்டு.

குளங் குட்டைகள் வறண்டு போய் பயிர்களில் மாற்றம் ஏற்பட்டு, (இந்த டினோசார்கள் சைவம் வேறே) ...டினோசார்களால் தாக்குப்பிடிக்க முடியாமல் அழிந்து போய் விட்டனவாம்.

இருந்தும் டினோசார்களின் அழிவு சட்டென்று ஒரு விபத்துப்போல நிகழ்ந்திருக்கிறது என்பதற்கு அறிவியல் ஆதாரங்கள் உள்ளன.

ஏழு கோடி வருஷங்களுக்கு முன்னால் ஒரு விதமான பிரளயம் அல்லது கலக்கம் அல்லது பிரம்மாண்டமான விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்பதை விஞ்ஞானம் சொல்வது சுவையானது.

அந்த 'மகா சாவில்' பூமண்டலத்தில் இருந்த உயிரினங்களில் தொண்ணூறு சதம் அழிந்து விட்டன என்கிறார்கள். ஏன்?

கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வால்டர் ஆல்வாரெஸ் பூமியின் வயதை நிர்ணயிக்கும் ஆராய்ச்சியில் அதன் கருகங்கல் படிமங்களிலிருந்து புறப்படும் மெலிதான கதிரியக்கத்தை ஆராய்ந்து கொண்டிருக்கும்போது ஓர் ஆச்சரியமான செய்தி கிடைத்தது.

## இரிடியம் அளவு

பூமியின் ஒரு குறிப்பிட்ட வயதின்போது படிந்த கல் தளத்தில் இரிடியம் என்கிற தனிமத்தின் அளவு மிக அதிகமாக இருப்பதைக் கண்டார்.



6 கோடி 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் மீது வால்விண்மீன் ஒன்று மோதிய தன் விளைவாக பூமியானது உறைபனியால் மூடப்பட்டதுடன் வானில் சூரியன் தென்படாமல் ஓரளவு இருள் கவ்வியதாகக் கருதப்படுகிறது. அப்போது மிச்சமீதியாக இருந்த டினோசார்களில் ஒன்றான ட்ரைசெராடோப்ஸ் (Triceratops) எவ்விதமாக உலவியிருக்கும் என்பதை இந்தக் கற்பனை ஓவியம் காட்டுகிறது.

- சுஜாதா -

அது எப்போது? பூமிக்கு ஏழு கோடி வயதின்போது, அதாவது, பூமியில் உயிரினங்கள் மொத்தமாக அழிந்த, அதே கால கட்டத்தில்!

இதற்கு என்ன அர்த்தம்? இது தற்செயலான விஷயமா? பூமி முதலில் உருவாகும் போதே கொஞ்சம் இரிடியம் சேர்த்துக்கொண்டது.

இந்த இரிடியம் எல்லாம் பூமியின் நடுமத்தி கருவுக்குள் உருகிய இரும்புக் குழம்புடன் கலந்துள்ளதே தவிர மேற்புறத்தில் இரிடியம் அதிக அளவில் எங்கும் இல்லை. பின் எங்கிருந்து வந்தது இந்த இரிடியம்?

இரண்டு விளக்கங்கள் சொல்கிறார்கள்.

சூரியன் லேசாகக் கோபங்கொண்டு ஒரு உஷ்ண அலையை அனுப்பியிருக்கலாம். அந்தச் சூட்டில் உலகின் அத்தனை உயிர்களும் அழிந்துபோயிருக்கலாம். குறிப்பாக எண்ணிக்கை குறைவான, காப்பாற்றிக்கொள்ள வாய்ப்பில்லாத டினோசார்கள் அழிந்து போயிருக்கலாம்.

உஷ்ண அலை ஓய்ந்தபின் அதன் அடையாளமாக இந்த இரிடியம் படிந்திருக்கலாத் என்கிற முதல் சித்தாந்தம் துக்கு இப்போது அதிக ஆதரவு இல்லை.

மாறாக ஒரு பிரமாண்டமான எரிகல் நம் பூமியை ஏழு கோடி ஆண்டுகளுக்கு முன் தாக்கியிருக்கலாம். தாக்கின போது படிந்தது இரிடியம். தாக்கத்தில் பல நாட்களுக்கு பல கன மைல்களுக்கு புழுதியைக் கிளப்பி சூரியனை மறைத்ததில் சுமார் மூன்று வருஷத்தில் எல்லா உயிர்களும் அழிந்து போய்விட்டன என்கிறார்கள்.

இந்த வகையில் விண்ணிலிருந்து எரிகல் தாக்கம் மறுபடி நிகழுமா என்றால் ஒரு சிறிய சாத்தியக்கூறு உள்ளது. எதற்கும் ஒரு ஹெல்மெட் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்! ★

கருத்துக் கலசம்

## இலக்கியத்துக்கு ஊக்கம்

இலக்கியங்கள் மனித சிந்தனையின், கற்பனையின் பிரதி விம்பங்கள். மன ஆற்றலின், எழுச்சியின் பதிவுகள் அல்லது வடிவங்கள் என்றும் இலக்கியங்களைச் சொல்லலாம்.

இலக்கியங்கள் பலவகை. பழைமை இலக்கியங்களும், புதிய இலக்கியங்களும் அவற்றுள் அடங்கும். இரண்டும் சில நெறிகளுக்கு உட்பட்டு, வரன்முறைகளுக்குள் நின்றே படைக்கப்படுகின்றன. பழைய இதிகாச இலக்கியங்களும், புதிய ஆக்க இலக்கியங்களும் இலக்கிய நெறிகளுக்கு உட்பட்டு நிற்கும் போதே சிறப்படைகின்றன.

இலக்கியத்துறை வளர இலக்கிய கர்த்தாக்கள் ஊக்குவிக்கப்படுவது அவசியம். இலக்கிய ஆர்வலர்களின் ஆதரவு தேவை.

இலக்கியப் படைப்பாளிகளின் திறமை அங்கீகரிக்கப்படும்போது, பாராட்டப்படும்போது, கௌரவிக்கப்படும்போது அவர்கள் ஊக்கமடைகிறார்கள். சமூகம் அவர்களுக்கு மதிப்பான ஓர் இடத்தை அளிப்பது இலக்கிய வளர்ச்சிக்கு மேலும் வித்திடுவதாகும்.

இந்த வகையில் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகளை இனம் கண்டும், தரமிட்டும், பரிசளித்தும், பாராட்டியும், கௌரவிப்பது எல்லா நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. அரசாங்க ஸ்தாபனங்களும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களும் இப்பணியை ஆற்றிவருகின்றன.

ஈழத் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், இலக்கியப் படைப்பாளிகளுக்கு இந்தவாய்ப்புகள் மிகமிகக்குறைவு. அரசாங்க சார்பில் இயங்கும் சாகித்திய மண்டலம் தமிழர்களுக்கான தனது பணியை 1983 ஆம் ஆண்டின் பின்னர் முற்றாக நிறுத்திக் கொண்டுவிட்டது!

அதற்கு ஈடுசெய்யும் விதத்தில் அகில தமிழ்ப் பிரதேசரீதியில், இலக்கியப்படைப்புகளுக்கு பரிசில் வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றல்ல பல உருவாக்கப்படுவது நல்லது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களுக்குச் செய்ய வேண்டியபணியைச் செய்யவில்லை என்பது கண்டு மனம்தளரக்கூடாது. இப்போது பல சங்கங்கள்,மன்றங்கள் செய்வதுபோல, இன்னும் பல பேரவைகள் நிறுவப்பட்டு இலக்கிய கர்த்தாக்கள் கௌரவிக்கப் படவேண்டும்.

அதனை எவர் செய்யினும் காய்தல், உவத்தல் இன்றி, காழ்ப்பு, பொறாமை காட்டாது, செல்வாக்கு, உறவு, பந்தம் என்ற நிலை கடந்து, பாரபட்சம், பாகுபாடு இல்லாமல் செய்வதே சிறப்பாகும். அதுவே உண்மையான கௌரவமும், ஊக்குவிப்புமாக அமையும். ★

# மழையாக கண்ணீர் விடும் தலைவிக்கு மாமருந்தாக வரும் மழையின் குரல்!

வருடம் முழுவதுமே வசந்தகாலமாக இருந்தால், நாளெல்லாம் பௌர்ணமியாக இருந்தால் அதன் இனிமையையும் தன்மையையும் உணர்ந்து மகிழ்ந்திட முடியுமா...?

பழகப் பழகப் பாலும் புளிக்கும்...! தின்னத் தின்னத் தேனும் தெவிட்டும் என்பர்.

அன்றாடம் பால் சாப்பிடுபவனுக்கு இடையிலே 'காப்பி, கூடக் குடித்தறியேன் என்று தான் அவன் சொல்வான். ஆனாலும் அந்தப் பொல்லாத

### இலக்கியக் காட்சி

பிரிவு — காதல் வாழ்வில் காதலனும் காதலியும் காற்றுப்புக இடமில்லாமல் இணைந்திருப்பினும் வந்தேவிடுகிறது.

அந்தப் பிரிவும் ஒருவகையில் காதலுக்குத் தேவைதானே...? பிரிந்திருக்கும் போதுதானே அவள் மீது அவன் கொண்டுள்ள அன்பின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது! பொல்லாத அந்தப் பிரிவுதானே அவளைக் கண்ணீர்மல்க வைத்து அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதை உலகோர் உணரச் செய்துவிடுகிறது!

காதலித்துக் கொண்டிருக்கும் கனவுக்காலத்தில் இருவருக்கும் ஒருவரை ஒருவர் காண்பதும் கலப்பதும் தழுவுவது மட்டுமே குறிக்கோள்...! காதலில் வென்று மனையறம் தொடங்கிய பின் இல்வாழ்வுக்குரிய கடமைகள் முன் வந்து நிற்குமே...! இதழ் முகம் பற்றி மட்டுமே புகழ்ந்து கொண்டு இருந்தால், குழம்புக்கான உப்பு, புளி, மிளகுக்கு அது எப்படிப் பயன்படும்...? கடமை அவனைப் பிடர் பிடித்து உந்துகிறது.

மழைக்காலம் தொடங்கும் போது உன்முன் நிற்பேன் எனப்பலமுறை கூறிவிட்டுத் தான் அவள் பிரியமனதோடு பிரியமனமின்றிப் பிரிந்து செல்ல நினைக்கின்றான். ஆனால் சொல்ல நாவரவில்லை. அப்படிச் சொன்னாலே தாங்குவாளோ? என்னவோ? எனத் தயங்கித் தடுமாறுகிறான்.

சில நாட்களாகவே தன் காதற்கணவனின் போக்கிலும் நோக்கிலும் இருக்கும் தடுமாற்றம் அவன் உயிரில்கலந்த மனத்தில் ஒன்றிய அவளுக்கா புரியாமல் போகும்? பிரிந்துவிடுவாரோ என எண்ணிப் பேதுறுகிற அவளுக்குத் தேறுதல் சொல்கிறாள் தோழி.

'எட்டாம் நாள் வெண்ணிலாப்போன்ற ஒளிமிக்க நெற்றிகொண்ட இளம்பெண்ணே...! உன் அழகுக்கு அழகு தரும் அணிகள் எல்லாம் நெகிழ்ந்துபோகிற அளவுக்கு இப்படி மெலிந்து விட்டாயே...!'

என அன்போடு பேச்சைத் தொடங்குகிறாள் தோழி! உன் நெற்றி அழகும் மேனிப் பொலிவுமே கூட அவன் பிரிவைத் தடுத்திடக் கூடுமே என்று குறிப்பாகச் சொல்கின்றாள். பிரிவை எண்ணியே கன்னங்களில் நீர்க்கோடு போடுகின்ற அவளை எண்ணிப் பதறுகிறாள் தோழி.

நீ இல்லாத கற்பனையை எண்ணித் துன்புறுகிறாய் என ஆறுதல்மொழி கூறுகின்றாள்.

உன் நிலை நினைத்து பிரிவைத் தவிர்ப்பான்...! இல்லை தள்ளிப் போடுவான்...! அல்லது உன் அன்பை நினைத்துப் பாதி வழியிலேயே திரும்பினாலும் திரும்பி விடுவான். பொருளைவிட உன் மீது கொண்ட அருள்தானே அவனுக்குப் பெரிது...! என்த் தேற்றுகிறாள். பிரிந்த இடத்தில் தான் நினைத்து வந்த செயலில் ஈடுபட்டு, உன்னை மறக்க நேர்ந்தாலும் அவ

- டாக்டர் கே. காளிமுத்து -

கார்கால மேகமாகக் கண்கள் பொழியும் மழைத்துளி இளமை வனப்புக்களான செப்பிளம் தனங்களைக் கூட நனைக்கும் அளவு இப்படியா அழுவது என்று கடிந்து கொள்கிறாள்.

அவன் பிரிந்து விடுவான் என்று நீயேன் கற்பனையில் அவதிப்படுகிறாய்...? உன் மீது அளவற்ற அன்பு கொண்டவன் அவனல்லவா ..? ஆகவே பிரியமாட்டான்...? வாழ்வியல் பட்டறிவு இல்லாததால் தான் சின்னப் பெண்ணான னுக்கு இயற்கையே நினைவூட்டுமே...! என்றாள் தோழி.

கார்காலத்தில் வந்துவிடுவேன்என்று சொல்லித்தானே பிரிந்து வந்தாய்... கார்காலம் வந்துவிட்டது; ஓடு...ஓடு உன் காதலியை நோக்கி என இடி இடிக்கிறதாம்...! இடி என்று அதைச் சொல்லப் புலவருக்கு மனம் வரவில்லை.

மனைவியின் சார்பாகக் கணவனுக்கு வரும் இயற்கைத் தொலைபேசி அல்லவா அது...? இடியென்று சொல்லாமல் மழையின் குரலென்று சொல்கிறார். மழையாகக் கண்ணீர் விடும் தலைவிக்கு மழையின் குரலே மாமருந்தாகிறதே...! குழந்தைக்காக – கணவனுக்காக – தாய் தந்தைக்காகக் கண்ணீர் விடுவதே பெண்களின் கதையே...?

நீரின்றி வாழா மீன்கள். அதனால்தான் விழிகளுக்குக் கயலை உவமித்தார்களோ...! என இன்றைய புதுக்கவிஞர் ஒருவர்கூட எழுதினார். ஆனால் பிரிவெண்ணத்துயரும் சங்கத் தலைவியின் சார்பாகக் காதல் தூதாகக் கார்காலத்துக்குக் கட்டியம் கூறித் தலைவனை விரைந்து வீடு நோக்கித் திரும்ப வைக்கிறது...!

இடி—என்பதை 'மழைக் குரல்' என எவ்வளவு நயத்தக்க நாகரிகத்தோடு நவில்கிறார். நொச்சி நியமங்கிழார் எனும் சங்கச் சான்றோர். அழும் தலைவிக்கு ஆறுதல் தரும் தோழிகூற்றாக வரும் நற்றிணைப் பாடல் இது.

விறல் மிகு விளங்கிழை நெகிழ்ச்சா அய்
அறலவிர் நுண்துளி இடைமுலை நனைப்ப
விளிவில் கலிழும் கண்ணொடு பெரிதழிந்து
எவன் நினைவு வாடுதி சுடர் நுதல் குறுமகள்
செல்வாரல்லர் நங் காதலர் செல்லினும்
நோன் மாரல்லர் நோயே மற்றவர்
கொன்னும் நம்பும் குரையர் தாமே
சிறந்த அன்பினர் காயலும் உரியர்
பிரிந்த நம்மினும் இரங்கி அரும்பொருள்
முடியாதாயினும் வருவர் அதன் தலை
இன்றுணைப் பிரிந்தோர் நாடித்
தருவதுபோ ஆம் இப்பெரு 'மழைக்குரலே'

★



அரசன்: மந்திரி! நாட்டில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?

மந்திரி: மன்னர் பிரானே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வரும் சோதனைக்குத் தயார் பண்ணுவதால் இதைக் கவனிக்க நேரமில்லாமல் போய்விட்டது. மன்னியுங்கள் அரசே!

-ராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் எதிர்காலம் சிறப்புற அறிஞர் செய்ய வேண்டியது என்ன?

நமது மக்களுக்கு அறிவியல் மனப்பான்மையும் வளரவில்லை. ஏதோ பழம்பெருமைகளைப் பேசிப்பேசிக் காலத்தை நாம் கழித்துக் கொள்கிருேம்.

தமிழில் ஆங்கில அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்புச் செய்வதோடு (அப்பொருளைப் பற்றிய) மூல நூல்களையும் தமிழில் எழுதத் தொடங்க வேண்டும்.

இப்படிப்பட்ட திட்டங்களை நம் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அறிவியல் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

அவர்கள் ஆங்கிலத்தில் முதலில் சிந்தித்துப் பிறகு அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்தல் கூடாது.

இலங்கையில் மருத்துவம், பொறியியல் படிப்பிற்குரிய பாட நூல்கள் ஏற்கனவே தமிழில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கத்திற்கு வந்துவிட்ட சில ஆங்கில, சமஸ்கிருத சொற்களை மொழிமாற்றம் செய்து கொள்வதை எதிர்ப்பதில் பொருளில்லை.

தமிழ்த் தன்மைக்கு இடையூறு ஏற்படாத வகையில் சமஸ்கிருத சொற்களைத் தமிழில் ஏற்றுக் கொள்வதற்குத் தொல்காப்பியர் பவணந்தி

## எழுத்து சீர்திருத்தம் பற்றி மசேதுங்

முனிவர் போன்றவர்களே விதி செய்துள்ளனர்.

இந்த இரண்டு இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் மொழிக்கு முதலில் வராத ஒலிகள் இன்றைக்கு மொழிக்கு முதலில் வருவதை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவை சங்கு, யவனர், டம்பம், றகிம், ரப்பர் போன்றவை. இந்த மரபு மீறல் நமக்குப் பயன் தருமானல், அதை ஏன் நாம் தள்ள வேண்டும்?

### எழுத்துச் சீர்திருத்தம்

இன் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் காணப் புகுவோம்.

தமிழ் எழுத்து அகரவரிசை முறை மாற்றம் பெற்றுச் சீர்திருத்தம் பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். தமிழெழுத்துக்களில் வல்லமை பெறுவதற்கு இப்போதைய எழுத்துமுறை கடினமாகவுள்ளது என்று பல தரப்புகளும் குறை கூறக் காணலாம்.

தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலையெழுதி, தந்தி போன்றவற்றிலும் இன்றைய கணிப்பானிலும் தமிழ் எழுத்துக்களைப் பெருவாரியாகப் பயன்படுத்த வேண்டுமெனில் சில குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் இன்றியமையாதவை.

ஐ. ஓ. ந. ஔ போன்ற எழுத்துக்கள் சில சிக்கலுடையவை. இவை போன்று, தமிழ்ச் சொற்களில் அதிகம் பயிலாத எழுத்துக்களையும் தேவையின்றிப் பயில வேண்டியுள்ளது. இப்போது நடைமுறையிலுள்ள தந்தை பெரியார் கூறிய எழுத்து வடிவம் கூட இன்னும் மேம்படுத்தப் பெறவேண்டும்.

### யாழ்ப்பாணப் பேராசிரியர்

அண்மையில் இங்கிலாந்திற்குச் சென்றிருந்த போது, லண்டனிலுள்ள வின்ஸ்டன் சர்ச்சில் கல்லூரியில், பணியாற்றக் கூடிய, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிவப்பிள்ளை என்பாரைச் சந்தித்தேன்.

தமிழ்க் கணிப்பான் தொடர்பாகச் சில ஆய்வுகளைச் செய்து, சில புதுமையான உத்திகளை உருவாக்கிய அவரின் திறம் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

பல நூற்ருண்டுகளாகத் தமிழின் எழுத்து முறை வெளிப்பாட்டிற்குரியதாய் அமைந்தமை பற்றி விவாதிக்கின்றனர் சிலர்.

தொல்காப்பியர் சில எழுத்துக்களுக்கு மட்டுமே வடிவு கூறுகிருர். பிறவற்றைப் பிராமி எழுத்து முறைகளிலிருந்தே பெற்றிருக்கிருேம். இவை யாவும் பல்லவர் காலத்தில் உறுதி பெற்று நிறுவப்பட்டவை. அதன் பிறகு சோழர் காலத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

செப்பேடுகளிலும் பனையோலைச் சுவடிகளிலும் ஏற்கத்தக்க சில மாற்றங்கள் உருவாயின. அச்சுக்கூடங்கள் வந்த பிறகே ஒரு நிலையான தகுதியை அவை எய்தின. ஆயினும், இப்போதைய கணிப்பான் போன்ற புதிய கருவிகளுக்கேற்ப மொழியில் சில மாற்றங்களைக் கொணரச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிருேம்.

மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் இப்பகுதியை அணுகுதல் வேண்டும்.

மிகவும் கடினமாயிருந்த சீனமொழி எழுத்துக்களை மாற்றம் செய்ய நேரிட்ட போது சீனவைச் சார்ந்த மாசேதுங் குறிப்பிட்டதாவது:

'ஒரு பழைய வீட்டைப் புதுப்பிப்பது போன்றதல்ல இது. வீட்டை முழுவதுமாக அழிக்கலாம். ஆனல் மக்களின் குருதியில் கலந்த மொழியின் எக்கூறையும், ஓர் அலகைக் கூட சுலபமாக மாற்ற இயலாது. இது கடினமான காரியம்– சத்திர சிகிச்சைபோன்றது இது' என்ருர்.

இதனுல் தடுமாற்றங்கள் நிறைந்த மொழி மாற்றப் பகுதியை மிகமிகக் கவனத்துடன் அணுகுதல் தேவை.

அறிஞர், பெருமக்கள் சிலர் தமிழைப் பயில ரோமன் எழுத்து வடிவைப் பயன்படுத்தலாம் என்கின்றனர். இது பலராலும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

முழுமையாக ரோமன் வரிவடிவிற்கு மாற்றுவது பொருளற்றது. நினைக்கத்தகுவதுமன்று. ஆனல் தொலைதூர நாடுகளிலுள்ள தமிழ் மழலைகள் தமிழ் கற்க வேறு வழியின்மையால் ரோமன் வரி வடிவின் வாயிலாகக் கற்கலாம்.

ஒரு மொழி அடிப்படையில் ஒலிகளைக்கொண்டது தானே தவிர எழுத்துக்களை (வரிவடிவங்களைக்) கொண்டதன்று. இதை நினைவிற்கொள்ளவேண்டும்.

இதற்குரிய வழிகளை நாம் நல்காவிடில், தமிழை முழுமையாக ஒதுக்கிவிட்டு, அந்தந்த நாட்டு மொழிகளைத் தொலைதூர நாடுகளில் தேர்ந்தெடுத்துக் கற்க ஆரம்பிக்கும்

> 21 ஆம் நூற்ருண்டு பிறப்பதற்கு இன்னும் 3,942 தினங்களே உள்ளன.
>
> பதினெரு ஆண்டுகள் கழிந்தவுடன் புதிய நூற்ருண்டு எம்மை வரவேற்கக் காத்திருக்கிறது.
>
> 21 ஆம் நூற்ருண்டில் தமிழின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும்? எதிர்காலம் சிறப்பாக அமைய என்ன செய்ய வேண்டும்?
>
> புதுவை பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் இக் கேள்விகளுக்கான பதில்களை இங்கு தருகின்ருர்.
>
> திருப்பதி வேங்கடேஸ்வர பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய பேருரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.
>
> தொகுத்துத் தருபவர் **திரு. தி. மேனகன்.**

அபாயமும் உண்டு. அதன் பின்னர் நாம் யாரையும் குறைகூறவோ ஓங்கி முழங்கவோ இயலாது.

நம்முடைய கம்பியூட்டர் யுகம், அறிவுலகம் ஒவ்வொரு மணித்துளியும் பெருகுகிறது. தமிழ்ச் சமுதாயத்தில் போதுமானபேருக்கு அறிவின் நிறைவான வளர்ச்சி சென்றடைய வேண்டும்.

### புதிய இலக்கணம்

நடப்பயிலுக்கேற்ப புதிய இலக்கணம் எழுதுவதைச் சிந்திக்கவேண்டும். பன்னெடுங் காலமாக ஒரு மொழியின் இலக்கணம் இறுக்கமாகவே தொடருமானுல் அம்மொழி சிதைவுபடும். செவ்வியல் மொழிகளுக்கு இதுவேதான் நேர்ந்தது. நல்லவேளையாக, திறமையும், அறிவும்மிக்க நம்முடைய இலக்கணக்காரர்கள் மொழிபேசுபவரால் அவ்வப்போது ஏற்படும் சூழலுக்கேற்பப் பழைய விதிகளை மாற்றிப் புதியனவற்றை அறிமுகப்படுத்தினர். இப்போது நாம் சிந்திக்கவேண்டியதெல்லாம் இதழ், வானெலி, அறிவியல் பாடநூல் இவைகளில் பயன்படுத்தப்பெறும் தமிழ் பற்றியே.

தொன்மை முறையைக் கைவிடுதல் என்பது எளிதன்று: ஆயினும் உலகத்தின் பலபகுதிகளில் தமிழ் மட்டுமே பேசத்தெரிந்த தமிழர்களை ரோமன் எழுத்துமுறை மூலமாகத் தமிழைப் பேசவும், எழுதவும் கற்கச்செய்யலாம்.

தென்னுபிரிக்கா மொரீசியஸ், பிஜி, கரிபியன் தீவுகள் போன்ற இடங்களில் வசிக்கும் தமிழர்கள் இம்முறையில் எளிதாக தமிழ் கற்கமுடியும். தமிழின்மீது பற்றுக்கொண்ட அவர்களுக்கு போதிய ஊட்டங்கள் தேவை.

இந்தியாவிற்குப் பிறகு விடுதலைபெற்ற மலேசியா, இந்தோனிசியா போன்ற நாடுகள் இதனையே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

அவர்கள் அங்குள்ள மொழிகளை ரோமன் எழுத்துமுறை மூலமாகவே எளிமையாகக் கற்கின்றனர். எழுத்து மாற்றங்களைச் சீனுவும், ஜப்பானும் கூடக்கொண்டிருக்கின்றன. ஆனல் அவை படிப்படியாகவே இம்மாற்றங்களுக்கான பணியில் இறங்கியுள்ளன.

எவ்வாருயினும் தமிழ் எழுத்துமுறையை அப்படியே உலகம் முழுவதற்குமான ஒரு தரமான பொதுத் தமிழைக் கண்டறிய ஒரு குழு உருவாதல் தேவை. தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பிறநாடுகளில் வழங்கப்பெறும் தமிழ் வழக்கு. வடிவுகளைக் கவனித்து அக்குழு ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

இன்றைக்குத் தமிழ் பயிற்றலென்பது தடைகள் பலவற்றைக் கொண்டுள்ளது?

### வீணுகும் காலம்

வழக்கற்றுப்போன தமிழ்ச் சொற்கள், தொடர்கள் போன்றவற்றையும், பழையதாகிப்போன இலக்கணக் கொள்கைகளையும் பயிற்றுவித்து நாம் காலத்தை வீணுக்கிக்கொண்டிருக்கிருேம்.

நம்முடைய இலக்கியம் பயிற்றுவித்தல்கூடப் பிறருடைய இலக்கியங்களுடன் தொடர்புடையதாகவோ, தேவையான பிற அறிவுத்

## தரமான பொதுத் தமிழைக் கண்டறிய குழு வேண்டும்

துறைகளுடன் தொடர்புடையதாகவோயில்லை. நம் இலக்கியங்களை முழுமையாக உணர இத்தகு தொடர்பு தேவை. ரொபின்சன் குருசோ ஒரு தீவினில் இருந்ததைப் போல நம்மாணவன் தனிமையில் இருக்கும் தனிமைப்பாடு நிகழ்கிறது. தமிழ் முதுகலை பயிலும் ஒரு மாணவன், இதழியல், கணிப்பொறி' அறிவியல், உளவியல், சமூகவியல், மொழியியல்' தத்துவவியல், தருக்கவியல் போன்றவற்றின் அடிப்படைகளையாவது அறிந்துகொள்ள இதுவே சமயமாகும்.

இலக்கியம் பயிற்றுவிப்போர் நவீன உத்திமுறைகள், வசதிகள் இருப்பதால் புதிய வழிமுறைகளை அறிமுகஞ் செய்யச் சிந்தனை செய்தல் வேண்டும். மரபுவழி விரிவுரைகள், ஒலி,ஒளி இழைகளையும் தொலைக்காட்சியையும் கூடுதலாகப் பயன்படுத்தவேண்டும்.

சங்க இலக்கியம், பல மரங்கள், செடிகள், பறவைகள், மிருகங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. குறிஞ்சிமலர், நொச்சி இலை இன்ன பிறவற்றைப் படம் வாயிலாக மாணவர்களுக்கு காட்டினலன்றி அவற்றை அவர்கள் இனங்காண இயலாது.

மாணவர்கள் 'மோப்பக் குழையும் அவிச்சம்' என்பதை அம்மலர் பற்றிய எவ்வித எண்ணமுமின்றி வெறும்கருவி போலத் திருப்பித் திருப்பிச் சொல்கின்றனர்.

### நவீன உத்தி

நவீன உத்திகளின் உதவிகளைக்கொண்டு, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, கோயிற்கலை போன்றவற்றைச் சிறப்பாகக் கற்பிக்க முடியும். கங்கைகொண்ட சோழபுரம், தஞ்சாவூர், மதுரை, திருவரங்கம், திருப்பதி போன்ற இடங்களுக்கும் தமது கல்விக்குகந்த பிற இடங்களுக்கும் மாணவர்களை அழைத்துக் கொண்டு கல்விச் சுற்றுலா சென்றுவருதல் வேண்டும்.

தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்குங்கால் பிராமி, வட்டெழுத்து.. கிரந்த எழுத்து, பல்லவர் கால எழுத்து, சோழர் கால எழுத்து, விஜய நகர மன்னர்கள் எழுத்து போன்ற பழைய எழுத்து முறைகளையும் கற்பித்தால், அம்மாணவர்கள் அவற்றை நேரடியாகக் கட்டுணர்ந்து எளிதாகக் கற்கவியலும், அம்மாணவர்கள் பல்வேறு எழுத்துக்களமைந்த கல்வெட்டுக்கள் அமைந்துள்ள இடங்களுக்கு மாணவர்களை அழைத்துப்போதல் வேண்டும். கல்வெட்டுப் படிப்பு என்பது இலக்கியப் படிப்பின் ஒரு பகுதியாக அமையவேண்டும்.

நம் சைவ, வைணவ துறவிகளாயிருந்த பாவலர்கள் தந்துள்ள பக்தி இலக்கியங்கள் தமிழில் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளன.

தமிழில் குறிக்கத் தகுந்த பணியாற்றி மறைந்த மதிப்பிற்குரிய சேவியர் தனிநாயகம் தமிழைப் பக்திமொழி எனப் புகழ்வார். பக்தி இயக்கம் என்பது தமிழகத்திலிருந்து பிற பகுதிகளுக்குப் பரவியது என்பதை ஆய்வாளர்களும் இன்று பொதுவாக உடன்படுகின்றனர்.

பழம்பெருமை நம்மை முழுமையாக்காது. பழம் பெருமைகள் பேசுவதைத் தவிர்ப்பது இன்று நலந்தரும்.

### பாரதியாரின் வரிகள்

பாரதியார் வரிகள் நமக்கு எச்சரிக்கை தருவன.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல்வேண்டும்:

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றவேண்டும்:

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை: திறமாக புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல்வேண்டும்.'

தமிழ் உலக மொழிகளிடையே ஓங்கிய நிலைபெற வேண்டுமானுல் அதை ஓர் இரவிலேயே பெற்றுவிட முடியாதென்பது நாமுணரவேண்டும்.

புதிய வளர்ச்சிகளைப் பெற்றுள்ள அறிவியல், தொழில் நுட்பம் போன்றவற்றைக் கடினமற்ற வழியில் வெளிப்படுத்தக்கூடிய திறமையைப் பெற்றிருக்கும் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்ய, ஜப்பான் போன்ற வளம் வாய்ந்த மொழிகளுடன் தமிழ்போட்டி போட்டாகவேண்டும் என்பதையும் நினைவுகூரவேண்டும்.

ஊசியும் சிறு தொழிலின் நுட்பம்கூற ஒரு கோடி நூல் வேண்டும் தமிழில், இந்தக் காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகள் எல்லாம் தமிழில் எண்ணிப்பேசி மகிழ நிலைவேண்டும்;

நெடிய கடினமான பயணமொன்று நிகழவேண்டும். நூற்ருண்டுக்கணக்கில் வலிவு சேர்த்துள்ளது தமிழ் என்பதால் தமிழர்கள் அயர்வுறத் தேவையில்லை.

வேறென்ன வேண்டுமெனில் தமிழைப் பொலிவும் திறனுமுள்ள நவீன மொழியாக்கி மனித ஆற்றலின் எல்லா நிலைகளிலும் உள்ள முன்னேற்றங்களுடன் இருபத்தோராம் நூற்ருண்டில் அடியெடுத்து வைக்கத் தமிழ் பேசும் மக்கள் முற்படவேண்டும்.

தமிழ் வலிமைமிக்க மொழி, காலமெல்லாம் சிரிளமைத் திறன்கொண்ட மொழி. அம்மொழியைக் விஞ்ஞான யுகத்துக்குத்தக்க அறிவியல் மொழியாக ஆக்கமுடியும். ஆக்க வேண்டும். அதுவொன்றே இன்றைய தலைமுறையின் கடமை.

**டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணிம்**

★

# விஞ்ஞான நோக்கில் ஓவியக்கலை வளர்ச்சி செல்வி வாசுகி ஜெகநாதனின் புதிய பார்வை

வித்தியாசமான ஓவியக் கண்காட்சி ஒன்று கடந்த வாரம் யாழ்நகரில் இடம் பெற்றது.

செல்வி வாசுகி ஜெகநாதனின் படைப்புக்கள் இக் கண்காட்சியில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பிரான்ஸிய நட்புறவுச்சங்க ஆதரவில் சங்க மண்டபத்தில் கடந்த மாதம் 21 முதல் 25 ஆம் திகதி வரை இக்கண்காட்சி இடம் பெற்றது.

செல்வி வாசுகி ஜெகநாதன் ஓவியத்துறையில் வித்தியாசமான பார்வையைக் கொண்டவர் என்பது அவரின் படைப்புக்களை பார்த்த மாத்திரத்திலேயே புலனுகின்றது.

சுழித்து விடப்பட்ட பரத்துண்டுகள்' போல்ட் பொயின்ட் பேனுக்கள், சவர்க்காரம் ஆகியவற்றிலும் அவரது கைவண்ணம் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

23 வயதான செல்வி வாசுகி ஜெகநாதன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிப் பழைய மாணவியான இவர் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் உயிரியல் — விஞ்ஞானத்துறைப் பிரிவில் கல்வி பயின்று வருகிருர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவியாக இருந்த சமயம் அங்கு ஓவிய ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி எம். பி. ஆர். சின்னப்புவிடம் ஓவியம் பயின்ருர்.

1986 முதல் ஓவியர் திரு. அ. மாற்குவிடம் பயிற்சி பெற்று வருகிருர்.

ஓவியக்கலையில் தான் கொண்டுள்ள ஈடுபாடு பற்றி செல்வி வாசுகி பின்வருமாறு கூறுகிருர்:

வருமானத்திற்காக ஓவியக் கலையை நான் பயிலவில்லை. விஞ்ஞானத்தையும் கணக்கியலையும் ஓவியத்தில் பிரதிபலிக்கச் செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதே எனது இலட்சியம்.

சிதைந்து போகும் எமது கலாசாரத்தை ஓவியம் அல்லது சிற்பம் மூலமாக எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என்பதும் எனது கருத்தாகும்.



வாசுகி ஜெகநாதன்

ஓவியர் திரு. மாற்கு பின்வருமாறு கூறுகிருர்:

எனது கூட்டில் வளர்ந்து ஓவியக்கலையைப் பழகி வருபவர் செல்வி வாசுகி.

சொந்தக் காலில் நின்று தனது திறமையை நிலைநாட்டக் கூடியவராக [illegible] வளர்ந்து விட்டார்.

இக்கண்காட்சியில் அவரின் கலைத்திறமை பெரும்பாலும் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளத்தில் பதியும் ஓவியங்களையே அவர் அட்டையில் தீட்டுகிருர்.

கண்ணுடியில், களிமண்ணில், கடதாசியில் கழிவுப் பொருள்களில் அவரது ஓவியங்கள் பளிச்சிடுவதைக் காண்கிறேன்.

இப்படி திரு. மாற்கு கூறுகிருர்.

கண்காட்சியில் இடம் பெற்ற இவரது படைப்புக்களில் உயர் படிப்பு, சிதைந்த மண்டபங்கள், போராளிகள், 2 – 2 – 83, சகமனிதன், மரணச்சுவடுகள் ஆகிய தலைப்புக்களிலானவை சமகால நிகழ்வுகளைக் காட்டும் ஓவியங்களாக அமைந்துள்ளன.

ஓவியக் கலையைப் புதிய பார்வையில் நோக்கும் செல்வி வாசுகி ஜெகநாதனை ஈழத்து ஓவியக்கலை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறு [illegible]

**பேட்டி: அகில்ராஜ்**

★

# வாழ்வின் பூரணத்துவமே 'அம்மா'

சுற்றிலும் நாம் காணுவது எல்லாம் 'தெய்வ அம்மா'வின் திருவிளையாடலே.

அம்மா என்று ஏன் சொல்லுகிருேம்'

எந்தத் தத்துவத்தை அல்லது எந்தப் பெருமையை அல்லது இயல்பை அந்தச் சொல் தெரிவிக்கிறது?

மலர் போன்ற குழந்தைப் பருவத்தில் தொடங்குகின்ற வாழ்க்கையின் ஆரம்ப அர்த்தமே 'அம்மா' என்பது தான்.

அந்தச் சொல்லுக்கு ஈடு, இணை இல்லை.

மூல முதல், காரணம், கருப்பை, ஆதாரவேர், அடிப்படை நிலம் முதலிய பல சொற்கள் ஒரு ஐடதத்துவத்தைக் குறிப்பிடலாமே தவிர ஆன்மா அறியும் முதல் ஆசு எழுச்சியான 'அம்மா' என்னும் உணர்வில் உள்ள அன்பு, அழகு, இனிமை, ஒருமை ஆகிய நயங்களை அவை தர முடியாது.

வாழ்க்கையில் ஒரு பூரணத்துவத்தைக் காண வேண்டுமானுல்—

அதற்கு ஒரு முழு அர்த்தம் சொல்லவேண்டுமானுல்— கலை, இலக்கியம் என்று நாம் குறிப்பிடுகின்ற அந்த இனிய ஆத்ம திருப்தியை உணர வேண்டுமானுல்—

வாழ்க்கை என்னும் பாடல் எந்த ராகத்தில் தொடங்கியதோ அந்த ராகத்தில் முடியவேண்டும்.

ஆரம்ப ராகத்துடன் அது இரண்டறக் கலக்கவேண்டும்.

ஆரம்பம் 'அம்மா' என்ருல் நிறைவும் அவளேதான்.

வாழ்வின் பூரணத்துவமே 'அம்மா'

'அவள்' என்பது ஓர் ஆளைக் குறிப்பிடவில்லை.

'அவள்' எல்லா மனிதர்களாகவும், எல்லாத் தத்துவங்களாகவும் விளங்குகிருள்.

யாராவது ஓர் ஆள் உண்மையான தாயின் தன்மைகளுடன் விளங்கும்போது, அந்த ஆளின் தலைகள் உடைகின்றன. அதற்கு மேலே தேவைகளும் இல்லை. வளர்ச்சியும் இல்லை.

'அம்மா' என்ற நிலைக்கு அப்பால் வளர்ச்சி இருக்க முடியாது.

காரணம் எல்லா வளர்ச்சியும் அவளுக்கு உள்ளேயே அடக்கம். எல்லா இயக்கமும் அவளே.

உலகில் நாம் காணுவது எல்லாம் சக்தியின் இயக்கம், உருவம், உருமாற்றம், உயிர்த்துடிப்பு, ஊசலாட்டம்.

'சக்தி' என்பது பெண்பால் பெயர்ச்சொல். எனவே நாம் இதை 'அவள்' என்றும் 'அம்மா' என்றும் அழைக்கிருேம்.

சுய உணர்வு, சுயகட்டுப்பாடு, சுயமாக அறிவித்தல் ஆகிய ஆற்றல்களே, வீரியமே, வலிமையே 'சக்தி' என்பது.

ஆற்றலைப் பற்றிய பேச்செல்லாம் சக்தியின் புகழ் அமுதை அள்ளுவதாக இருக்க வேண்டும்.

'ஓம் சக்தி' என்று உலக நாயகனின் திருப்பெயரை உச்சரித்து வெற்றிபெறுவோம்.

மலைபோன்ற தடைகளையும் வைக்கோல் போலச் சுட்டு எரித்துவிடும். பயங்கரத் தீப்பொறி அன்னையின் திருப்பெயர் தான்.

அன்னை வேண்டுவது நம் பணிவான அன்பை அல்ல. சுட்டுச் சுடர்விடும் அன்பை அவள் கேட்கிருள்.

அதை நாம் உள்ளத்தில் மூட்டுவோம். உலகெங்கும் பரப்புவோம். ★

**சுவாமி ஈஸ்வரானந்தகிரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகப் பெரிய சிகரெட்

உலகிலேயே மிகப்பெரிய சிகரெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தயாரிக்க 90 இருத்தல் புகையிலை செலவாகியது.

மேற்கு ஜெர்மனியில் அருங்காட்சியகத்தில் இந்த சூப்பர் சிகரெட் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு 'சங்கிலித் தொடர்' புகைப்பவராக இருந்தால் கூட இதை எவ்வளவு நேரமானாலும் புகைத்துக் கொண்டே இருக்கலாம்.

புகைபிடிக்கும் பழக்கம் உள்ள ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் புகைத்துக் கொண்டே இருக்கலாம். (இதைப் பற்ற வைக்கமுடிந்தால்)

சிகரெட்டைப் புகைத்து முடிவதற்குள் அவரின் வாழ்நாள் முடிந்துவிடாதா என்பதற்கு என்ன உத்தரவாதம்?

★

## சிரித்துக் கொண்டே அழுவோம்

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று சொல்வார்கள்.

சிரிப்பு மட்டும் நோய் தீர்க்கும் மருந்து அல்ல.

அழுவதும் நோயைத் தீர்க்கும் ஒரு அருமருந்து என்று சொல்கிறார் மருத்துவ விஞ்ஞானிகள்.

நாம் அழும்போதோ, உணர்ச்சிவசப்படும் போதோ வரும் கண்ணீர் நம் கண்களைக் கழுவுவதோடு, கண்ணின் நலத்தைப் பாதிக்கக்கூடிய (Toxins) ரொக்ஸின்ஸ் எனப்படும் கிருமிகளும் கண்ணீருடன் வெளியேறுகின்றன என்கிறார்கள் மருத்துவ விஞ்ஞானிகள்.

அதனால் தான் என்னவோ சிரித்துக்கொண்டே சிலர் அழுகின்றனர் போலும்! ★

## தேனியின் உதவி

தேனீக்களும் போரில் பங்கு கொண்டிருக்கின்றன.

முதலாம் ஹென்றியை (1100 – 1135) பிரான்ஸ் நாட்டரசன் ஒருவன் முற்றுகையிட்டபோது எதிரிப்படை மீது தேன்கூடுகள் எறியப்பட்டன.

தேனீக்களுக்குப் பயந்து குழப்பமடைந்த படை முற்றுகையைக் கைவிட்டது.

மேலும் முதலாம் ரிச்சர்ட் என்னும் அரசன் பகைவர் மீது தேன்கூடுகளை எறிந்து குழப்பம் உண்டாக்கி அவர்களின் கோட்டைகளைப் பிடித்தான். ★

## வேப்பம் சருகின் அருமை தெரியுமா?

வேப்பம் சருகு பொன்னிறமாக உதிர்ந்து பொலிகிறது.

கூட்டி அள்ளி வெளியே வீசாமல் வாழைப்பாத்தியில் அல்லது பயன்தரும் மரத்தடியில் இட்டுவைத்தால் வாழையில் குருக்கன் விழாது

வேறு தாவர நோயணுகாது பயன்தரும். இந்த அனுபவத்தைக்கண்டு பிறருக்கும் அறிவியுங்கள். ஆராய்ச்சி உங்களுக்கே உரியது.

ஏப்ரல் பதினைந்தளவில் வேம்பு கொத்துக் கொத்தாகப் பூக்கும். வேப்பம் பூ சொரியும்போது, பாய்விரித்துச் சேகரித்தும் உலர்த்தியும் வைக்கலாம். உடன் உபயோகமும் செய்யலாம். உடன் உபயோகத்தில் வடகம் சிறந்த தயாரிப்பாகும்.

இன்னும் அன்றாடம் ரசம் தயாரிக்கும்போது சிறிதளவு அதிலிட்டுப் பருகலாம்.

இன்னும் வேப்பம் தளிர் ஒரளவு செந்நிறமாக இருக்கும்போது கொய்து சிறிதளவு எடுத்து அரைத்து உருட்டி வாயிலிட்டு விழுங்கினால் பல குடல்நோய்கள் இன்னும் காய்ச்சல், தடிமன் முதலியன குணமாகும்.

ஆகவே வேம்பைப் பேணுவது கரும்பான செயல் அல்லவா! (மி.வை)

## பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

## டிஸ்ரேலியின் அரசியல் 'பகிடி'

பெஞ்சமின் டிஸ்ரேலி அயர்லாந்து அரசியல்வாதி.

தேர்தலில் நின்றபோது ஒருமுறை வீதி, வீதியாகச் சென்று பிரசாரம் செய்தார்.

ஓர் ஏழை விவசாயியைப் பார்த்து தமக்கு வாக்களிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொண்டார்.

அவரை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு, "உங்களுக்கு வாக்கு அளிப்பதைக் காட்டிலும் சைத்தானுக்கு வாக்களிக்கலாம். நீங்கள் போய் வாருங்கள்" என்றான் ஏழை விவசாயி.

அப்போதும் அவனை டிஸ்ரேலி விடவில்லை.

"அது சரி அப்பா! உங்கள் நண்பர் வாக்குக்கேட்டு வராவிட்டால் எனக்காவது போடலாம் அல்லவா?"— என்று சிரித்தபடி வேண்டுகோள் விட்டார் ★

## பாரதிதாஸனுக்கு வந்த ஆவேசம்

நாத்திகக் கருத்துக்கள் பரப்பப்பட்ட காலத்தில் ஆத்திகக் கவிஞர் ஒருவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

அவர் நாத்திகர்களுக்குப் பதில் கூறுவதுமாதிரி ஒரு பாடல் புனைந்தார்.

அவர் மனதிலே இருந்த ஆத்திரம் அந்தப் பாடல்வரிகளிலும் தெறித்தது.



'அடா, புடா' என்ற வார்த்தைகளையும் அதில் அவர் பயன்படுத்தி இருந்தார்.

'இல்லை என்பான் யாரடா? தில்லையிலே போய்ப்பாரடா?' என்று துவங்கிற மாதிரி அவர் அந்தப்பாடலைப் புனைந்திருந்தார்.

இந்தப்பாடல்பற்றி யாரோ புரட்சிக்கவிஞர் பாரதிதாஸனிடம் தெரிவித்துவிட்டனர்.

அவ்வளவுதான்... உடனே அதே பாணியில் தனது கருத்தை அடித்துக்கூறுவது போல் பாரதிதாஸன் ஒரு பாடலைப் புனைந்தார்.

'இல்லையென்பேன் நானடா! தில்லையிலும் தேடிப் பார்த்தேனடா!'

★

## பல்வலி நீங்க

எலுமிச்சம் பழச்சாற்றில் கசகசாவை ஊறவைத்து வெண்ணெய்போல் அரைத்து முகத்தில் தேய்த்து ஐந்து நிமிடங்கள் காயவிட்டு தேய்த்துக் குளித்து வர முகம் அழகாகும்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து குளித்துவரவேண்டும்.

எலுமிச்சம் பழச்சாற்றைத் தண்ணீரில் கலந்து கொப்பளித்து வர பல்வலி ஏற்படாது.

இரவு படுக்கைக்குப் போகுமுன் கொப்பளிப்பது நல்லது.

—உணவு வைத்தியம் என்ற நூலில் இருந்து. ★

## பொன் மொழிகள்

நல்லவன் இவ்வாறு இருக்க வேண்டும்; அவ்வாறு இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்தது போதும். இனி நீ நல்லவனாக இருக்கக் கொஞ்சம் முயற்சி செய்வாயாக.

★

## மோசமான மழை!

மழை
சுத்த மோசம்
பாருங்களேன்
போன வாரம் தான்
போட்ட ரோட்டை
அரித்தெடுத்து
காண்ட்ராக்டருக்கு
கெட்ட பெயர்
வாங்கித் தருகிறதே!

— கே. கந்தவேள்

# உழைப்பை நிறுத்தினால் என்ன நடக்கும்?

ரொக்பெல்லர், அமெரிக்க கோடீஸ்வரர். அவர் ஒரு தடவை விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் ரொக்பெல்லரைப் பார்த்து "ஐயா, தாங்கள் போதுமான அளவு செல்வம் சேர்த்துவிட்டீர்கள். உங்களுக்கு எந்தவித கவலையோ தொல்லையோ இருக்க முடியாது. இவ்வளவு முதுமையிலும் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருக்கிறீர்களே இது தேவைதானா? ஓய்வு எடுத்துக்கொண்டு ஓரிடத்தில் இருந்து அமைதியாகக் காலத்தை ஓட்டலாம் அல்லவா?" என்றான்.

'நல்ல கேள்வி' என்று சிரித்துக்கொண்டே ரொக்பெல்லர் தொடர்ந்தார்:

"தம்பி! இப்போது நாம் பயணம் செய்துகொண்டிருக்கிறோமே. இந்த விமானத்தைத்தான் உச்சிக்குக் கொண்டு வந்துவிட்டார்களே இனி இந்த இயந்திரங்களை நிறுத்திவிட்டால் என்ன?"–

இளைஞன்: "அது எப்படி முடியும்? இயந்திரங்களை நிறுத்திவிட்டால் நமது விமானம் விபத்துக்குள்ளாகி தரையில் மோதிவிடுமே! நாம் சாக வேண்டி அல்லவா நேரிடும்"—

ரொக்பெல்லர்: "தம்பி—விபத்து என்ற சொல் காதில் விழுந்த உடனே நீ என்ன பயப்படுகிறாய்! நமது வாழ்க்கையும் ஒரு விமானப் பயணம் போன்றதுதான். நாம் என்று உழைப்பை நிறுத்தி விடுகிறோமோ அன்றே நமது உடலும் மனமும் சீர்கெட்டு விடும். நமது மனதைவிட்டு மகிழ்ச்சி பறந்தோடிவிடும். நமது உடலைவிட்டு ஆரோக்கியம் போய் எந்த நிமிடமும் மரணம் என்ற விபத்துக்கு நாம் உள்ளாக நேரிடும்"— என்று சொன்னார்.

★

# உலகத் தலைவர்களை கௌரவித்து ஷா நிகழ்த்திய வானொலி உரை

அறிஞர் பெர்னட் ஷா எப்போதுமே தன்னைப்பற்றி பிரமாதப்படுத்திப் பேசிக் கொள்வார்.

ஒருசமயம் இங்கிலாந்து வானொலியில் அவர் பேசுவதாக இருந்தது.

அவர் தன் பேச்சைத் துவக்கிய விதமே விசித்திரமாக இருந்தது.

அதாவது பொதுக்கூட்டங்களில் பேசுபவர் தன் முன்னே அமர்ந்திருப்பவர்களில் சிலரை முதலில் குறிப்பிட்டுவிட்டு பேச்சைத் துவங்குவார்களே. அதே மாதிரி இவர் வானொலி உரையைக் கீழ்க்கண்டவாறு துவக்கினார்.

"மாட்சிமை தங்கிய இங்கிலாந்து பேரரசின் சக்கரவர்த்தி அவர்களே—

மதிப்பிற்குரிய இங்கிலாந்தின் பிரதமர் அவர்களே—

அன்புக்குரிய அமெரிக்க ஜனாதிபதி அவர்களே—

பிரியமுள்ள பிரான்ஸின் அதிபர் அவர்களே...!"

இப்படி உலக நாடுகளின் தலைவர்களை எல்லாம் அவர் குறிப்பிட்டு, 'எனது உரையைக் கேட்க ஆவலாய்க் காத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கம்' என்று கூறிவிட்டு தனது உரையைத் துவக்கினார்.

இது நடந்து சிலநாள் கழித்து அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது சிலர் அவரிடம் ஒரு கேள்வியை எழுப்பினர்கள்.

"ஐயா பெர்னட்ஷா அவர்களே! வானொலியில் நீங்கள் பேசிய அன்று ஒருமைக்கையும், உங்களையும் தானே ஒரு தனி அறையில் பூட்டி வைத்திருந்திருப்பார்கள்.

ஆனால் நீங்கள் என்னவோ உலக நாடுகள் அதிபர்கள் அமர்ந்திருக்கும் மன்றத்தில் நின்று பேசுவது மாதிரி அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு விட்டு பேசினீர்களே அது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று கேட்டார்கள்.

அதற்கு சற்றும் தயங்காமல் ஷா எழுந்து பதில் கூறினார்.

"ஷா பேசுகிறேன் என்றால் நிச்சயம் இந்த உலகத்தின் முக்கியஸ்தர்கள் எல்லாம் தங்கள் வீட்டு வானொலிப் பெட்டிமுன் அமர்ந்து அந்தப் பேச்சை கேட்டிருப்பார்கள். எனவே அவர்களை மரியாதைப்படுத்தும் கடமையில் இருந்து தவறக்கூடாது என்றுதான் அவர்களுடைய பெயர்களை முதலில் குறிப்பிட்டேன்" என்றார் ஷா! ★

# பாடுவதிலே இரு வகை!

அக்பருடைய அவையில் மிகவும் முக்கியமானவராக விளங்கிய தான்சென் பெரும் இசைக்கலைஞர்.

ஒருநாள் அக்பர் அவரிடம் கூறினார்... 'உங்களை விட மிகச்சிறந்த சங்கீத வித்துவான் வேறுயாரும் இருக்க முடியாது என்பது என் கருத்து.'

'என்னுடைய குருநாதர் ஹரிதாஸ் முன் நான் எம் மாத்திரம்? அவர் அற்புதமாகப்பாடுவார். ஆனால் அவரைப் பாடச் சொல்வதுதான் கஷ்டம். கடவுளைத் தவிர வேறுயாரையும் அவர் மதிப்பதில்லை' —என்று பதில்சொன்னார் தான்சென்.

அந்தப் பாட்டைக் கேட்டுத் தன்னை மறந்து லயித்துப் பாடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் பாடிக்கொண்டிருந்தார்.

அந்தப் பாட்டைக் கேட்டு லயித்துப் போனார் அக்பர். பின்னர் தான்சென்னிடம் கேட்டார்: 'நீர் ஏன் இம்மாதிரிப் பாடுவது இல்லை?'—

தான்சென் சொன்னார், 'நான் உங்களைத் திருப்திப் படுத்தப்பாடுகிறேன். அவர் தன் அந்தராத்மாவைத் திருப்திப்படுத்துவதற்காகப் பாடுகிறார். அதுதான் காரணம்.' ★

## ஆயிரம் அடி ஆழத்தில் அணுக் கழிவுகள்

அமெரிக்காவில் 120 க்கும் மேற்பட்ட அணு உலைகளில் பல ஆண்டுகளாகத் தேங்கி நிற்கும் சுமார் 70 ஆயிரம் தொன் அணுக்கழிவுப் பொருள்களுக்கு இறுதியில் இப்போது விமோசனம் ஏற்படலாம் என்று தோன்றுகிறது.

இந்த அணுக்கழிவுகளை அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நெவாடா பாலைவனத்தில் ஒரு மலைக்கு அடியில் 1,000 அடி ஆழத்தில் புதைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அணுக்கழிவுகளுக்கான ஆழ் சமாதி லாஸ்வெகாஸ் நகரில் இருந்து சுமார் 95 மைலில் அமைக்கப்படும்.

இது யக்கா மலைத்திட்டம் (Yucca Mountain Project) என்று குறிப்பிடப்படுகிறது.

## செவ்வாய் தோஷம் பிடித்த வி. க.

தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

காரைக்குடி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் மன்றத்தில் உரை நிகழ்த்த ஒருநாள் அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

பள்ளியில் இருந்த மாணவிகள் அவரைக் கண்டதும் "திரு. வி. க. வாழ்க! திரு. வி. க. வாழ்க!!" என்று வாழ்த்தி வரவேற்றனர்.

பிறகு மேடையில் திரு. வி. க. பேசத் தொடங்கினார்.

"எனக்குச் செவ்வாய் தோஷம் உள்ளது என்று சோதிடர் சொன்னார். இத்தனைச் 'செவ்' வாய்கள் என்னை வாழ்த்தும் போது அந்த ஒரு செவ்வாய் என்னை என்ன செய்துவிடும்?" என்று சொன்னாரே பார்க்கவேண்டும்!

'செவ்' வாய்கள் சிரித்தன. ★

# கழுகுக்கு உதவாமல் கறையானுக்கு ஏன் உதவி செய்ய வேண்டும்?

சீன நாட்டில் சிறந்த ஞானிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் சுவாங்சே. அவருக்கு எண்ணற்ற சீடர்கள் இருந்தனர்.

முதுமையில் தளர்ச்சி அடைந்திருந்த சுவாங்சே மரணப்படுக்கையில் இருந்தார். மருத்துவர்களும் அவர் உயிரைக் காப்பாற்ற இயலாது என்று கைவிட்டுவிட்டனர்.

அவருடைய சீடர்கள் அவரை எப்படிச் சிறப்பாக அடக்கம் செய்வது என்று தங்களுக்குள் உரக்கப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த சுவாங்சே கண்விழித்தார். சீடர்களை அருகே அழைத்து மெல்லிய குரலில் "என் பிணத்தை அடக்கம் செய்வதற்காக ஏன் இப்படிக் குழம்பிக்கொள்கிறீர்கள். பரந்த பூமியும், விரிந்த வானமும் எல்லோருக்கும் வாய்ந்த சவப்பெட்டி என் பிணத்தை பரந்த வெளியில் எங்காவது போட்டுவிட்டுச் செல்லுங்கள். அதுதான் இயற்கைமுறை. இதைவிட்டு ஆடம்பரமான முறையில் ஊர்வலம் நடத்தி என்னை அடக்கம் செய்வதை நான் விரும்பவில்லை" என்று சொன்னார்.

இதைக்கேட்டுச் சீடர்கள் திகைத்தனர். அவர்களில் ஒருவன் மிகவும் பணிவுடன் "குருவே தாங்கள் சொன்னபடிசெய்தால் தங்கள் உடலைக் கழுகுகள் கொடூரமாகக் கொத்தித் தின்னுமே" என்று கேட்டான்.

அதற்கு சுவாங்சே "பூமிக்கு மேலானால் கழுகுகள் கொத்தித்தின்னும். கீழானால் கறையான்கள் மெல்ல மெல்ல அரித்து உண்ணும். எப்படியானால் என்ன? கழுகுக்கு உதவி செய்யக்கூடாது. கறையானுக்கே உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது" என்றார். (க.க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடர் பயில்வோர்

க. பொ. த. உயர்தர மாணவருக்கு உரியது

### விஞ்ஞான விளக்கம் தருக

**வினுக்கள்:**

(1) துளம்புக் குடம்பி, கூட்டுப் புழு என்பன நீரின் மேல் மட்டத்தில் இருத்தல்.
(2) வாயினுல் சுவாசிக்காது மூக்கினுல் சுவாசித்தல் சிறந்தது.
(3) தொடர்ந்து உடற்பயிற்சி செய்த நதியா தசைப்பிடிப்பினுல் பாதிக்கப்பட்டார்.
(4) சதுப்பு நிலத் தாவரங்களில் சுவாசவேர் காணப்படும்.
(5) ஒலிப்பதிவு நாடாவிலிருந்து ஒலிபெருக்கப்படும் தனது குரலை ஒருவரால் தனது குரல் என முதல்தடவை அடையாளம் காணமுடியாது.
(6) ஒலிபெருக்கி பாவிக்கப்பட்டால் தொலைவிலிருந்தும் ஒலியைக் கேட்கலாம். ஆனுல் தொலைபன்னியில் ஒலியைக் கேட்பதற்கு அதன் வாங்கியை காதினருகே வைக்க வேண்டும்.
(7) இரு காதுகள் இருப்பதால் எங்களுக்கு அனுகூலமுண்டு.
(8) ஆகாய விமானத்தில் செல்பவர்களுக்கு சுவிங்கம் போன்ற இனிப்புப் பொருள்களை உமியும்படி கொடுக்கப்படுகிறது.
(9) சினிமாக் கொட்டகைச் சுவர்களின் உட்புற மேற்பரப்புக்களை மினுக்கி பளபளப்பாக வைத்திருப்பதைவிட கரடுமுரடானதாக வைத்திருப்பது மிக ஏற்றது.
(10) ஒலியெழுப்பியவண்ணமிருக்கும் சைக்கிள் மணியைக் கையால் பிடித்தால் அதன் ஒலி குறைகின்றது.
(11) பதிவுசெய்யப்பட்ட பட்டிகை (கசெட்) நாடாக்களை வன்மையான காந்தத்திற்கருகில் களஞ்சியப்படுத்தல் புத்திசாலித்தனமானதல்ல.
(12) மின்னலும் முழக்கமும் ஒரேசமயத்தில் நடைபெறுகின்றது. ஆயினும் நாம் மின்னலை முதலில் பார்க்கிருேம். முழக்கத்தைப் பின்னரே கேட்கிருேம்.

**குறிப்பு:** மாணவர்கள் இவற்றிற்கான விளக்கங்களை முதலில் சுயமாகச் சிந்தித்த பின்னரே விடைகளைப் படிக்க வேண்டும்.

**விடைகள்:**

(1) நுளம்பினது குடம்பியும் கூட்டுப் புழுவும் நீரினுள் வசித்தாலும் சுவாசக் குழாய்களின்மூலம் வளிமண்டல வளியையே சுவாசிக்கும். இதனுல்தான் இக்குழாய்களை நீர் மட்டத்தின்மேல் நீட்டிக்கொண்டிருக்கும். நீரில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் தற்பாதுகாப்புக்கருதி அடிக்குச் சென்ருலும் மீண்டும் சுவாசிக்க மேலே வரும்.
(2) மூக்கினுல் சுவாசிக்கும்போது மூக்கிலுள்ள மயிர்கள் தூசுகளைத் தடுப்பதுடன் மூக்கில் உடசுரக்கப்படும் சீதமும் வளியின் தூசை அதில் தடுக்கிறது. மூக்கினூடாக வளிசெல்லும்போது அது உடல் வெப்பநிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. அத்துடன் மூக்கு மணத்தை அறியும் அங்கமாகும். இதனுல் அசுத்தமான வளியைச் சுவாசித்தல் தடுக்கப்படும்.
(3) நதியாவின் தசைக்கலங்களில் காற்றின்றிய சுவாசத்தினுல் இலத்திரிக்சமிலம் தேக்கப்பட்டதால் தசைப்பிடிப்பு ஏற்பட்டது.
(4) சதுப்பு நிலத்தில் வளி அடக்கம் குறைவு எனவே சுவாச வளியை இத்தாவரங்கள் மண்ணிற்கு மேற்பகுதியினுல் உள்ள சுவாச வேரினுல் பெறும்.
(5) நாங்கள் ஏற்படுத்தும் ஒலி வளியினூடாக எமது காதுகளை அடையுமுன்னர் ஊத்தேக்கியோவின் குழாயினூடாக நடுக்காதை அடைந்துகேட்கப்படுகிறது. இது 1/10 செக்கனுக்கு மூளையில் நிலைத்து நிற்கும். இதற்கிடையில் வளியினூடாக வரும் அதே ஒலி கேட்கப்படமாட்டாது. இதனுல்தான் பேசும்போது வளியினூடாக வரும் தனது ஒலியை ஒருவர் கேட்டு அனுபவப்பட்டிருக்கமாட்டார்.
(6) ஒலிபெருக்கியின் வாயில் கூடிய திணிவுள்ள வளி அதிருகிறது. இதனுல் கூடிய உரப்புள்ள ஒலிச்சக்தி உண்டாகிறது. தொலைப்பன்னியின் வாங்கி சிறிதாக இருப்பதால் அதன் மென்றகடு குறைந்தளவு வளியையே அதிரச் செய்கிறது. அதனுல் உப்புக்குறைந்த ஒலிச்சக்தியே உண்டாகிறது.
(7) இரு காதுகள் இருப்பதால் ஒலியின் திசையை நாம் அறிய முடிகிறது. ஒலி ஒரு காதை அடைவதற்கு முன்னர் மற்றக்காதை அடைவதால்தான் திசை அறியப்படுகிறது.
(8) மேலே செல்ல அமுக்கம்குறைவதால் ஊத்தேக்கியோவின் குழாய் அழுத்தப்படுகிறது. தடுக்காது அமுக்கமானது வெளிக்காது அமுக்கத்திலும் கூடுவதால் செவிப்பறை வெளிநோக்கித் தள்ளப்பட கேட்டல் குறைந்து காதடைப்பு ஏற்படுகிறது.
(9) சினிமாக் கொட்டகைச் சுவர்கள் பளபளப்பாக இருந்தால் ஒலித்தெறிப்பு நிகழும். இதனுல் எதிரொலி தோன்றும். சரடுமுரடாக இருந்தால் மேற்பரப்பு அதிகரிக்கிறது. இதனுல் அதிகளவு ஒளி உறிஞ்சப்படுகிறது.
(10) அதிர்வினுலேயே ஒலி உண்டாகிறது. கையால் பிடிக்கும்போது அதிர்வு குறைவதால் ஒலி அற்றுப்போகின்றது.
(11) பதிவு செய்யும்போது காந்தப்புலத்திற்கேற்றவாறு நாடாவிலுள்ள இரும்பொட்சைட் துணிக்கைகள் குறிப்பிட்ட கோலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. வன்மையான காந்தப்புலத்தினுல் இக்கோலத்தின் அமைப்பு மாற்றப்படலாம்.
(12) மின்னலும் முழக்கமும் ஒரே நேரத்தில் தோன்றுகின்றது. ஒலியிலும்பார்க்க ஒளிவேகம் கூடியது. ஒளி முதலில் கண்ணை அடைகிறது. ஒலிபின்னர் காதை அடைகிறது.

— வேலணையூர். கே. எஸ். ஆனந்தன்

## யோகாசனம் பழகுவதால் உண்டாகும் நன்மை

1. உயர்க்கருவிகளாகிய இருதயம், சுவாசப்பை, ஆகியவற்றை நல்ல நிலையில் வைக்கும். இரத்த ஓட்டத்தைச் சுறுசுறுப்பாக்கி அசுத்தத்தை வெளியேற்றும். குழலற்ற சதைக் கோளங்களை ஒழுங்காக வேலைசெய்யப் பண்ணும். நோய்க் கிருமிகளைக் கொன்று சீவசக்தியை அதிகரிக்கச் செய்யும்.

2. வளர்ச்சி, ஆண்மை, பெண்மை உன்னதம் பெற உதவும். உடல் வனப்பை அதிகரிக்கும், ஊழைச்சதை உண்டாகாது தடுக்கும், ஆயுளை அதிகரிக்கச் செய்யும்.

3. மூளையை அபிவிருத்தி செய்யும். நரம்புகளையும், அவற்றின் உபாங்கங்களையும் பெலப்படுத்தி வேலைசெய்யத் தூண்டும். காம, குரோத, உலோப, மத மத்சரங்களைப் பரிசுத்தம செய்யும். மனச்சாந்தியை உண்டாக்கும்.

தொகுப்பு: க. கனகராசா

# எண் சோதிடத்தின்படி திருமணம் செய்யலாமா?

விதியை மாற்றும் வழி என்று ஆரம்பித்த எண் சோதிடம் பற்றி இன்று வீதி எங்கும் பேசப்படுகின்றது.

இன்று நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலோர்க்கு என்னதான் தெரியாவிட்டாலும் எண் சோதிடம் மட்டும் தெரியும்.

சினிமாத் துறையிலே ஆபாசம் எப்படி அன்னியோன்னியமாகி விட்டதோ அவ்வாறே சோதிடக் கலையுடன் எண் சோதிடமும் அன்னியோன்னியமாகி விட்டது.

அது மட்டுமன்றி புனிதமான சோதிடக் கலையின் பல்லைப்பிடித்துப் பார்க்கும் அளவிற்கு அது பிரபல்யம் பெற்றிருக்கிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பிரபல்ய சோதிடர்கள் கூட 'அஸ்ரோநியூமோரலஜி' என்ற ஒரு புதிய முறையை ஆரம்பித்திருக்கின்ருர்கள்.

மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகின்ற தன்மை இது.

### துரோகமான செயல்

சோதிடக் கலையின் அருமை தெரிந்தவர்கள், ஆழம் புரிந்தவர்கள், அதனை ஆராய்ந்து சோதிடக் கலையை வளர்ப்பதை விடுத்து எண் சோதிடக் கலையை நோக்கி சோதிடக் கலையைத் திருப்பிவிட முயல்வது, அல்லது இரண்டும் கலந்த ஒரு புதிய கலையைத் தோற்றுவிக்க முயல்வது பவித்திரமான முறையில் சோதிடக்கலையை எமமிடம் ஒப்படைத்த மகாமுனிவர்களுக்குச் செய்யும் துரோகம்.

அதே பவித்திரமான முறையில் அதனைப் பெற்றுக் கொள்ள உரித்துடைய எதிர்கால சோதிட சமுதாயத்திற்குச் செய்யும் மாபெரும் களங்கம்.

திருமண விடயத்தில் எண் சோதிடத்தின் பங்களிப்பு இதற்கு நல்ல உதாரணம்.

திருமணத்திற்கு சுபமுகூர்த்தம் வைக்கும்போது சோதிட வித்துவான்கள் பல்வேறு துருவத்திலும் அதனை ஆராய்கின்ருர்கள். அவ்வாறு வைக்கப்படுகின்ற ஒரு தினம் ஒரு வருடத்திலே மிகக்குறைந்த அளவிலேயே அமையும். அத்தினத்திலேயும் குறிப்பிட்ட ஒரு சுபவேளையே முகூர்த்த வேளையாகக் கொள்ளப்படுகின்றது.

ஆனுல் எண் சோதிடப்படி வெறுமனே 4, 5, 6 என்ற இலக்கங்களின் அடிப்படைப் பலன்களை ஆதாரமாகக் கொண்டு பெறுதற்கரிய அச் சுபவேளைகளில் பழிசுமத்தி அதனை ஒதுக்குவது எவ்வளவு பெரிய தவறு

இதனை நியாயப்படுத்துகின்றவர்களை எப்படிச் சோதிடர்கள் என்று அழைக்கமுடியும். வேண்டுமானுல் எண் சோதிடர்கள் என்று அவர்களைச் சொல்லிக் கொள்ளலாம்.

திருமணத்திற்கான பொருத்தம் பார்க்கும் விடயத்திலும் எண் சோதிடர்கள் அவ்வாறே நடந்து கொள்கின்றனர்.

### கொச்சைப்படுத்தல்

திருமணப் பொருத்தம் பார்த்த ஒரு பிரபல்ய சோதிடர் 'சோதிடப்படி பொருந்தவில்லை ஆனுல் எண் சோதிடப்படி பொருந்துகின்றது. இத் திருமணத்தைச் செய்யலாம்'. இவ்வாறு தன் கைப்பட எழுதிக் கொடுத்திருக்கிருர்.

> துளபகிரிஜோதிடம் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரை இங்கு பிரசுரிக்கப் படுகிறது.
> — துளபகிரி சோதிடர்

இங்கே புனிதமான சோதிடக்கலை கொச்சைப்படுத்தப் படுகின்றது. உதாசீனப்படுத்தப்படுகின்றது.

ஒத்த தன்மை உள்ளவர்களை என் சோதிடம் நல்ல நண்பர்கள் என்று சொல்கின்றது. 2 ஆம் திகதி பிறந்தவர்களுக்கு 2, 7 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் நட்பு பொருத்தமானதுதான். ஆனுல் இவர்கள் நண்பர்களாக இருக்க மட்டுமே பொருத்தமானவர்கள் தம்பதிகளாக அல்ல.

2, 7 ஆம் திகதி பிறந்தவர்களுக்கு திருமண வாழ்க்கை நன்ருக அமைவதில்லை. ஆனுல் இவர்கள் நட்பு ரீதியிலே பொருத்தமானவர்கள். எனினும் பிறப்பெண்ணைக் கொண்டு ஒருவன் குணத்தையும் அறுதியிட்டுக்கூற முடியாது.

மகாத்மா காந்தி, சர்வாதிஹிட்லர் இவர்கள் இருவருமே 2 இன் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் தானே. ஆனுல் ஒருவர் வடதுருவம், மற்றவர் தென்துருவம். எண் சோதிடப்படி திருமணப் பொருத்தம் பார்க்கும்போது தப்பித்தவறி இத்தகைய அமைப்புக் கொண்ட இருவருக்கும் திருமணம் செய்து வைத்தால் குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கும்...?



### வழிவகுக்குமா?

எண் சோதிடப்படி மனமும் குணமும் பொருந்திவிட்டால் மட்டும் அமைதியான குடும்ப வாழ்க்கைக்கு அது வழி வகுக்குமா...?

மேலை நாட்டாரின் பெரும்பாலான திருமணங்களில் பெரும்பாலானவை மனமும் குணமும் பொருந்தித்தானே நடைபெற்று வருகின்றன. ஆனுல் கால ஓட்டத்தில் அவற்றுள் 80% திருமணங்கள் விவாகரத்தில் அல்லவா முடிந்திருக்கின்றன.

இதனை நான் சொல்லவில்லை. புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஏதோ தவறு நடந்துவிட்டது. திருமணம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அதற்காகவேனும் எண் சோதிடத்தை நாடவேண்டியுள்ளது. என்றும் நியாயம் கற்பிக்கப்படுகிறது.

தெய்வ சங்கற்பம், காந்தர்வம், கர்ப்பநிர்சிதம் இவற்றிற்கெல்லாம் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை எனச் சோதிடக்கலை எப்போதோ சொல்லிவிட்டது.

இவற்றை எழுதுவதால் நான் எண் சோதிடக்கலைக்கு எதிரானவன் என்பதல்ல. சோதிடக்கலை எமக்குக் கிடைத்த அளப்பரிய சொத்து. அதனைப் பவித்திரமான முறையில் அடுத்த பரம்பரையினரிடம் ஒப்படைக்க வேண்டியது இன்றைய சோதிடர்களின் தலையாய கடமை. சோதிடக் கலையை மாசுபடுத்தக் கூடாது. அதனையும் சோதிடர்கள் செய்யக்கூடாது.

எண் சோதிடத்திற்கு சோதிடக்கலையின் உதவி தேவைதான். ஆனுல் சோதிடக் கலைக்கு எண் சோதிடத்தின் உதவி தேவையில்லை. அதன் தனித்துவமே போதும்.

## மலர்ந்திருங்கள் தம்பதிகாள்!

**பல்லவி**

உங்களுக்கே இந்தக் கீதம் – இது
உங்களின் வாழ்வுக்குத் தீபம்......
மலர்ந்திருங்கள் புதுத் தம்பதிகாள் – நீங்கள்
சிறந்திருங்கள் வாழும் தன்மையினுல்......
...உங்களுக்கே

**சரணம் 1**

பொறுமையை உணவாக்கி வளர்ந்திருங்கள் – வாழ்வில்
கொடுமையை உண்ணுது விலக்கிடுங்கள்
வேதத்தையும் தியானத்தையும்
ஞானத்தையும் நிதானத்தையும்
காப்பாற்றி வாருங்கள் அவைகளுக்கு
நீர் ஊற்றி வாழுங்கள் விளைச்சலுண்டு
...உங்களுக்கே!

**சரணம் 2**

நான் என்ற அகந்தையைச் சிதைத்திடுங்கள் – அதை
வீண் என்ற உறுதியில் புதைத்திடுங்கள்
சீலத்தையும் தியாகத்தையும்
மானத்தையும் விலாசத்தையும்
காப்பாற்றி வாருங்கள் அவைகளுக்கு
நீர் ஊற்றி வாழுங்கள் விளைச்சலுண்டு
...உங்களுக்கே!

**சரணம் 3**

உங்களை நீங்களே திருத்திடுங்கள் – இந்த
உலகமே திருந்திடும் அறிந்திடுங்கள்
நேர்மையையும் நியாயத்தையும்
சீர்மையையும் குணத்தையும்
காப்பாற்றி வாருங்கள் அவைகளுக்கு
நீர் ஊற்றி வாழுங்கள் விளைச்சலுண்டு.
...உங்களுக்கே!

— திருமகன்

## அறிவுக்கு விருந்தான தீ!

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவைகளுள் சார்ந்ததன் வண்ணமாக இராதது தீ அல்லது அக்கினி என்று சொல்லப்படுவதே.

'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமாப்புணையைச் சுடும்'

என்று சொல்லும்போது தெய்வப்புலவர், சேர்ந்தாரைக் கொல்லி என்று அக்கினியைக் குறிப்பிடுகின்ருர்.

ஓமத் தீயில் இடும் சகல பொருள்களையும் அக்கினி பகவான் அப்படியே தன்வசமாக்கி விடுவார்.

'அழல் தேவன் கரியாக'— அக்கினி தேவன் சான்ருக அல்லது சாட்சியாக என்னும் பொருளை இங்கே காணலாம். கரியாக என்னும்போது அடுப்புக்கரியைக் குறிக்காது சான்று என்று குறிப்பிடுவது உற்று நோக்கற்பாலது.

'அன்னியின் அலங்கலென்ன' — நெருப்பிலே இட்ட பூமாலைபோல என்று இது பொருள் தரும்.

'நெருப்பிலே சூடுபோல, — நெருப்பிலே சூடு ஒன்ருக இருக்குமேயொழிய வேருக இருக்காது.

'உற்ற உலவையிடை ஓர் புலிங்கம் மூட்டியக்கால்' — இங்கே புலிங்கம் என்பது தீப்பொறியையே குறிப்பிடுகின்றது. அக்கினி தேவனது அட்டகாசத்திற்கு ஒரு தீப்பொறியே போதுமானதாகும்.

'சங்கமோடு தபனனும் ஆர்த்தனன்' — தபனன் – அக்கினி தேவன். சங்கம் – கூட்டம்; பரிவாரம்; சூழ்படை. (சபையைக் குறிப்பிடும் – கூட்டம் அன்று). பரிவாரத்தோடு அக்கினிதேவனும் ஆரவாரித்தான் என்பதே இதன் பொருள்.

'காட்டுத் தீப்போல் வதந்தி பரவியது';

'உதராக்கினி (வயிற்றுப் பசி); 'உடலைச் சுட்டுவிடப் போகின்ருர்; (இறந்ததன் பின்பு பிணத்தை எரிக்கப் போகின்ருர்) என்ற தொடர்களிலும் அக்கினி தேவன் அமர்ந்திருந்து அறிவுக்கு நல் விருந்து ஆகின்ருர். ★

— க. சி. சண்முகம்

## அறிவியல் விஞ - விடை

● அணு நீர்மூழ்கிக் கப்பல்களுக்குத் தேவையான அணுசக்தி எதிலிருந்து பெறப்படுகிறது?

அவற்றுக்குள்ளேயே யுரேனியத்தை எரிக்கிற ஒரு சின்ன அணுஉலை இருக்கிறது.

● நதி அல்லது நீர்ச் சந்திகளில் 'சுழல்' எப்படி உருவாகிறது?

நீரோட்டங்கள் ஒன்ருேடொன்று மோதிக்கொள்ளும் போது சுழல்கள் உண்டாகும்.

● மார்கழி, தை மாதங்களில் பனி பெய்கிறதே, மற்ற மாதங்களில் ஏன் பனி பெய்வதில்லை? பனி எவ்வாறு உருவாகிறது?

மார்கழி, தை மாதங்களில் சூரியன் தெற்கே போய் விடுகிறதால் வெயில் சூடு குறைந்து குளிர் அதிகமாகிறது. காற்றில் உள்ள நீராவி குளிர்ந்து நீர்த்துளிகளாவதுதான் பனி. காற்று குளிர்ச்சியடைந்தால் பனி தோன்றும். ★

★★★★★ இளைஞர் சுடர் ★★★★★

## பாட்டி

வண்ண மிட்டாய் தரும் பாட்டி
உண்ணும் வேளை விருப்பூட்டி
தூக்கம் எடுத்தால் தாலாட்டி
தூங்க வைப்பாய் ஆராட்டி
முடியில் மணக்கும் பூச்சூட்டி
வடிவாய் பள்ளி வழிகாட்டி
வீடு திரும்பக் கரம் நீட்டி
நாடி எடுப்பாய் பாராட்டி
படிக்க வந்தால் சிரிப்பூட்டி
நொடிகள் சொல்வாய் கால்நீட்டி
பொக்கை வாயால் சொற்கூட்டி
கற்க வைப்பாய் களிப்பூட்டி
ஒழுக்க நெறிகள் அறிவூட்டி
செழிந்து வாழும் மூதாட்டி.

புலோலி வே. ஆறுமுகம்

## மீன்கள் எப்படிப் பறக்கின்றன?

பறக்கும் மீன்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அவை எப்படிப் பறக்கின்றன? சாதாரணமாக இறக்கைகளை விசிறிக்கொண்டு பறந்து செல்லும். காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லும் அளவிற்கு ஏற்ற உடல் அமைப்பினைப் பறவைகளுக்கு இயற்கை அளித்துள்ளது. ஆனுல் பறக்கும் மீன்கள் பறவைகள் போன்று பறப்பதில்லை. வேறு விதமாகப் பறக்கும்.

பறக்கும் மீன்களுக்கு இறக்கைகள் அவற்றின் முன்பாகத்தில் அமைந்துள்ளது. இவை பறக்க எத்தனிக்கும்போது உடற் கோணத்திற்கேற்ப இறக்கைகளை விரித்துக்கொள்கின்றன. பின் இவை சற்றுத் தூரம் நீரிலேயே வேகமாக நீந்திச் சென்று ஓர் குறிப்பிட்ட வேகத்தைப் பெறுகின்றன.

பின் இறக்கைகளை விறைப்பாக்கி அந்த வேகத்திலேயே உடலை நீர் மட்டத்திற்கு மேலே தூக்குகின்றன. பின் மேலே பறக்கத் தொடங்குகின்றன.

இம்மீன்கள் நீரிலேயே சற்றுத்தூரம் நீந்தி, பின் மேலே எழும்பிப் பறப்பது விமானங்கள் சிறிது தூரம் ரன்வேயில் ஓடிப் பின்பு மேலே எழும்பிப் பறக்கத் தொடங்கும் செயலை ஒத்து இருக்கும்.

150 அடி தூரம் வரை இவ்வகை மீன்கள் தொடர்ந்து பறக்கின்றன. பின்பு நீரில் குதித்து விடுகின்றன. காற்று வீச்சு வேகமாயின் இம்மீன்கள் இப்படியும் அப்படியும் ஆட்டி மேலும் வேகமாகப் பறந்து செல்கின்றன.

இவ்வகைப் பறக்கும் மீன்கள் இந்து மகாசமுத்திரம் போன்ற சமுத்திரங்களின் நடுப்பகுதியிலேயே வாழ்கின்றன. எனவே இவற்றை நாம் பார்ப்பது அரிது. சில சமயம் இவ் மீன்கள் ஒன்று சேர்ந்து மீனவர்களைத் தாக்குவதும் உண்டு.

மீன்கள் பறக்கின்றன என்பதை அறிய வியப்பாக இருக்கிறது அல்லவா?

தொகுப்பு: இரா. சேயோன்

## இந்தியாவின் மனித கம்பியூட்டர்

● கணிதப்புலி என எல்லாராலும் பாராட்டப்படும் சகுந்தலாதேவி 1980 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் திகதி லண்டனில் உள்ள இம்பீரியல் கம்பியூட்டர் பிரிவுக்குச் சென்ருர்.

அங்குள்ள மாணவர்கள் 13 இலக்கங்கள் கொண்ட இரண்டு எண்களைக் கொடுத்து வாயால் பெருக்கி விடை சொல்லச் சொன்ஞர்கள்.

அதாவது கடதாசி, பென்சில், பேஞ, கரும்பலகைகள் இல்லாமல் இந்தக் கணக்கைப் போடச் சொன்ஞர்கள்.

7, 686, 369, 774, 870
2, 465, 099, 745, 779
விடை என்ன தெரியுமா?
18, 947, 668, 177, 995. 426, 462, 773, 730

இந்த விடையை வாயினுல் பெருக்கி சகுந்தலாதேவி சொன்ஞர்.

இதற்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம்: 28 விஞடிகள். ★

## யார் உயர்ந்தவர்?

காந்திஜி வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் சென்றிருந்தபோது அவர் தங்கியிருந்த இடத்திற்கு அவரைச் சந்திக்க பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஒரு தபால்காரன் இருப்பதைக்கண்ட காந்திஜி அவரை முன்னதாகச் சந்தித்து உரையாடி அனுப்பினர். இதைக்கண்ட ஒரு பிரிட்டிஷ் பிரமுகர் 'எங்களைவிட ஒரு தபால்காரன் உயர்ந்தவஞகிவிட்டாஞ' என்று கோபத்துடன் கேட்டார்.

'சந்தேகமில்லாமல்நாமெல்லாம் உயர்ந்தவர்கள்தான். ஆனுல் தபால்காரன் ஓர் உண்மையான உழைப்பாளி' என்ருர் காந்திஜி. மி. வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணா தந்த வாய்ப்பை உதறித்தள்ளிய ஏழிசை மன்னன் தியாகராஜா பாகவதர்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஹரிதாஸ் படத்தின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து ஒரே சமயத்தில் தியாகராஜ பாகவதருக்குப் பன்னிரண்டு படங்களில் நடிக்க அழைப்பு வந்தது.

அந்தக் கால கட்டத்தில் ஒரே நடிகருக்கு ஒரே சமயம் 12 படங்கள் என்பது சாதாரண விஷயமல்ல.

ஏனெனில் அந்த நாளில் ஆண்டுக்கு மொத்தம் 12 படங்கள் வெளிவருவதே பெரிய விஷயம்.

ஆகவே பாகவதர் ஒரே சமயத்தில் நடிக்கும் படங்களுக்குரிய விளம்பரத்தை எப்படிச் செய்தார்கள் தெரியுமா?

நடுவே நிலா மாதிரி வட்டத்தில் பாகவதர் குதிரையில் அமர்ந்திருக்கிற 'ஹரிதாஸ்' பட ஸ்டில்லும், சுற்றிலும் நட்சத்திர வடிவத்தில் பன்னிரண்டு படங்களுக்குரிய பாகவதரின் வித்தியாசமான போஸ்களையும் வைத்து விளம்பரம் செய்யப்பட்டது.

அத்தனை அமர்க்களமான விளம்பரமே ஒரு திருஷ்டியானது போல பாகவதரும் அவருடன் கலைவாணர் கிருஷ்ணன் மற்றும் பட்சிராஜா ஸ்டூடியோ அதிபர் ஸ்ரீராமுலு ஆகியோர் லட்சுமிகாந்தம் கொலை வழக்கில் அகப்பட்டு பின்னர் சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

சிறையில் இருந்து பாகவதரும் கலைவாணரும் வெளியே வந்த சமயம் திரையுலகில் சில மாற்றங்கள் நிழ்ந்திருந்தன. அதாவது சமூகப் படங்கள் கணிசமாக ஆரம்பித்திருந்தன.

ஏற்கனவே பாகவதர் கலைவாணர் மீது அறிஞர் அண்ணா அபிமானம் கொண்டிருந்தார்.

அவர்கள் சிறை புகுந்ததும் அண்ணா கண்கலங்கினார். அவ்வப்போது அவர்களைச் சிறையில் சந்தித்தும் வந்தார்.

சமூகப்படங்கள் வரத் தொடங்கிவிட்ட இந்தக் கால கட்டத்தில் பாகவதருக்கு அவர் வெளியே வந்ததும் அவருக்கேற்ற படம் உடனே அமையுமா?

கலைவாணரைப் பொறுத்தவரை அவர் புராணம், சரித்திரம், சமூகம் என்று எல்லாப் படங்களிலும் நடிக்க முடியும். பாகவதருக்கோ, பக்தி அல்லது ராஜா ராணி படங்கள் தானே பொருத்தமாக இருக்கும் என்று அண்ணா சிந்தித்தார்.



அதன் பலனாகவே 'சொர்க்க வாசல்' திரைக்கதையை எழுதித் தயார் செய்தார். அத்துடன் ஜுபிடர் பிக்சர்ஸ் சோமுவுடன் பேசி பாகவதரை வைத்துப் படமாக்க ஏற்பாடும் செய்து விட்டார்.

ஒரு தலைசிறந்த தமிழ்க் கலைஞன் சந்தர்ப்ப சூழ்நிலையால் அமுலாக்கப்பட்டு இருந்ததால், அதைத் தகர்த்து அந்தக் கலைஞனை மீண்டும் பீடு நடை போடச் செய்ய வேண்டும் என்ற அக்கறையினாலே அண்ணா இத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டார்.

ஆனால் அண்ணா நினைத்தது ஒன்று, பாகவதர் நினைத்தது வேறு ஒன்றாயிற்று.

அண்ணா தன்மீது கொண்டிருந்த அக்கறை, பாகவதருக்கு தெரியாமலில்லை. ஆனால் அவர் பயம் வேறு!

அண்ணா பகுத்தறிவுவாதி! பல தெய்வங்கள் கற்பிக்கப்படுவதை அறிவார்த்தமாக பரிகசிக்கக் கூடியவர். எனவே அவர் உருவாக்கிய 'சொர்க்க வாசல்' திரைக்கதை வசனத்திலும் அறிவுக்கு ஒவ்வாத புராண சமாச்சாரங்களை அவர் நையாண்டி செய்திருக்கக் கூடும்.

அதே சமயம் தனது நிலை வேறு. 'திருநீலகண்டர்', 'சிவகவி', 'ஹரிதாஸ்' என்று புராண கலப்புடன் பக்திரஸம் சொட்டும் படங்களிலேயே நடித்து வந்திருக்கிறோம். நமது திரைப்பட விளம்பர சுவரொட்டிகளில் கூட, சிவலிங்கத்தின் அருகே வணங்கிய படியோ கண்ணனைத் தொழுத படியோதான் காட்சிகள் அமைந்திருக்கும்.

அப்படி ஒரு தனி வழியில் தமிழ்ப்பட ரசிகர்களுக்குத் தன்னை அறிமுகப்படுத்தி வளர்ந்த நாம், இன்று புராணங்களைக் கேலி செய்கிற மாதிரியான ஒரு கதையில் நடித்தால் அது மக்களால் ஏற்கும்படி இருக்குமா?

இதுவே பாகவதரின் தயக்கம்.

இதனை அண்ணா புரிந்து கொண்டபோது, அவர் பாகவதருக்காக மிகப் பெருந்தன்மையுடன் ஒரு முடிவை மேற்கொண்டார்.

'தெய்வங்களைக் கேலி செய்கிற மாதிரி நீங்கள் தோன்றுகிற காட்சிகளில் சம்பவங்களோ, வசனங்களோ இருந்து விடுமோ என்பதுதானே உங்கள் பயம்? அப்படியானால் நீங்கள் இந்தப் படத்திலே வருகிற காட்சி பகுதிகளை உங்கள் பார்வைக்குத் தருகிறேன். அதிலுள்ளவற்றை வாசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஆட்சேபமாகத் தோன்றுபவைகளைச் சுட்டிக் காட்டுங்கள். அவைகளை எல்லாம் நீக்கி விடுகிறேன்' என்று பாகவதரிடம் அண்ணா கூறினார்.

இவ்வாறாகத் தனது எழுத்தையும், கருத்தையும் இன்னொருவருக்காக மாற்றிக் கொள்ளாத அண்ணாவே தன் வசனங்களைப் பாகவதருக்காக மாற்றிக்கொள்ள முன்வந்தார் என்றால், ஒரு கலைஞனின் பெருமையை மீட்டுத் தருவதிலே அவருக்கிருந்த அக்கறையைத் தெளிவாக உணரலாம்.

அண்ணா இத்தனை சொன்ன பிறகும் பாகவதர் தனது அச்சத்தை வெளிப்படுத்திச் சொன்னார்- 'அண்ணா! நீங்கள் என் வேண்டுகோளுக்காக நான் நடிக்கும் காட்சிகளில் மாற்றம் செய்து தந்துவிடுவீர்கள். ஆனால் இந்தப் படத்தில் நான் வராத காட்சிகளில் பக்தி வழியை கேலி செய்து நீங்கள் எழுதியிருந்தால், படம் பார்ப்பவர்கள், பாகவதர் படமா இப்படி?' என்றல்லவா பேசுவார்கள். நான் அதற்காகப் பயப்படுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்றார்.

ஆக, பாகவதர் வெளியே வந்ததும் அவருக்கு ஒரு படம் தயாராக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அண்ணா ஏற்பாடுகளைச் செய்து வைத்தும், பாகவதரோ தனது வரவுக்காக வழியை மாற்றிக்கொள்ளக் கூடாது என்ற கொள்கையில் உறுதியாக நின்று நல்ல வாய்ப்பையே துறந்தார். ★

(முற்றும்)

## சென்னை ஸ்டூடியோக்களில்

வெற்றிமாலை- அர்ஜுன், சீதா ஜோடி நடிக்கும் புதிய படத்தின் பெயர் இது.

எம். என். பானு கதை, வசனம் எழுதி டைரக்ட்செய்கிறார். பாடல்கள்: வாலி, இசை: சங்கர் - கணேஷ்.

இப்படத்திற்காக 'வந்தாச்சு வெற்றி கொடி', 'கண்ணுக்கழகா ஒரு வண்ணக் குருவி' ஆகிய பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. ★

## வெள்ளித்திரையில்

# பரிசு!

விடிந்தும் விடியாததுமாக, சந்திக் கிணற்றடிக்குச் சென்று முகத்தை அலம்பி விட்டு குடத்தினுள்ளும் தண்ணியை நிரப்பிக்கொண்டுவந்த ரூபன் படலையைத் திறந்த போது, கையில் தேநீர் குவளையுடன் ஆயத்தமாக நின்றாள் அம்பிகா அக்காள்.

அவன் வளவில் கிணறு இல்லாமல் இல்லை. நல்லதண்ணி அள்ளும் சாட்டில் சந்திக்குச் செல்பவன் அங்கேயே முகத்தையும் அலம்பிக்கொள்வது தான் அவனது வழக்கம்.

சருவத்தை அடுக்களையில் வைத்துவிட்டு, தேநீர்க் குவளையை வாங்கி ஒரேமடக்கில் பருகிவிட்டு குவளையை கழுவும்பொழுதுதான், நேற்று மாலைபோல் இரண்டு தென்னம் மட்டைகளைப் பிளந்து கிணற்றடித் தொட்டியில் ஊறப்போட்டது அவன் ஞாபகத்திற்கு வந்தது. நேரே கிணற்றடிக்குச் சென்றவன் அவைகளை எடுத்து பின்னத் தொடங்கினான்.

அன்று அம்பிகாவுக்கு முதல் பாடம் ஓய்வாக இருந்ததனால், பாடசாலை லைபிரரியில் நுழைந்தவள் சனிக்கிழமை பத்திரிகையை புரட்டினாள். நாலாம் பக்கம் வழமையாக வாராவாரம் பிரசுரிக்கப்படும் சிறுகதை, வெளியாகியிருந்தது.

கதைக்கு வரையப்பட்ட படத்தை பார்த்தாள். இடை இடையே சில வரிசளை வாசித்துப் பார்த்தவளின் கண்கள் கதாசிரியரின் பெயரைத் தேடியது. கதையின் நடுப்பகுதியில் இருகோடுகளுக்கிடையே ரூபன் சிறை வைக்கப்பட்டிருந்தான்.

அம்பிகாவின் உள்ளம் பூரிப்பில் பூத்துப்போய்விட்டது. ரூபன் இதைப் பார்க்கவில்லையாக்கும், பார்த்திருந்தால் ஒரு தடவைக்கு பலதடவை இதையேகூறி சந்தோஷப்பட்டிருப்பான்.

அம்பிகா உயர்தரத்தில் படிக்கும்போது, அவளுக்கும் அவர்களுக்கும் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியருக்குமிடையே 'ஏதோ...' ஒன்று இருவரையும்ஒன்றாகச்சேர்த்து உயர்தர மாணவர்களிடையே கிசுகிசு பேச்சுக்கள் நடந்தன. ஆனால் அம்பிகா அவற்றையெல்லாம் விளங்கிக்கொள்ளாது தானும் தன் படிப்புமாக இருந்தாள்.

இருந்தாலும்தன்னில்மட்டும் ஒரு தனியானஅக்கறை காட்டுவதை உணர்ந்தவள், எதையும் கடுமையாகச் சிந்தித்து மனதை அலையவிடாது படிப்பிலே கவனத்தை பதித்துக் கொண்டாள்.

உயர்தர பரீட்சையும் நெருங்கியது. அம்பிகா இயலுமட்டும் திறமையாகப் படித்து பரீட்சையும் எழுதிமுடித்து விட்ட இறுதிநாள், அம்பிகாவைச் சந்தித்த, மாஸ்டர் கூறிய அந்த வார்த்தைகள், அவளிற்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் போய்விட்டது.

'அப்பாவிடம் வந்துபேசுங்கள்' என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டாள். அம்பிகாவின் தகப்பனாரிடம் தன்னுடைய விருப்பத்தை மாஸ்டர் தெரிவித்தபோது, அவர் உண்மையிலே மகிழ்ந்துபோய் விட்டார். தன்னுடைய தாயிடம் கூறி சம்மதத்தைப் பெற்று அவர்களையும் அழைத்துவருவதாக சென்ற மாஸ்ரர்தான். அதன்பின் எதுவித தொடர்பும் அவர்களிடம் இல்லை. தந்தையாரின் செத்த வீட்டிற்குக்கூட மாஸ்ரர் வரவில்லை. ஒருநாள் அவளின் தோழி வீட்டிற்குவந்தபோது அவள்தான் சொன்னாள்.

அம்பிகா! நம்ம மாஸ்டர் தன்னுடைய சொந்த ஊருக்கு மாற்றலாகிவிட்டார்.

அம்பிகாவிற்கு இருந்த ஒரே நம்பிக்கையும் போய்விட்டது; மாஸ்ரரின் மனம் ஏன் இப்படி மாறியது? அவரிற்கு என்மேல் வெறுப்பு ஏற்படக் காரணம்? என்ன இந்தக் கேள்விகளுக்கு மூன்று வருட காலமாகியும் விடைகாணமுடியாமல் தவிக்கிறாள் இவள். தம்பி ரூபனிற்கு வயது வந்ததும், அம்பிகா மனஆறுதலிற்காக அவனிடம் இவற்றையெல்லாம் கூறிய போது.

'ஏன் அக்கா, நாங்க முந்தி இருந்த வீடு சித்தப்பாவின் பெரியவீடு. அந்தப் பெரிய தென்னங்காணிக்கு நடுவில சகல வசதிகளையும் கொண்ட வீட்டைப்பார்த்த மாஸ்டர், பெரிய சொத்துக்காரர் என்ட நினைப்பிலதான் உன்னை விரும்பினராக்கும், பிறகு..., எப்படியோ உண்மை தெரிஞ்சு உன்னை கைவிட்டுட்டார் போல; சரியான பணத்தாசை பிடிச்ச ஆள்போல கிடக்கு.'

அவன் கூறியதுதான் மாஸ்டர் தன்னை விட்டுச்செல்வதற்கு காரணமாயிருக்குமானல் அதையிட்டு அம்பிகாவிற்கு மாஸ்டர்மேல் சிரிப்புத்தான் வந்தது. பாடசாலை மணியோசை கேட்டு நினைவுக்கு வந்த அம்பிகா, பத்திரிகையைப் போட்டுவிட்டு லைபிரரியினின்று வெளியே வந்தபோது பியோன் சண்முகம் இடைநிறுத்தினான்.

'டீச்சர், உங்களுக்கு டெலிபோன் கோல் வந்திருக்கு' அம்பிகாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கு டெலிபோன்கோலா? என்னை யார் அப்படி அழைப்பது? எண்ணியபடி பிரின்சிபலின் றூமினுள் நுழைந்தபோது, றிசீவரை வைத்துவிட்டு, அதிபர் திரும்பினார். அம்பிகாவை அழைத்து அமரச்செய்து விட்டு, அவர் விஷயத்தைக் கூறியபோது, அவள் மயங்கியே போய்விட்டாள்.

அவளின் சகமாணவர்கள், ஆசிரியர்கள் சூழ; ரூபன், இரு கண்களும் கட்டப்பட்ட நிலையில்வைத்தியசாலைக் கட்டிலில் தன்னையும் மறந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனின் தலைமாட்டின்அருகே அமர்ந்தவாறு அம்பிகாதேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தாள். அதிபர் எவ்வளவு ஆறுதல் படுத்தியும் அவளால் அழுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியவில்லை. ஒரு சிறு குழந்தையைப்போல் அத்தனை பேருக்கும் முன்னால் அவள் நடந்துகொள்ளும் விதம் பார்ப்பவர்கள் எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

பாடசாலை ஆய்வுகூடத்தில், இரசாயனப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த சமயம் பரிசோதனைக்குழாய் வெடித்து அதனுள் இருந்த திரவம் சிதறி கண்களில் பட்டதே ரூபனின் இந்தநிலைக்கு காரணம் என யாரோ ஒருவரிடம், ரூபனின் சகமாணவன் ஒருவன் கூறிக்கொண்டிருப்பதை

## சிறுகதை

அவதானித்தாள் அம்பிகா. அந்த யாரோ ஒருவரை ஒரு கணம் திரும்பிப் பார்த்த பொழுது அவள் கண்களில் இருந்து மேலும் கண்ணீர் பெருகத்தொடங்கியது. மாணவர்கள் ஒருவரொருவராக கலைந்து கொண்டிருந்தனர்.

'மிஸ் அம்பிகா நத்திங் சீரியஸ், ஒருகண்தான் சற்று கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கு. மற்றக் கண்ணுக்கு கடுமையாக எந்தவித தாக்கமும் இல்லை. ஆனால் இரண்டுமே மிகவிரைவில் குணப்பட்டிடும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். பணத்தைப்பற்றியோ அல்லது வேறெந்த விஷயங்களைப் பற்றியுமோ நீங்கள் எதுவும் யோசிக்கத்தேவையில்லை. அதிபர் கூறிவிட்டுப் போனது அம்பிகாவிற்கு சற்று ஆறுதலாக இருந்தது.

எல்லோரும் ஒவ்வோர் ஆறுதல் கூறிவிட்டு சென்றுவிட்டார்கள். ஆனால், அந்த யாரோ ஒருவர் மட்டும் இன்னமும் நின்றுகொண்டேயிருந்தார். அம்பிகா அவரை நிமிர்ந்து பார்த்தபோது, அவர் தன்னையே இவ்வளவு நேரமும் பார்த்துக்கொண்டிருந்தார். என்பதை அவர் கண்கள் காட்டிநின்றன. அம்பிகாவிற்கு எதிராக, ரூபனின் தலைமாட்டில் அவரும் அமர்ந்துகொண்டார்.

இவர் ஏன் இங்கு வந்தார்? இவருக்கு இந்தவிஷயம் எப்படித் தெரியும்? ரூபனின் நினைவுகளிடையே அம்பிகாவிற்கு அவரைப்பற்றி நினைவுகளும் தென்படத்தான் செய்தது.

முன்னைய பொலிவிழந்து, முகம் எங்கும் உரோமங்கள் வளர்ந்து, எதையோ எங்கோ தொலைத்துவிட்டவர்போல், இருந்தார். உண்மையும் அது தானே.

ரூபன் சுயநினைவுக்கு வந்தபோது தனக்கு என்ன நடந்திருக்கிறது என்பதை அறியாத அவன் கைகள் கண்கட்டுக்களை அவிழ்ப்பதற்கு முயன்றபோது அவர், அவனின் இருகைகளையும் பற்றிக் கொண்டார்.

'எனக்கு என்ன நடந்தது. நான் எங்கிருக்கிறேன்.'

அம்பிகா விபரமாக எல்லாவற்றையும் கூறியபோது, அவன்மனதில் சிறிது கலக்கம் எழத்தான் செய்தது. தன் அருகில் வேறும் இன்னொருவர் இருப்பதை உணர்ந்து கொண்ட அவன்,

'யார் அக்கா இவர், என்னுடைய மாஸ்ரரா?இப்படிரூபன் கேட்டபோது' இல்லை ரூபன் உன்னுடைய மாஸ்டரில்லை; என்னுடையமாஸ்டர்.' அவள் தன்னையும் அறியாமல், மெல்லிய குரலில், அழுதுகொண்டே கூறிமுடித்தாள். ரூபன் ஒரு நிமிடம் மௌனமானான்.

'ஓ... பெரியவரா? எங்கே வந்தாராம்; யாரைப்பார்க்க வந்தாராம் உன்னைப் பார்க்கவா? அல்லது என்னைப் பார்க்கவா? இல்லை நிச்சயமாக உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கவேண்டும். ஏனெனில், உன்னில் இல்லாத அக்கறையா என்னில் இருக்கப் போகிறது.'

இப்படியெல்லாம் அவன் கேலியாகக் கூறியபோது, அம்பிகா மனம் பொறுக்காமல் 'ரூபன்' என்று அழுதே விட்டாள்.

'ஏன் அக்கா நீ அவருக்காக அழவேண்டும். அவர்தான் உன்னைவிட்டே அகன்றவராச்சே'

- செ. நடராஜா

ரூபன் கூறும் கடுமையான வார்த்தைகள் எதையும் தாங்காதவர்களாக, ரூபனின் வாயைப் பொத்தியபடி குமுறிக் குமுறி அழுதாள். ஏனோ அவள் மனம் மாஸ்டரைத் துன்புறுத்துவதில் இன்பம் காணவில்லை.

'அம்பிகா அவனைப் பேச விடுங்கள். அவன் நன்றாக என்னை மட்டும் பேசட்டும். வேண்டிய மட்டும் கிண்டல் பண்ணட்டும். நீ என் மாணவியாக இருக்கும்பொழுது உன்னை விரும்பியது உண்மை. உன் அப்பாவிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து விட்டு, என் தாயாரையும் அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றதும் உண்மை, ஆனால் அதன் பிறகு நடந்தவையெல்லாம்......'

மாஸ்டர் இடை நிறுத்திய போது, அம்பிகா மாஸ்டரைக் கேள்விக்குறியாக நோக்கியதை ரூபன் அறிய நியாயமில்லை.

'என்னுடைய விருப்பத்தை என் தாயார் ஏற்காதபோது, உண்மையிலேயே நான் ஒரு கோழையாகி, உன் நினைவையும் விடமுடியாது என் தாயாரின் விருப்பத்தையும் தட்டமுடியாது. பெண் பார்க்க நாங்கள் காரில் சென்ற சமயம்தான் அந்த விபத்து நடந்தது. விபத்தில் என் தாயைப் பறிகொடுத்து விட்டு நான் மட்டும் பிழைத்த போது என் தாயைப் பறிகொடுத்த கவலை, உன்னைத் தவறவிட்ட கவலை இரண்டுமாக என்னைச் சேர்த்துப் பிழிந்தெடுத்தபோது, பாடசாலை மாற்றலாகி என் சொந்த இடத்திற்கே வந்து சேர்ந்தேன்.

உன் நிலைமையையும், நிதானத்தையும் அறிந்துகொண்டும், உன்னிடம் வந்து நடந்த எல்லாவற்றையும் கூறி ஆறுதல்தேட மனமில்லாதவனாக, எல்லாவற்றையும் நெஞ்சினுள்ளே புதைத்து வைத்துக் கொண்டு இயந்திர மனிதனாக நடமாடி வெளி உலகத்திற்கு நடித்து வருகின்றேன்.

இதற்கிடையில் நேற்று முன் தினம் வெளியான பத்திரிகைச் சிறுகதை எனக்கு ஏதோ ஒரு தூண்டுதலைத் தந்து உன்னைத் தேடி வரும்படி வைத்துவிட்டது.


நீ என்னை நிச்சயமாக ஏற்பாய் என்ற உறுதியுடன் உவ்விடம் புறப்பட்டு வந்தபோதுதான் ரூபனிற்கு நடந்ததைக் கேள்விப்பட்டு இங்கு வந்தேன். அம்பிகா, என்னுடைய நடந்து முடிந்த சம்பவங்களுக்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்க நான் வரவில்லை. உன்னை மனப்பூர்வமாக ஏற்க வந்திருக்கிறேன்.'

மனதினுள் அடைத்து வைத்திருந்த எல்லாவற்றையும் மாஸ்டர் கூறி முடித்தபோது; ரூபன், மாஸ்டரின் கையைப் பற்றி அக்காளின் கரத்துடன் இணைத்துவிட்டபடி,

'மாஸ்டர் என்னுடைய கதையைத்தான் என்னால் உடன் பார்க்கமுடியாவிட்டாலும்என் கதைக்குக் கிடைத்த பரிசை என் அக்காவிடம் சேர்க்கிறேன். இன்று முதல் என் அக்கா கண்கலங்கக் கூடாது.' ரூபன் கூறிமுடித்த போது, இருவர்கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் நிறைந்து நின்றான். ★

## சொற்சிலம்பம்

போட்டி இல. 96



சொற்சிலம்பம் இல: 96
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 05 - 4 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. சுக்கில ஆண்டு 2. பசு 6. கிரகங்களில் ஒன்று 7. .........என்றால் சிறைவாசம் 8. குப்பி 9. புடைவை (குழம்பி உள்ளது) 10. வலிமை - ஒரு சொல் இன்றி உள்ளது. 11. பூண்டு தலைகீழாய் முளைத்திருக்கிறது. 12. சீதையை மயக்கியது 14. பருவங்களில் ஒன்று 16. முருகனின் மறுபெயர் 19. தவத்தின் கடைசிநிலை (கடைசிச் சொல்லை இழந்துள்ளது) 20. நெல்வகை 21. காரியம் கைகூடுதல் 22. மந்திரம் 23. கவலை (தலைகீழாக)

**மேலிருந்து கீழ்:**

1. உட்செலுத்துதல் 2. ஆபத்துக்கு உதவுவது 3. அஞ்ஞானம் (ஒரு சொல் குழம்பி உள்ளது) 5. குரு 8. ஆன்மா 11. கயிறு திரிக்க உதவுவது (தலைகீழ்) 12. இது இல்லாமல திருமணம் இல்லை. 13. இறைவனை நினைத்து இருப்பது 14. ஆகாயம் 15. இது இன்றி எதுவும் இயங்காது. 17. திரவ உணவு 18. அம்பு (குழம்பிய நிலையில்) 19. சிப்பியின் சொத்து 21. முத்திரைகளில் ஒன்று.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன வீட்டுச்சுவரில் காணப்பட்ட தேவனுடைய கையெழுத்து!

**1941** ஜனவரி 15; சீனவில் எங்கள் மிஷன் வளாகக் காவல்காரன் அவசரமாக எங்கள் வீட்டுக் குசினிக்குள் நுழைந்து, அங்கு நின்றுகொண்டிருந்த என் இளம் மனைவி மார்கரெட்டிடம் 'அம்மா, கேர்ணல் (யுத்தத் தளபதி) உங்களைத் தேடுகிறார்' என்றான். அவள் உடனே வெளியே சென்று சிறிது பிரமிப்போடு கேர்ணலை வணங்கி செய்தியைக் கேட்டாள்.

அவர் 'ஜப்பானியப்படை பட்டணத்தை நெருங்கிவிட்டது. 2 அல்லது 3 மைலுக்குள் வந்துவிட்டனர். பட்டணத்தைக் காப்பாற்ற எங்களுக்குப் போதுமான படைப்பலம் இல்லாததால் நாங்கள் வெளியேறுகிறோம். நீங்களும் உடனே புறப்பட்டு

> ஒரு காலத்தில் சீனவில் மிஷனெரியாய் சேவை புரிந்த டிக் ஹில்ஸ் என்பவர் 1941ல் நடந்த ஒரு அதிசய சம்பவத்தை இங்கே கூறுகிறார். பயத்தாலும், கவலையாலும் பீடிக்கப்பட்டுக் கலங்கும் விசுவாசிகளுக்கு இச்சம்பவம் புது நம்பிக்கையை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

பக்கத்திலுள்ள கிராமங்களில் ஒன்றுக்குச் சென்றுவிடுங்கள். பட்டணத்தில் உங்களுக்குப் பாதுகாவல் இல்லை' என்று கூறிச் சென்றுவிட்டார்.

அப்போது நான் நோய் வாய்ப்பட்டு 115 மைலுக்கப்பாலுள்ள ஒரு மருத்துவ மனையிலிருந்தேன். என் மனைவி தனியாய் வீட்டிலிருந்தாள். ஒரு வயதுள்ள மகனையும் பிறந்து இரண்டே மாதமான குழந்தையையும் காப்பாற்ற வேண்டும். என் மனைவியைக்

## கிறிஸ்தவ சிந்தனை

கலக்கமும் நடுக்கமும் பிடித்தன. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தாள்.

பிற்பகல் சுமார் 4 மணிக்குள்ளாக பட்டணத்திலிருந்த சேனை வீரர் அத்தனைபேரும் வெளியேறிவிட்டனர்; மக்கள் கலங்கினர். குடும்பம் குடும்பமாய்மூட்டைமுடிச்சுக்களோடு கிராமங்களுக்குச் சென்றனர். எங்கள் சபையார் என் மனைவியிடம் 'அம்மா நீங்களும் எங்களோடு வந்துவிடுங்கள்; தனியாயிருந்து என்ன செய்வீர்கள்?' என்றனர்.

மார்கரெட் சிந்தித்தாள். பட்டணத்தில் அவர்கள் தங்கிய வீடு வசதியானது. குளிர் காலமாகையால் நடு அறை எப்போதும் சூடாய் வைக்கப்பட்டிருந்தது. கிராமங்களுக்குச் சென்றால் அங்கு இவ்விதவசதிகள் இல்லாததால் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு ஆபத்து நேரிடும். எனவே அவள் அவர்களிடம் 'கணவன் வருமுன் நான் ஒரு தீர்மானமும் செய்ய இயலாது' என்று கூறி அனுப்பிவிட்டாள்.

இரவு மார்கரெட் சரியாய்த் தூங்கவில்லை. நடுக்கத்தோடு நேரங்கள் கடந்தன. அதிகாலையில் எழுந்து தன் கடமைகளை ஆரம்பிக்குமுன் தன்வீட்டுச் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த தன் நாள் காட்டியண்டை சென்றாள்—

'நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்' (ஆதி 50:21)

என்ற வாக்கியத்தைக் கண்டபோது அதிசயத்தால் பொங்கி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். ஒவ்வொருநாளும் எத்தனை பொருத்தமான வாக்கியம்! அவளுக்கே அதை நம்பமுடியவில்லை. அதில் ஒவ்வொரு தேதிக்கும் ஒருதாளும் அந்த நாளுக்குரிய ஒரு வாக்கியமும் அச்சிடப்பட்டிருந்தது, கடந்த நாளுக்குரிய தாளைக் கிழித்தெறிந்ததும், அந்த நாளுக்குரிய வாக்கியம் மார்கரெட் கண்முன் நின்றது! என்ன ஆச்சரியம்! அடுத்த நாள் காலையில் நாட்காட்டியைப் பார்த்த பொழுது—

'நான்பயப்படுகிறநாளில் உம்மை நம்புவேன்.' (சங் 56:3) —

என்று படித்ததும் அவளுக்குத் தன் கண்களை நம்பமுடியவில்லை. திரும்பத் திரும்பப் படித்தாள். பயம்நிறைந்த அந்த நாளுக்கு அது எத்தனை ஏற்றவாக்கியம்! கர்த்தரை நம்பினாள், பலன் பெற்றாள். பட்டணத்தார் அனைவரும் போய்விட்டனர், கடைசியாய்ச் சென்றவர்கள் தங்களோடு வரும்படி அழைத்தபோது 'என்னைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார்' என்று கூறத் தைரியம் கிடைத்தது.

மறுநாள் அதிகாலையில் காவல்காரன் வந்து 'அம்மா நானும் போகிறேன், என்னோடு வருகிறீர்களா?' என்றான்.

மார்கரெட் சிந்தித்தாள். பட்டணம் காலியாகிவிட்டது, காவல்காரனும் போகிறான். காலிவீடுகள் திருடரை வரவழைக்கும். தனிமையாய் என்னதான் செய்வாள்? பெருந்திகைப்போடு நாட்காட்டியண்டை சென்று கடந்தநாள் தாளைக் கிழித்தெடுத்ததும்—

'கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்' (சங்9:10)

என்ற வாக்கியம் கண்முன் பளிச்சென்று தென்பட்டது. இந்த வாக்கியத்துக்காக கொண்டுவந்தேன்'' என்றாள்.

ஆகாரத்துக்காகக் கவலைப்பட்ட மார்கரெட் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும் அவற்றை அவர் நிறைவேற்றும் அதிசய முறைகளையும் நினைத்து நினைத்து கர்த்தரைத் துதித்தாள்.

கர்த்தர் தமது அன்பு, ஆற்றல், பராமரிப்பு முதலியவற்றை நாள்காட்டி மூலம் மார்க்கரெட்டுக்கு விளக்கினார். அவள் விசுவாசம் பலப்பட்டது. அன்று பகல் முழுவதும் அவள் ஷெங்கின் பட்டணத்தையும் அதன் மக்களையும் கர்த்தர் காப்பாற்றும்படி ஜெபித்துக் கொண்டிருந்தாள். மறுநாள் காலையில் தன் நாள்காட்டியருகில் சென்று கருத்தோடு பார்த்

**- வண: சாம் செல்வநாயகம் -**

தலைகுனிந்து மார்கரெட் கர்த்தரைத் துதித்தாள். ஆயினும் அவள் மனதில் சில கேள்விகள் எழும்பிக்கொண்டிருந்தன. கடைகள் அடைக்கப்பட்டுவிட்டதால் ஆகாரப்பொருள்கள் வாங்கமுடியாதே; என்ன செய்வது? பிள்ளைகளுக்குப் பால்கொடுக்கும் ஆடுகள் நிற்கின்றன, கறக்க ஆள் இல்லையே, எனக்கும் கறக்கத் தெரியாதே, என்ன செய்வது?

அந்த இரவை இந்தவிதக் கேள்விகளோடு கழித்தாள். அதிகாலையில் தூரத்தில் வெடிச்சத்தம் கேட்டு விழித்தாள். வெடிச்சத்தம் சமீபத்தில் வந்தால் ஆடுகள் மிரண்டுவிடும். பால்கறக்க முடியாது. இப்படி சிந்தித்துக்கொண்டு நிற்கையில் இன்னொரு மிஷனெரியான வீ அம்மா ஒரு வாளியில் பால் வைத்துக்கொண்டு—

''உங்கள் ஆடுகளைக் கறந்துவிட்டேன், நான் உங்களோடு தங்கி உங்களுக்கு உதவி செய்யட்டுமா?'' என்றாள். மார்கரட்டுக்கு அந்தப் பால் பரலோகத்திலிருந்து வந்தது போலவே தோன்றியது.

அன்று பகல் முழுவதும் அவ்விரு பெண்களும் கூடவே தங்கி குழந்தைகளைப் பராமரித்து, வீட்டுவேலைகளையும் செய்தனர்.

சிறிது நேரத்தில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு கதவைத் திறந்து பார்க்க கிராமத்திலுள்ள ஒரு பெண் ஒரு கோழியும் ஒரு கூடையில் முட்டைகளும் கொண்டுவந்திருப்பதைக் கண்டனர். அவள் கனிந்த குரலில்—

''அம்மா! நீங்கள் தனியாய்த்தானே இருப்பீர்கள், ஆகாரமும் இருக்காதே என்று எண்ணித்தான் இவைகளைக் தாள்—

''நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்''. (சங்:56:9)—

என்னும் வாக்கியம் காணப்பட்டது. இதை எப்படி எழுத்தின்படி நம்பமுடியும்? வெடிச்சத்தம் வர வர அதிகரித்தது. மிஷனெரிப் பெண்கள் இருவரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். சந்தேகத்துக்கேதுவான கடிதங்கள், பத்திரிகைகள் முதலியவை எரிக்கப்பட்டன.

சாயங்காலமானபோது இரு திசைகளில் வெடிச்சத்தம் கேட்டதால் அதிக கவலையோடேயே படுக்கைக்குச் சென்றனர்.

அதிகாலையில் எழுந்தபோது பெரிய ஆச்சரியம் ஒன்று நடைபெற்றது. பட்டினம் முழுவதிலும் அமைதி காணப்பட்டது. பட்டாளத் தலைவர் வந்து உற்சாகமான குரலில் ''ஒரு காரணமும் தெரியவில்லை; ஜப்பானியர் திரும்பிச் சென்றுவிட்டனர்'' என்றார்.

மார்கரெட் தான் பயத்தினாலும், ஏக்கத்தினாலும், நடுக்கத்தினாலும் பீடிக்கப்பட்டிருந்த வேளையில் கர்த்தரின் ஆறுதலான வார்த்தைகளைத் தனக்குக் கூறிக்கொண்டிருந்த சுவரில் தொங்கிய நாள்காட்டியண்டை சென்று கர்த்தரை நன்றியோடு துதித்தாள்.

அந்த வாக்கியங்கள் தற்செயலாய் அங்கு வந்தனவா? தேவனே அவற்றை ஒழுங்குபடுத்தினர் என்று மார்க்கரட் உறுதியாய் நம்புகிறாள். ★

# கீர்த்தி மிக்க கீரை வகைகள்!

'நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்' என்றே எல்லோரும் விரும்புவர். உடம்பு உறுதி பெறுவதற்கு தேகப் பயிற்சியும், ஊட்டமுள்ள உணவும், ஓய்வும், ஆழ்ந்த உறக்கமும் அவசியம்.

உடம்பு தேய்ந்து போனால், நோய் அதில் இடம் கொண்டு எமது திடம் குறைந்து, வாழ்நாள் சுருங்கிவிடும். எனவே உடம்பு நோய், பிணியின்றி உறுதியாய் இருப்பதற்கு உணவுத் தெரிவும், உணவில் கட்டுப்பாடும் இருக்கவேண்டியது அவசியம்.

நாம் தினமும் ஒரு கீரை வகையை, பகலில் நமது உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. எந்தக் கீரை வகையும் வயிற்றில் மலம் கட்டாமல் செய்யும். எனவே கீரை வகையை ஒரு சிறந்த மலமிழக்கி எனலாம்.

### கீரைவகை

கீரை வகைகள் பலவுண்டு. அவையாவன:

முளைக்கீரை, அரைக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, பருப்புக்கீரை, ஆராக்கீரை. சிறுகீரை, முருங்கைக்கீரை, மணத்தக்காளிக்கீரை, அகத்திக்கீரை, சக்ரவர்த்திக்கீரை, பசளிக்கீரை, கோவைக்கீரை, குறிஞ்சாக்கீரை, புளிச்சக்கீரை, மஞ்சள் கரிசலான் கண்ணிக்கீரை.

இவற்றுள் முருங்கைக்கீரை ஏழை எளிய மக்களின் உணவாகக் கருதப்படுகின்றது. அது பசியையும் தாங்கும். பஞ்சத்தையும் தாங்கும். பஞ்சம் ஏற்பட்ட போது வரகரிசிச் சோறும் முருங்கைக்கீரையும் தான் மக்களைக் காப்பாற்

## வைத்திய சஞ்சீவி

றின. முருங்கைக்கீரையில் இரும்புச்சத்து அதிகமுண்டு. வைட்டமின்களும் அதிகம் உள்ளன. முருங்கைப் பூவும், காயும் ஆண்மை நரம்புகளை முறுக்கேற்றும்.

கிராமத்து நாடோடிப் பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

''மந்தையிலே மாடு
மேய்க்கும்
மச்சானுக்கு மத்தியானம்
மொந்தையிலே
சோற்றைப் போட்டு
முருங்கைக்கீரையை
வதக்கிக் கொட்டி''

### ஔவையார் பாடிய ஆராக்கீரை

சர்க்கரை வியாதிக்கு முருங்கைக்கீரை கைகண்டமருந்து. ஆராக்கீரை இலகுவில் கிடைக்காத தொன்றாகும். 'ஒரு காலடி நாலிலைப் பந்தலடி' என்று ஔவையாரால் சம்பருக்குச் கூறப்பட்டது, இந்த ஆராக்கீரையேயாகும். சர்க்கரை வியாதியைக் குணப்படுத்தும் சக்தி ஆராக்கீரையிலும் உள்ளது.

மஞ்சள் காமாலை நோய்க்கு கண்கண்ட மருந்து மஞ்சள் கரிசலான்கண்ணிக்கீரை. இது கொஞ்சம் கசப்புத்தன்மை உடையது. இதனைச் சாறு பிழிந்து சாப்பிடலாம். அத்துடன் 'சூப்' வைத்தும் குடிக்கலாம். மசித்தும், துவையலரைத்தும் சாப்பிடலாம். குடிகாரர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். ஈரல் சம்பந்தப்பட்ட நோய்க்கு இதிலிருந்து மாத்திரைகள் தயாரிக்கப்படுகின்றன.

வைச் சத்தோடு வலுவாக வைத்திருக்கவும், வியர்வையை வெளிப்படுத்தவும் உதவுகின்றது. 'வயிற்றுப் புண்ணுக்கு அகத்திக்கீரை' என்றும் பழமொழி உள்ளது.

### சித்திரை - வைகாசியில்

சித்திரை, வைகாசி மாதங்களில் பொன்னாங்காணிக் கீரை சாப்பிட்டால் கண் பார்வை மிகுந்து கூர்மையடையும். பகலிலே நட்சத்திரத்தைப் பார்க்கும் அளவிற்கு பார்வை கூர்மையடையும்.

கோடை காலத்தில் மணத்

**- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -**

சிறுநீர் அதிகம் போக பசளிக்கீரையைச் சாப்பிட வேண்டும். கர்ப்பமான பெண் கர்ப்பமான தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு பசளிக்கீரையைச் சாப்பிட வேண்டும். தலைப் பிரசவப் பெண் பசளிக் கீரையைக் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும். அப்பொழுதான் பிரசவம் இலகுவாக அமையும். குறிஞ்சாக்கீரையும் வயிற்றுப் புண்ணுக்கும் சர்க்கரை வியாதிக்கும் அற்புதமான மருந்தாகும்.

புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு அகத்திக்கீரை நல்லது. அது நுரையீரலைப் பாதுகாக்கின்றது. உடம்

தக்காளிக்கீரை சூப் செய்து குடிக்க வேண்டும். அது உடம்பில் உள்ள வெப்பத்தைத் தணித்து விடும். வாய்ப்புண், வயிற்றுப்புண் என்பனவற்றையும் ஆறச் செய்யும்.

மழைக் காலத்திலும் பனிக் காலத்திலும் மத்தியானத்திலும் தூதுவளை ரசம் குடிக்க வேண்டும். ஜலதோஷம் பிடிக்காமலும் சளி கட்டாமலும் அது பாதுகாக்கின்றது.

கீரையை மசியலாகவும், அரையலாகவும், குழம்பாகவும் செய்து சாப்பிடலாம்.

சைவ உணவில் இலைக்கறி வகைகள் முக்கிய இடம் பெற வேண்டும். அப்பொழுது தான் நோயின்றி நீண்டநாள் வாழலாம். ★

## பாதாதிகேசம்

தாளம் பூவோ தகதிமி ரதமோ!
வேழம் ஊரும் வனமுறை யழகோ!
ஆழம் பார்த்து அடிதொடர் நதியோ!
நாளும் காணும் கவிமகள் எழில்தான்!!

★

பாதம் நெல்லுக் குதிரதன் விம்பம்
தூதம் சொல்லக் குழைவுறுங் கால்கள்!
வேதம் சொன்ன வடிவிடை மின்னல்
மாதம் ஏழின் நடையினை வெல்லும்!

★

எந்தன் இதயம் உடனிரு தென்பால்
சொந்தம் புகழும் செங்கனி நெஞ்சம்
நந்தன் குழலை நிறுத்திய கண்டம்
சந்தம் சொரியும் செந்தமிழ்த் தென்றல்

★

கரும்பைக் குறுக்கி வில்லாய் வளைத்து
அரும்பும் மழலை, செவ்வாய் செதுக்கி!
அருந்தும் புனலில் துள்ளிக்குதிக்கும்
சிறுமீன் இரண்டை நாசி தடுக்கும்...!

★

வான வில்லிற் கருமை திணிந்து
ஞான நெற்றிப் புருவம் ஒளிரும்...!
கானம் காற்றில் புனையுங் கூந்தல்
மோனந் தன்னில் வதனந் தீண்டும்...!

★

பூவோ; புவியின் மாதோ! எனவே
காவோ டுரசும் வேலை மருவி
பாவோ டவளைப் பாடிப் பறித்தேன்
'போவோம் மனையில்' பாதை புகன்றாள்.

—மாவை வரோதயன்

## பொது அறிவுப்போட்டி இல. 22

1. ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்குவது? ... ... ... நவம்பர்/டிசம்பர்
2. ஏரி நாடு என்பர்? ... ... ... ... ... ... ... ... ஹவாய்/பின்லாந்து
3. யானையின் கர்ப்ப காலம்? ... ... ... ... ... ... 645 நாள் / 360 நாள்
4. மனச் சோர்வுக்குக் காரணம்? ... ... ... ... ... ... தோல்வி / துன்பம்
5. 'லீப்' வருஷம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை? 4 ஆண்டுகள் / 6ஆண்டுகள்
6. பெண்ணுக்கு வேண்டியது? ... ... ... ... ... ... அழகு / அறிவு
7. வாழ்வு மலர்வது? ... ... ... ... ... ... ... அன்பினால் / அறிவினால்
8. இதனால் தான் பிரச்சினை? ... ... ... ... ... ... ... பணம் / சினம்
9. 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ? ... ... காக்டஸ்பூ / குறிஞ்சிப்பூ
10. ஆயிரம் கண்ணுடையவன் ... ... ... .. ... ... சந்திரன் / இந்திரன்
11. இதற்கும் மலரும் தன்மை உண்டு? ... ... ... ... ... மலர் / மனம்
12. சினிமாத் தியேட்டர் இல்லாத நாடு? ... ... ... ... அரேபியா / ஈரான்

பெயர்:- ..............................
விலாசம்:- ..............................
..............................

பொது அறிவுப்போட்டி இல: 22
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.............................. இங்கே வெட்டுக ..............................

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 12 - 04 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

# நல்ல செயல்களே நம்மை வழி நடத்தும்!

மனிதனது உள்ளத்தில் ஒரு தசைப் பிண்டமுண்டு. அது கெட்டுவிட்டால் மனிதன் கெட்டுவிடுகின்றான். அது நல்ல நிலையில் சீர்பட்டிருந்தால் மனிதனும் நல்லவனாகிவிடுகின்றான்.

மனிதன் இரண்டுவகையில் பாவங்கள் செய்துகொண்டிருக்கின்றான்.

ஒன்று, மறைமுகமாக எவருக்கும் தெரியாதபடி செய்கின்றான். மற்றது வேண்டுமென்றே செய்கின்றான்.

இதில் வேண்டுமென்று செய்கின்ற பாவங்களுக்கு மக்களே சாட்சியாளர்களாக இருப்பர். மறைமுகமாக யாரும் அறியாத முறையில் செய்கின்ற பாவங்களுக்கு இறைவனிடம் மறுமையில் பல வேதனைகள் உண்டு.



அல்லாஹ் த ஆலா மறுமையில் எல்லோரையும் எழுப்பி கேள்விக்கணக்குக் கேட்டு இறுதியாக பாவம் செய்த மனிதன் கொண்டு வரப்படுவான்.

**- ஏ. எம். நஸீரா என் ஸனீஹா -**

அம் மனிதன் அதிகமான இரகசியமான பாவங்கள் செய்தவன். இவனது செயலேட்டை அவனுக்கு முன்னால் வைக்கப்பட்டு, பின்னர் அவனிடம் கேட்கப்படும்.

இச்செயலேட்டில் எழுதப்பட்டவைகளில் ஏதாவது பிழைகள் உண்டா? அல்லது மலக்குகள் தவருக எதனையும் எழுதியுள்ளார்களா?

இப்போது இம் மனிதன் அதில் நிறைந்துள்ள பாவங்களைப் பார்த்துவிட்டு இப் பாவங்களெல்லாம் நான் செய்யவில்லையே! என உறுதி கூறுவான்—

அப்போது அல்லாஹ் அம் மனிதனை நோக்கி இவைகளுக்குரிய சாட்சியாளர்களை நான் அழைக்கட்டுமா? என்று கேட்பார்.

அம்மனிதன் அக்கம்பக்கமெல்லாம் பார்ப்பான். எவருமே இருக்கமாட்டார்கள், இப்போது கூறுவான், சரி உங்களுடைய சாட்சியாளர்களை அழைத்து வாருங்கள்.

அப்போது அல்லாஹ் அவனது வாய்களுக்கு முத்திரை இட்டுவிடுவார். அவனது கைகள் பேச ஆரம்பிக்கும், கால்கள் இரண்டும் சாட்சியம்கூறும்.

இதனைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றார்.

அன்றைய தினம் நாம் அவர்களது வாய்களில் முத்திரையிட்டு விடுவோம், அவர்களின் கைகள் நம்மிடம் பேசும், அவர்கள் செய்து கொண்டிருந்த பாவமான செயல்கள் பற்றி அவர்களின் கால்களும் சாட்சிகூறும். எனவே நாம் எப்படி மறைமுகமாகப் பாவம் செய்தாலும் மறுமை நாளில் எமது உடலுறுப்புக்கள் அப்பாவங்களை நிரூபித்துவிடும்'

மேலும் ஒரு இறைவசனம் கூறுகின்றது.

அல்லாஹ்வின் விரோதிகளை நரகின்பால் ஓட்டப்படும் நாளில் (அதன் சமீபமாக வந்து) அவர்கள் (விசாரணைக்காக நல்லோரிலிருந்து) பிரித்து நிறுத்தப்படுவார்கள். அதன் சமீபமாக வந்ததும் பாவம் செய்த அவர்களுக்கு விரோதமாக அவர்களுடைய செவிகளும், கண்களும், அவர்களது மாமிசத் தோல்களும், அவைகள் செய்தவைகள் பற்றி சாட்சிகூறும். எனவே நாம் பகிரங்கமான, இரகசியமான பாவங்கள் செய்வதை விட்டும் தவிர்ந்து நல்ல செயல்கள் புரிந்து நன்மை பெறுவோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய நிலா

என்
இதய வானத்து நிலாவென
நீ தோன்றிய பின்
வேறு எந்த
நட்சத்திரத்தையும்
பார்க்க...
என் மனம்
இடமளிக்கவில்லை...!
நீ...!
வரும் வரை என்
இதய வானம்
அமாவாசையாக
இருந்தாலும்
இருக்குமே யொழிய...வேறு
எந்த நட்சத்திரத்துக்கும்
இடமளிக்காது...!
ஆயிரம் நட்சத்திரங்கள் —
சேர்ந்தாலும்
என் நிலாவுக்கு
ஈடாகுமா......?

- தாவடியூர் நித்தி

## "நினைவுச்சுமை"

என் ஜீவனே...!
கர்த்தர்
பலரது பாவங்களை
சிலுவையாகச் சுமந்தார்...!
நானோ...
உனது நினைவுகளை
சிலுவையாகச்சுமக்கிறேன்!

- கே. தாஸ்

## அடையாளம்

கள்வனே!
அன்று...
உன்னை நான்
வானத்தில் – ஒரே
நிலவாகக் கண்டேன்
இன்றும்
என்
இதயத்தில் இருக்கிறாய்!
ஆனால்...
நீ பார்த்த
அத்தனை
விண்மீன் கூட்டங்களில்
என்னை – எங்கே
அடையாளம்
தெரியப்போகிறது உனக்கு?

- வண்ணை சாந்தி

# நெடுந்தீவைப் பொருளாதார ரீதியில் பாதித்த ஒல்லாந்தரின் குதிரை வளர்ப்பு மோகம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தென்மேற்கே 22 மைல் தொலைவில் அமைந்துள்ளது நெடுந்தீவு. சூழவர சற்று உயர்வான நிலப்பகுதிகளையும் மத்தியபகுதியில் தாழ்நிலத்தையும் கொண்ட ஓர் சாய்சதுர வடிவான தீவு இது.

37.41 சதுரமைல்கள் பரப்பினையுடைய இதன் தற்போதைய குடித்தொகை 5608 பேராகும். 1946 இல் இருந்து இதன் குடித்தொகைப் போக்கு பின்வருமாறு:-

| ஆண்டு | குடித்தொகை |
|---|---|
| 1946 | 6338 |
| 1953 | 5987 |
| 1971 | 5607 |
| 1981 | 5608 |

குடித்தொகை இங்கு வீழ்ச்சியடைந்து செல்வதற்கு குடிவெளியகல்வே முக்கிய காரணமாகும். இதற்கு இங்குள்ள பௌதீக, பொருளாதார நிலைமைகள் மனித வாழ்க்கைக்குச் சாதகமாக அமையாத தன்மையே காரணங்களெனலாம்.

**பிரதேச அபிவிருத்தி:**
**நெடுந்திவு - பிரச்சினைகளும் தீர்வுகளும்**

அந்நியராட்சிக்கு முன் செழிப்பான பூமியாக இருந்த நெடுந்தீவினை ஆரம்பகாலத்தில் இந்தியர் சேனைப்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமாகத் தெரிந்தெடுத்தனர். சிலர் இங்கேயே நிரந்தரமாக வாழவும் முற்பட்டனர்.

இவர்களுக்கு உதவுமுகமாக இந்தியாவில் இருந்த உறவினர்கள் நீர்ப்பாசன முறைகளையும் அமைத்துக் கொடுத்திருந்தனர். மத்தியபகுதியில் பாரிய ஏரிகள் காணப்படும் தன்மை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் நெடுந்தீவுக்கு வந்தபோது, தமது நாட்டினை ஒத்ததாக சூழவர உயர்நிலமாகவும் உட்பகுதி சற்றுத் தாழ்ந்தும் காணப்பட்டமையால் 'டெல்ப்ற்' (Delft) எனப் பெயரிட்டனர்.

குதிரை வளர்ப்பிற்கு ஏற்ற புல்நிலங்களைக் கொண்டு காணப்பட்ட போதிலும்' மழைகாலத்தில் தீவின் மத்திய பகுதியில் நீர் தேங்கி நிற்பது குதிரைகட்கு அசௌகரியத்தைக் கொடுத்தமையால் கடலுடன் இணைத்த வெள்ள வாய்க்கால்களை வெட்டியிருந்தனர்.

நாட்டின் நிர்வாக வசதிக்காகவும். குதிரை வளர்ப்பினை மேற்பார்வை செய்யவும், உல்லாசமாகப் படகுகளைப் பாவிக்கவும் இக்கால்வாய்களைப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தினர். கடலுடன் இணைத்து இரும்புத்துரிசில்களை அமைத்துத் தேவையான போது திறந்து, மூட ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் இத்துரிசில்கள் கவனிப்பாரற்றுப் பழுதடைய, கடல் நீர் உட்புகுந்து, ஏரிகளையும் கால்வாய்களையும் உவர்த்தன்மை அடையச் செய்தது.

அந்நியராட்சி நடவடிக்கைகளே நெடுந்தீவை ஓர் வரண்ட பூமியாக்கியதுடன் விவசாயத்திற்கோ, ஏனைய மக்கள் நடவடிக்கைகட்கோ சாத்தியமற்றதாக்கியது. எனினும் இலங்கை சுதந்திரம் அடைந்து 40 வருடங்களாகியும் இத்தீவின் நிலைமையில் எந்தவித மாற்றமும் ஏற்படாதது கவலைக்குரியதே.

எந்த ஒரு பெரிய நாட்டிலோ அல்லது சிறிய நாட்டிலோ இத்தகைய பிரதேச

**செல்வி. ஏ. ஜி. திசராஜா** பி. ஏ., எம். எஸ்ஸி.

வேறுபாடுகள் காணப்படுவதும் இதன் காரணமாக இப்பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணமாகத் தமிழ்நாட்டில் தஞ்சாவூர்ப்பகுதி விவசாயத்தில் சிறந்து காணப்பட சற்று தெற்கே இராமநாதபுர மாவட்டம் வரட்சியின் பிடியில் இருந்து வெளியேற முயற்சிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனினும் பொருளாதார நிலையில் அபிவிருத்தியடைந்த எந்த ஒரு நாடும் தமது நாட்டின் எந்த ஒரு பிரதேசமும் பொருளாதார ரீதியில் பின்தங்கியோ, குறைந்த அபிவிருத்தியடைந்த பகுதியாகவோ தொடர்ந்தும் நிலைத்திருக்க விடுவதில்லை.

உதாரணமாக இந்தியாவில் கர்னடக அரசு விவசாய தேவைக்காக காவேரி நீரைப் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தமிழ்நாட்டிற்குத் திறந்துவிட இணங்கியிருப்பதைக் கூறலாம்.

பிரதேச அபிவிருத்தி என்பது பிரதேச உற்பத்தியில் (வெளியீடு) அல்லது உண்மை வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவால் ஏற்படும் செயல்முறை என வரையறுக்கப்படுகின்றது.

ஒரே நாட்டில் உள்ள வேறுபட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் சமமின்மை காணப்படும்போது; இந்நிலைமைகள் சில பிரதேசங்களை பின் தங்கிய அல்லது குறை அபிவிருத்தியடைந்த பிரதேச நிலைக்குத் தள்ளுகின்றன.

இதன் அடிப்படையில் நெடுந்தீவின் பின்தங்கிய தன்மைக்கான காரணங்களையும் அதற்கான தீவுகளையும் நோக்குவோம்.

1. இட அமைவின் பாதக நிலைமைகள் 2. மூலவளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தாமை 3. அத்தியாவசிய சேவைகளில் பற்றுக்குறை என்பனவே பின்தங்கிய நிலைமைக்குக் காரணங்களாகும்.

### 1. இட அமைவின் பாதக நிலைமைகள்:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ளதுடன் (28 மைல் நீளமான கடற்பாதை) கடலினுல் சூழப்பட்டிருப்பதும் யாழ்ப்பாணத்திலிருந்து இத்தீவுக்கான போக்குவரத்தினைக் கடினமாக்கியுள்ளது.

1937 இற்குப் பின்னரே பயணிகள் போக்குவரத்திற்கான இயந்திரப் படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும் இப்போக்குவரத்துச் சேவை காலத்திற்குக் காலம் பல்வேறு காரணிகளினுல் குறிப்பாக; காலநிலை, எரிபொருள் பற்றுக்குறை, பாதுகாப்பு நடவடிக்கைகளினுல் சீர்குலைக்கப்படுகின்றது, தற்போது ஒரேயொரு படகு மட்டுமே ஒன்றுவிட்டு ஒரு நாள் சேவையில் ஈடுபடுகின்றது.

### 2. மூலவளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமை

இங்குள்ள வளங்களை நிலவளம், நீர்வளம் என இரண்டாகப் பாகுபடுத்தலாம். நிலவளத்துள் சுண்ணக்கல், பனைவளம் என்பன குறிப்பிடத்தக்கவை.

## தாயகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுண்ணக்கற்கள் மேற்பரப்பிற்குச் சில அடி ஆழத்தில் காணப்பட நெடுந்தீவில் இது எங்கும் வெளியரும்பி இருப்பதை அவதானிக்கலாம்.

இவற்றை சீமெந்துத் தேவைக்குப் பயன்படுத்த முடியும். அகழ்ந்து எடுப்பதன் மூலம் கடல்நீர் உட்புக வழி வகுக்கும் என்பது சிலரது கருத்து ஆனால் தீவெங்கணும் வெளியரும்பியும் சிதறியும் காணப்படும் கற்கள் நாட்டின் சில வருட தேவைக்குப் போதுமானது என்று கருதப்படுகின்றது.

யாழ்ப்பாண சுண்ணக் கல்லைக் கொண்டு காலியில் சீமெந்துத் தொழிற்சாலை அமைக்க முடியுமெனில், முயற்சி எடுப்பின் நெடுந்தீவில் இது இன்னும் இலகுவாகக் கைகூடும் எனலாம்.

கற்பகதரு எனப்படும் பனைமரமானது நெடுந்திவு எங்கணும் அதிகளவில் காணப்பட்ட போதிலும் இவற்றில் இருந்து முழுப்பயனும் பெறப்படுவதில்லை என்றே கூற வேண்டும். பனை ஓலையினைப் பயன்படுத்திப் பாய், கடகம் என்பவற்றை இழைத்துத் தமது வருமானத்திற்குப் போதுமானமட்டும் முயற்சி எடுக்கப்படுகின்றதேயன்றி ஒரு பெரியளவிலான தொழிலாக வளர்ச்சிபெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் மூலம் இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்து சமுத்திரத்தினுல் சூழப்பட்ட இத்தீவில் கடற்திரவியங்களை ஏராளமாகப பெறக்கூடியதாக இருந்த போதிலும் அவற்றைப் பயன்படுத்தாமை குறைபாடாகும். நெடுந்தீவின் இருபருவ காலங்களிலும் மீன்பிடிக்கக் கூடிய வசதி இருந்த போதிலும் போதுமான இயந்திரப் படகுகள் நவீன மீன்பிடி உபகரணங்கள், ஆழ்கடல் மீன் பிடியில் போதிய அனுபவம், சுகாதார வசதியுடைய வாழ்விடமின்மை என்பன மீன்பிடியைப் பாதிக்கும் காரணிகளாக உள்ளன.

இதனைவிடக் கடற்பாசிகளை உணவுத்தேவைக்காகத் தகரத்தில் அடைத்து ஏற்றுமதி செய்யும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

கடற்திரவியங்களான சிப்பி, சங்குகளைக் கொண்டு தென்னிலங்கைக்கரையோரங்களில் கைவினைப் பொருள்கள் உருவாக்கப்பட்டு உள்ளூர் வசதிகட்கு மட்டுமன்றி, உல்லாசப் பயணிகட்கும் உயர் விலைக்கு விற்கப்படுகின்றது. இவ்வாறுன கைவினைக் கைத்தொழில்களில் கவனம் செலுத்துவன் மூலம் உச்ச வருவாய் பெறப்படலாம். ★

# வேகப் பந்து வீச்சில் பிரகாசித்த முதலாவது இந்திய வீரர் கபில்

சகலகலா வல்லவரான கபில்தேவ் பந்து வீசுவதையும் அடித்து ஆடுவதையும் பார்ப்பதே தனி அழகுதான்.

1980 ஆம் ஆண்டு முதல் உலகின் தலைசிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவர் என்ற பெருமையை தக்கவைத்துக் கொண்டுள்ளவர். இவரைப் போல் வேகப்பந்து வீச்சாளர் இந்திய அணியில் வேறு யாரும் இல்லை என்று கூறலாம்.

6அடி உயரத்துடன் வேகம், மிதவேகம் என்று பந்துகளை வீசுவதில் வல்லவர்.

20 கெஜ தூரம் ஓடி வந்து வீசியபின் மீண்டும் தன் இடத்துக்கு இவர் திரும்பி மெதுவாக நடந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இப்போது 20 கெஜ தூரத்தையும் 13 கெஜங்களாக இவர் குறைத்துக்கொண்டுள்ளார். வெகு இயல்பாக பந்து வீசக்கூடியவர்.

அரியானுவில் 1959 இல் பிறந்தவர். 1975–76 இல் பஞ்சாப் அணியை எதிர்த்து ஹரியாஞ அணிக்காக ஆடிய போது முதல் இனிங்ஸிலேயே 39 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினுர். 1976–77 இல் வங்காள அணியை எதிர்த்து 20 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை சுருட்டியவர்.

1978–79 இல் பாகிஸ்தானுக்கு எதிராக ஆடியபோது தான் இவரது பந்து வீசும் திறமை முழுவதும் வெளிப்பட்டது.

இதையும் மிஞ்சும் வகையில் மேற்கிந்திய அணியை எதிர்த்து 6 டெஸ்ட் போட்டிகளில் 17 விக்கெட்டுக்களை வீழ்த்தினுர். 65.80 ஓட்டங்கள் என்ற சராசரி கணக்கில் 329 ஓட்டங்களைக் குவித்தார். இதில் டில்லியில் நடந்த டெஸ்ட்டின்போது எடுத்த 126 ஓட்டங்களும் அடங்கும். சென்னை டெஸ்ட்டின்போது வேகமான பிட்ச் இல்லாதபோதிலும் 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்று வீழ்த்தியவர்.

இங்கிலாந்து பயணத்தின் போது (1979) நார்த்தாம்ப்டன் ஷயர் அணியுடன் மோதி 74 நிமிடங்களில் சதம் அடித்து சாதனை படைத்தார். அப்போது கலந்து கொண்ட 4 டெஸ்ட்டுக்களிலும் இவரது அபாயகரமான பந்துவீச்சு எதிர் அணியினருக்குப் பயத்தைத் தந்தது. எட்ஜ்போஸ்டனில் ஆடிய போது இங்கிலாந்து 5 விக்கெட் இழப்புக்கு 633 ஓட்டங்களை அடித்து ஆட்டத்



தினை முடித்தது. இந்த 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியவர் கபில்தேவ். 48 ஓவர்களில் 146 ஓட்டங்களை மட்டுமே தந்து இந்த 5 விக்கெட்டுகளை எடுத்தார்.

இந்தியா திரும்பியபின் 1979–80 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவுடன் ஆடிய போது 22 சராசரி ஓட்டங்களுக்கு 28 விக்கெட்டுகளை சரித்தார். இதே காலத்தில் பாகிஸ்தானின் 28 விக்கெட்டுகளையும் (21) கைப்பற்றினுர்.

25 ஆவது டெஸ்ட்டின் போது இவருக்கு வயது சரியாக 21 ஆண்டுகள் 27 நாள்.

உலக அளவில் இந்த குறைந்த வயதில் வேறு எந்த ஆட்டக்காரரும் சாதிக்காத வகையில் ஆயிரம் ஓட்டங்களையும் அடித்தும் காட்டியிருக்கிறுர். 100 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையையும் அப்போது தான் பெற்றுர்.

டெஸ்ட் சரித்திரத்தில் 300 விக்கெட்டுகளுக்குமேல் வீழ்த்தியவர்களின் பட்டியலில் இதுவரை கபில்தேவ் உட்பட 8 பேர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர்.

92 டெஸ்ட்டுகளில் 319 விக்கெட்டுகளை சரித்துள்ளார்.

1981–82இல் இங்கிலாந்தை எதிர்த்து இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நடந்த டெஸ்ட் போட்டிகளின் போது கபில்தேவின் கை மிகவும் ஓங்கி இருந்தது.

இங்கிலாந்தில் அவர் ஆடிய ஆட்டமும் காட்டிய வேகமும் காண்பவர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

இந்தத் தொடரில் இவர் அடித்த ஓட்டங்கள் 41, 89, 65, 97 லோர்ட்ஸில் நடந்த போட்டியின் போது இங்கிலாந்தின் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருக்கிறுர்.

இந்தியாவின் காப்டன் என்ற முறையில் லோர்ட்ஸில் அவர் நிகழ்த்திய இரண்டு சாதனைகளை மறக்க முடியாது.

1983 – ஆம் ஆண்டு திரும்பவும் இங்கிலாந்தில் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா கலந்து கொண்டபோது இறுதிச் சுற்றுக்கு இந்தியா வர வாய்ப்பு இல்லை என்று கருதப்பட்டது. ஆனுல் அனைவரையும் அசர வைக்கும் வகையில் மேற்கு இந்திய அணியை வீழ்த்தி உலகக் கோப்பையை தட்டிப் பறித்தார் கபில்.

சிம்பாப்வே அணியுடன் டன் பிரிட்ஜ்வெல்ஸில் மோதிய போது இந்திய அணியின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறுர் கபில்.

ஒரு கட்டத்தில் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து இந்தியா தவித்தது. இது மேலும் சரிந்து 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள் பறிபோனது. 7 விக்கெட் இழப்புக்கு 78 ஓட்டங்கள் என்ற கேவலமான நிலையை இந்திய அணி [illegible] 175 ஓட்டங்களைக் [illegible] ஆகாமல் நின்று இந்திய அணியின் தன்மானத்தைத் தலை நிமிரச் செய்தார்.

மேற்கிந்திய அணியிடம் பல தோல்விகளை சந்தித்ததால் மூன்று ஆண்டுகளுக்குப் பின் ரசிகர்களைப் பெருமளவு ஏமாற்றும் வகையில் அவரது தலைமைப்பதவி தட்டிப் பறிக்கப்பட்டது.

1986–ல் லோர்ட்ஸுக்குத் திரும்பிய கபில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் வெற்றியை ஈட்டித் தந்தார். இதைத் தொடர்ந்து ஹெடிங்லியில் நடந்த டெஸ்ட்டிலும் வென்று மூன்றுக்கு இரண்டு என்ற தொடர் கணக்கில் வெற்றி கிட்டியது.

ஆனுல் காலநிலை சரியில்லாத காரணத்தால் ஆஸ்திரேலியாவில் இந்தியா வெற்றியைப் பெற இயலவில்லை. இருப்பினும் அடிலெய்டில் அப்போதைய முதல் இன்னிங்ஸில் 106 ரன்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தினுர் கபில். இதைத் தொடர்ந்து பந்து வீச்சில் இவரது சாதனையும் தொடர்ந்தது.

1983–84–ல் மேற்கிந்தியத் தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடந்தது. 83 ரன்களில் 9 விக்கெட்டுகளைச் சுருட்டினுர். இந்த டெஸ்ட் தொடரில் இவர் எடுத்த மொத்த விக்கெட்டுகள் 29.

பலம் பொருந்திய மேற்கு இந்தியத் தீவு அணியுடன் 1982–83–ல் கிங்ஸ்டனில் ஆடிய போது 45–க்கு 4 விக்கெட்டுகளையும், 73–க்கு 4 விக்கெட்டுகளையும் சரித்தார். போர்ட் ஆப் ஸ்பெயினில் 100 ரன்கள் அடித்து அவுட் ஆகாமலும் ஆண்டிகுவாவில் 98 ரன்களைக் குவித்தும் சாதனைப் பட்டியலை விரிவு படுத்தினுர்.

ஒரு கட்டத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 200 விக்கெட்டுகளை வீழ்த்தி 3000 ரன்கள் ஈட்டிய மூன்று வீரர்களில் ஒருவர் என்ற பெருமையையும் கபில் படைத்திருந்தார்.

இதற்குப் பின்னர் இது வரை அவர் படைத்த சாதனைகளும் இந்திய கிரிக்கெட்டிற்கு அவர் ஆற்றிய சேவைகளும் எளிதில் மறக்கக் கூடியது அல்ல. ★

உலக விளையாட்டு

ஆங்கிலத்தில் பேச வேண்டும்
என்ற விருப்பம்
ஆனுல்
தவருகப் பேசிவிடுவோமோ
என்ற தயக்கம்

இதுதானே உங்கள் பிரச்சினே?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது.

இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது
WRITTEN ENGLISH

ஆனுல் நடைமுறையில் நாம் பிறரிடம்
உரையாடத் தேவைப்படுவது
SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் தான் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்

இதனைக் கருத்திற்கொண்டு
BRIGHT TRAINING CENTRE
நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிருர்கள்.

உளவியல் அடிப்படையில் மிக மிகப் புதுமையான முறையில்
SPOKEN ENGLISH
பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. BOX 162, C2/024 COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவிதமான
சாறிகள், சட்டைத்துணிகள்
கவுண்துணிகள்,
றெடிமேட் ஆடைகள், பிறசியர்கள்,
பன்சி சாதனங்கள், சேட் வகைகள்
சேட்துணிகள், சூட்டிங்
திருப்திகரமான சேவைக்கு
நாடுங்கள்
ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி.

சஞ்சீவி
சஞ்சிகை

ASIAN TEXTILES
Palaly Road, Thirunelvely.
We Specialize in all kinds of
Sarees & Blouse Materials
Shirts, Shirtings, Suiting
Dress Materials, Ready ma e
Garments and Fancy Goood s.

01 - 04 - 1989 சனிக்கிழமை

தமிழக சட்டசபை துகிலுரி சம்பவத்தை அடுத்து

# செல்வி ஜெயலலிதா எடுத்துள்ள வீரசபதம்

# மீண்டும் தேர்தல் போருக்கு வழிகோலுமா?

**12** ஆண்டு கால இடைவெளியின் பின்னர் கலைஞர் தனது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க ஆயத்தமாக அமர்ந்திருக்கிறார்.

சபாநாயகர் தமிழ்க் குடிமகன் சட்டசபைக் கூட்டத் தொடரை ஆரம்பிக்கும் முன்னர் திருக்குறள் ஒன்றைக்கூறி கருத்துச் சொன்னார்.

அதைத் தொடர்ந்து முதலமைச்சர் தனது வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கத் தயாரானார்.

வீடியோ கமராக்கள் அதனைப் படமாக்கத் தயாராகின. பத்திரிகை புகைப்படப் பிடிப்பாளர்களும் உஷாராகினர்.

அச்சமயத்தில் சில தினங்களுக்குமுன்னர் இடம்பெற்ற செல்வி ஜெயலலிதா இராஜினாமா விவகாரம் சம்பந்தமாக உரிமைப் பிரச்சினையை இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. குமரி அனந்தனும், செல்வி ஜெயலலிதாவும் எழுப்பினர்.

உடனே விவாதிக்க முடியாது என்று சபாநாயகர் அனுமதி மறுத்தார்.

அதைத் தொடர்ந்து எழுந்தது அமளி துமளி. ஆளை ஆள் அடித்துக்கொண்டார்கள்.

முதலமைச்சரின் மூக்குக் கண்ணாடி பறந்தது. தலைவி தலைவிரிகோலமானார்.

கோப்புக்கள் ஏவுகணைகளாயின. மைக்குகள் பிடுங்கி எறியப்பட்டன.

இவை எல்லாம் வானொலியில், பத்திரிகைகளில் வெளிவந்த தெரிந்த சங்கதிகள்.

திரைப்பட ஷூட்டிங்போல் இவை அனைத்தும் வீடியோ கமராவினால் படம்பிடிக்கப்பட்டன என்பது தெரியாத சங்கதி.

இந்த வீடியோப் படம் கலைஞரின் கையில் உள்ளது.

### ஆவேச பேச்சு

படத்தில் ஒரு கட்டம்: ஜெயலலிதா தலைவிரிகோலமாக ஆவேசத்துடன் நிற்கிறார்.

சக அ.தி.மு.க, எம்.எல். ஏக்களைப் பார்த்து ஆங்கிலத்தில் கத்துகிறார் ஜெயலலிதா.

'He is a Criminal. Punch him' — இதுதான் ஜெயலலிதாவின் ஆவேச உத்தரவு.

'தமிழில்' அவர் ஒரு கிரிமினல். முஷ்டியால் குத்துங்கள்' —என்பதே.

'He' என்று ஜெயலலிதா குறிப்பிட்டது கருணாநிதியையே.

இது ஒரு தரப்பு சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

மற்றத் தரப்பும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமைச்சர் ஒருவர் தன்னை மானபங்கப்படுத்த முயற்சித்தார் என்பது ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு.

ஜெயலலிதாவின் ஆவேச உத்தரவைப் படம் பிடித்த வீடியோ கமரா, அக்காட்சியையும் படம் பிடிக்காமலா இருந்திருக்கும்.

அது பற்றி இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

அமளிதுமளியின் போது எடுக்கப்பட்ட படங்களைப் பத்திரிகைகளில் வெளிவராமற் செய்வதற்கு சபாநாயகர் பெரும் முயற்சிகள் எடுத்தார்.

### அவசரக் கோலம்

ஜனவரி 21 இல் தி.மு.க ஆட்சியைப் பிடித்தது. 3 இல் 2 பங்கு பெரும்பான்மையுடன்


ராஜீவ்காந்தி

அரசு அமைக்கப்பட்டது.

மார்ச் 11 இல் இரண்டு இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்த இடைத்தேர்தல்களில் அ.தி.மு.கவின் அணிகள் ஒன்றாகி ஜெயலலிதா தலைமையில் போட்டியிட்டது.

மருங்காபுரி, மதுரை கிழக்குத் தொகுதிகளுக்கு ஜெயலலிதா போகாமலே வெற்றி அவரைத் தேடி வந்தது.

ஜனவரி தேர்தலில் தி.மு.க பெற்ற பெருவெற்றியைத் தொடர்ந்து, கலைஞர் எம். ஜி. ஆர் மீதான தாக்குதலை அவசரப்படுத்திவிட்டார். அதன் எதிரொலிதான் அ.தி.மு.கவின் இடைத்தேர்தல் வெற்றி என்று வாதிக்கப்படுகிறது.

எம். ஜி. ஆர் ஆட்சியில் ஊழல் இடம்பெற்றன என்பது உண்மைதான். ஆனால் அந்த ஊழலை அம்பலப்படுத்துவதில் கலைஞர் ஏன் அவசரம் காட்டினார்?

எம். ஜி. ஆர் நினைவு மண்டபம், சட்டசபையில் எம். ஜி. ஆர் படத்திரை நீக்கம் ஆகியவற்றை முன்னின்று நடத்தி விட்டுப் படிப்படியாக அம்பலப்படுத்தும் பணியில் இறங்கி இருக்கலாமே! இப்படி ஓர் அபிப்பிராயம்.

ஆட்சிக்கு வந்து சூட்டோடு சூடாக இவற்றைச் செய்யாவிட்டால் ஜெயலலிதா தலைமை மீண்டும் தமிழ்நாடு அரசியலில் செல்வாக்குப் பெற்றுவிடும்; சிலவேளை நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வுடன் காங்கிரஸ் கூட்டு வைத்துவிட்டால்... போபர்ஸ் ஊழலும் சாராய ஊழலும் ஒன்று சேர்ந்துவிட்டன என்று சொல்வதற்கு வசதியாக இருக்குமே — இப்படியும் ஒரு கருத்து.

இப்படி எண்ணிக்கொண்டு கலைஞர் எம். ஜி. ஆர். ஊழல்களை நடவடிக்கைகளை அம்பலப்படுத்தப்போக...

மருங்காபுரியும் மதுரை கிழக்கும் அவருக்கு தோல்வியைக் கொடுத்தன.

எங்கே துரும்பு கிடைக்கும் என்று காத்து இருந்த அ.தி.மு.க. ஜெயலலிதா அணியினர்— எம். ஜி. ஆர். மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துவிட்டனர், மதுரை கிழக்கு, மருங்காபுரி வாக்காளர்— என்று காரணம் காட்டினர்.

அ.தி.மு.க, வின் வெற்றி காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை என்கிறார் எம். ஜி. ஆர். பெயரில் புதிய கட்சி அமைத்த நடிகர் பாக்கியராஜ்.

### சசிகலா பிரேமா

இடைத்தேர்தல் தோல்விகள் கலைஞரை இன்னும் அவசரப்படுத்திவிட்டன போலும்! அதற்கேற்ற வகையில் ஜெயலலிதாவுக்கு உள்கட்சித் தகராறு ஏற்பட்டது.

ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகராக இயங்கிவந்தவர்கள் நடராஜனும் அவரது மனைவி சசிகலாவும்.

ஜெயலலிதாவுக்கும் அவர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டதாகவும் ஒரு கட்டத்தில் ஜெயலலிதா நடராஜனைச் செம்மையாகத் தாக்கி விட்டதாகவும் ஒரு செய்தி.

இதற்கெல்லாம் காரணம் ஜெயலலிதாவின் தோழியாக இருந்து பின்னர் ஒதுங்கிய பிரேமா என்ற பெண் மீண்டும் ஜெயலலிதாவுக்கு ஆலோசனை கூறத் தலைப்பட்டதுதான் என்று இன்னொரு செய்தி.

இப்படி செய்திக்கு மேல் செய்தியாக புதிய தகவல்கள் வெளியான நேரத்தில்தான் விரக்தியடைந்த நிலையில் ஜெயலலிதா பதவி விலகல், அரசியல் ஓய்வு சம்பந்தமான கடிதத்தை எழுதினார். பின்னர் மனம்மாறி தனது ஆலோசகர் நடராஜனிடம் கொடுத்தார்.

இந்த இரகசியம் வெளியானதைத் தொடர்ந்து பொலீஸார் நடராஜனின் வீட்டைச் சோதனையிட்டு கடிதத்தைக் கைப்பற்றியதும் அதன் பின்னர் நடந்தவையும் தெரிந்ததே!

கைதான நடராஜன் பிணையில் விடுவிக்கப்பட்டதும் செய்தியாளரைச் சந்தித்தார்.

'இராஜினாமாக் கடிதத்தை எரிக்கும்படி ஜெயலலிதா டெலிபோனில் சொன்னார். அவர் முன்னால் எரிக்கவேண்டும் என்பதற்காக கடிதத்தைப் பத்திரமாக வைத்து இருந்தேன்' —இப்படி நடராஜன் கூறினார்.

ஜெயலலிதாவின் இராஜினாமா ஒரு ஸ்டண்ட் என்று கலைஞர் வர்ணித்தார்.

எவ்வளவு காரணங்களைக் கூறினாலும், ஏன் இராஜினாமாச்


கருணாநிதி

செய்ய முன்வந்தார் என்பது ஜெயலலிதாவுக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

### ஜெயலலிதாவின் அவசரம்

இடைத்தேர்தல் வெற்றிகள் ஜெயலலிதாவை அவசரப்படுத்தின.

இரட்டை இலைச்சின்னத்திற்கான மௌசு அப்படியே இருப்பதைப் பயன்படுத்தி கோட்டையைப் பிடித்துவிடவேண்டுமே என்பதுதான் அந்த அவசரம்.

செல்வாக்கைக் கண்டாயிற்று; இனி எப்படி 5 ஆண்டுகள் பொறுப்பது? — இந்த எண்ணத்தில் எழுந்ததுதான் தி.மு.க அரசை டிஸ்மிஸ் செய்து சட்டசபையைக் கலையுங்கள் என்ற கோரிக்கை.

### கலைப்பது இலகுவானதா?

ஜானகி தலைமையிலான அ.தி.மு.க அரசு பதவி நீக்கஞ் செய்யப்பட்டதும் சட்டசபை கலைக்கப்பட்டதும் 1988 ஜனவரி கடைசியில் இடம் பெற்றது.

அதற்குக் காரணமாக அமைந்தது தமிழக சட்டசபையில் ஏற்பட்ட அமளிதுமளி.

அதேமாதிரி அமளிதுமளிதான் கடந்த சனிக்கிழமை சட்டசபையில் நடந்தது.

ஆனால் இம்முறையும் சட்டசபை கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புவது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகின்றதா? அல்லது ஆட்சியைப் பிடிக்கவேண்டும்; 5 ஆண்டுகள் பொறுக்கமுடியாது என்ற அவசரத்தைக் காட்டுகிறதா?

எம். ஜி. ஆரின் ஆட்சி 10 ஆண்டுகள் நடந்தது. அதன் இறுதிக் கட்டத்தில்தான் எம். ஜி. ஆர் மறைய, கட்சி பிளவுபட்டது. அதைத் தொடர்ந்து இடம்பெற்றது [illegible] ஜனவரி அமளி துமளி.

1989 மார்ச் அமளிதுமளி அப்படியானதல்ல. 12 ஆண்டு கால வனவாசத்தின் பின்னர் அமோக வெற்றியுடன் தி.மு.க, அரசு அமைத்த 2 மாதங்களில் வந்தது இது.

புதிய ஆட்சியில் இன்னும் ஊழல்கள் உருவாகவில்லை பழைய ஆட்சியின் ஊழல்களை அம்பலப்படுத்தும் சமயத்தில் வந்த அமளிதுமளியைக் காரணம் காட்டி ஆட்சியைக் கலைக்கச் சொல்ல முடியாது.

### 'இந்து' தலையங்கம்

மார்ச் 27 இல் வெளியான 'இந்து' நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில்—

தி.மு.க. அரசை 'டிஸ்மிஸ்' செய்து சட்டசபையைக் கலைக்க வேண்டும் என்ற அ.தி.மு.க. கோரிக்கை ஜனநாயகத்துக்கு விரோதமானதும். அற்பத்தனமுமானதும் இப்படியான கோரிக்கைக்கு மத்திய அரசு ஊக்கமளிக்கக் கூடாது'— என்று வர்ணித்துள்ளது.

ஆனால் கடந்த ஞாயிறு சென்னை வந்து ஜெயலலிதாவை மருத்துவமனை சென்று பார்வையிட்ட பின்னர் மத்திய அமைச்சர் தினேஷ்சிங் செய்தியாளர் மத்தியில் தெரிவித்த கருத்து சட்டசபை கலைப்பு கோரிக்கையை அற்பத்தனமானதாக மத்தியஅரசு கணிக்கவில்லை என்பதைப் புலப்படுத்துகிறது.

திரு. தினேஷ் சிங் கூறுகிறார்.

'ஒரு பெண் உறுப்பினரின் கண்ணியம், ஒரு முதலமைச்சர், சபாநாயகர் முன்னால் உதாசீனம் செய்யப்பட்ட நிகழ்ச்சி கவலை தருகிறது'—

சட்டசபையைக் கலைக்க வேண்டும் என்ற அ.தி.மு.க. வின் வேண்டுகோள் பற்றி மத்திய அமைச்சர் தினேஷ் சிங் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

'அரசுகளைப் பதவி கவிழ்ப்பது தான் காங்கிரஸின் வேலையல்ல. அரசியல் யாப்பின்படி நடக்கத் தவறும் அரசுகள் கலைக்கப்படத்தான்வேண்டும்.

'சட்டசபையில் ஆளை அடித்துக் கொல்வது, வன்செயலில் ஈடுபடுவது ஜனநாயக அரசியல் நடைமுறைக்கு முரணானது. தமிழ்நாடு அரசுஇதனைச் சரிப்படுத்த வேண்டும்'—

ஜெயலலிதா எடுத்துள்ள சபதமும்தமிழ்நாடுசட்டசபை அமளிதுமளி விஷயத்தில் ராஜீவ் அரசு அவசரப்படுவதையே காட்டுகிறது.

ஜெயலலிதாவின் சபதம் வருமாறு;

'திரு. கருணாநிதி முதலமைச்சராக இருக்கும் வரை, தி.மு.க. அரசு பதவியில் இருக்குவரை நான் தமிழ்நாடு சட்டசபைக்குள் கால்வைக்க மாட்டேன்'

— இவ்வளவு கடுமையான சபதம் ஒன்றை செல்வி ஜெயலலிதா எடுக்கக் காரணமாக இடம் பெற்றுவிட்ட அந்த பாரதூரமான சம்பவம் என்ன என்பதைப் பார்ப்போம்.

### துகிலுரி காட்சி

சனிக்கிழமை சட்டசபையில் இடம்பெற்ற அமளியை சபையை ஒத்திவைக்கும் முன்னர் சபாநாயகரும் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்தக்காட்சியை நாமும் மனக்கண்ணால் பார்த்தோமானால்......

கன்னத்தில் அறைவாங்கியதனால் மூக்குக் கண்ணாடியை இழந்த கலைஞரை சபையின் காவலர்களும் அரசு எம்.எல். ஏக்களும் சபாமண்டபத்தை விட்டு வெளியே அழைத்துச் செல்கின்றனர்.

தனது ஆசனத்தில் ஆடாமல் அசையாமல் காங்கிரஸ் தலைவர் மூப்பனார் நடப்பவற்றை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதாவும் தனது ஆசனத்தில் அமர்ந்தபடி தலையைப் பிடித்தபடி இருக்கிறார்.


ஜெயலலிதா

கண்ணீர் வழிந்தோடுகிறது.

சில நிமிடங்களில் சபாமண்டபத்தைவிட்டு வெளியேற ஜெயலலிதா முற்பட்டார். அதைத்தொடர்ந்து குழப்பம் ஏற்பட்டது.

அப்போது தி.மு.க அமைச்சர் ஒருவர் ஜெயலலிதாவின் சாறியைப்பிடித்து இழுக்கிறார். சாறி ஜெயலலிதாவின் தோள் பட்டையில் இருந்து விலகி முன்னே விழுகிறது.

அ.தி.மு.க எம்.எல்.ஏயான முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பாய்ந்துசென்று கீழேவிழுந்த சாறித்தலைப்பை எடுத்து போர்த்திக்கொள்ளும்படி ஜெயலலிதாவிடம் கொடுக்கிறார்.

இதைத்தொடர்ந்து ஜெயலலிதா சக அ.தி.மு.க எம். எல். ஏக்கள் சகிதம் சபாமண்டபத்தைவிட்டு வெளியேறுகிறார்.

அதன் பின்னர் அவர் நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாட்டில் தனது சபதத்தை வெளியிடுகிறார்.

### சபதம் நிறைவேற...

ராஜீவ் தனது உதவியாளர் மூலம் ஜெயலலிதாவின் சுகத்தை விசாரித்தார்.

எம். ஜி. ஆரின் மனைவி ஜானகி அம்மாள் நேரில் சென்று ஜெயலலிதாவின் சுகத்தை விசாரித்து ஆறுதல் கூறினார்.

எல்லாவற்றிற்கு மேலாக ஜெயலலிதா செய்தியாளர் மாநாட்டில் ''எதிர்க்கட்சிகளின் துணையுடன் தி.மு.க அரசைப் பதவி விலக்குவதே எனதுஇலட்சியம்'' என்கிறார்.

இது மத்திய அரசின் அவசரப் போக்கையே காட்டுகிறது.

தி.மு.க அரசு பதவிக்கு வந்து 2 மாதங்கள் முடிந்துவிட்ட நிலையில் ஜெயலலிதா சபதம் இட்டிருக்கிறார்.

இன்னும் 58 மாதங்கள் தி.மு.க அரசு பதவியில் இருக்க சட்டம் இடமளிக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் சட்டசபைத் தேர்தலில்தான் தி.மு.கவைத் தோற்கடித்து ஜெயலலிதா தனது சபதத்தை நிறைவேற்ற முடியும்!

சபதம் நிறைவேற 5 ஆண்டுகள் ஜெயலலிதா பொறுத்திருப்பாரா?

நாடாளுமன்றத் தேர்தல் டிசம்பரில் நடைபெறவேண்டும். இச்சமயத்தில் ராஜீவ் அரசு தமிழ்நாட்டு விஷயத்தில் தற்சமயம் காட்டி வரும் தீவிரம், ஜெயலலிதா தனது சபதத்தை நிறைவேற்ற 5 ஆண்டுகள் வரை காத்து இருக்க வேண்டியதில்லை என்பதையே உணர்த்துவதாக இருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அப்படியானால்......

திரௌபதியின் துகிலுரி சபதம பாரதப் போருக்கு கால்கோளாயிற்று — அதுபோல ஜெயலலிதாவின் சபதம் இந்திய நாடாளுமன்றத்தேர்தலுடன் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலைக் கொண்டு வருமா?

கலைஞரின் புதிய வியூகம் எப்படி அமையும் என்பதை பொறுத்தே எல்லாம் அமையும் என்று அவதானிகள் கருதுகின்றனர். ★

- தீபன்ராஜா -

## யதார்த்தம்

★ நன்மையின் நினைவில் கெடுதலை மறந்தோம்;வெற்றியின் கனவில் தோல்வியை மறந்தோம்; நிஜத்தின் பயத்தில் நிழலில் புகுந்தோம்.

★ உண்மையை நோக்கும் துணிவின்றி பொய்யின் மடியில் தஞ்சம் அடைந்தோம் அடைக்கல இருட்டில் சுழன்று உழன்று கோழை மனிதராய் வாழுகின்றோம்.

★ கொடையும், குணமும் பண்பும், காதலும் காலத்தின் கைகளில் காவியமாகலாம்... கடப்பவன் கைகளில்?

★ பசி முற்றினால் பிணமும் உணவே; வாழ்க்கையின் எல்லையை கண்ணோட்டம் எட்டினாலும், நம்பிக்கை வைப்பதே புத்திசாலித்தனம்!

க. பாலசுப்பிரமணியம்

## பொது அறிவுப் போட்டி இல: 21

**சரியான விடைகள்:**

1. துடிப்பு, 2. பீஷ்மர், 3. பசுமை, 4. மீன், 5. துருக்கி, 6. மௌனம், 7. கண்ணீர், 8. எறும்பு, 9. மழலை, 10. மனம், 11. மகாத்மா காந்தி, 12. நாவடக்கம்.

**பரிசு பெறுபவர்கள் விவரம்:**

**முதலாவது பரிசு பெறுபவர்:**
நிம்மியா சைரு தனபாலசிங்கம்,
625/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**இரண்டாவது பரிசு பெறுபவர்:**
ச. சுப்பிரமணியம்,
35/2, சிவகுருநாதர் லேன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

**மூன்றாவது பரிசு பெறுபவர்:**
த. விஜயானந்தன்,
71/16, நாச்சிமார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

உஷா
உன்னதமான தையலுக்கு

உஷா லிக் ஸாக் எக்ஸ்லா 55
● 55 டிசைன் அச்சுக்கள்
● பிக்கொட் விளிம்புத் தையல் ஊசி வழங்கப்படும்
● தன்னியக்க நெத்தி ஓட்டை
● தனி ஊசி ஓவர்லொக் தையல்
● அழகான ஸ்கலொப்ஸ்தையல்
● இரட்டை ஊசி வழங்கப்படும்
ரூபா 7,850/-
சகல பாகங்களும் உலோகத்தினால் செய்யப்பட்டுப் பிளேட் பண்ணப்பட்டவை, ஒரு வருட உத்தரவாதம் - தவணை முறையில் பணம் செலுத்தலாம்.
உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும் நாடு முழுவதிலும் விற்பனையாளர்கள் உண்டு.
உஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org